எங்கெல்ஸ்

# கூலி முறை



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# பிரெடெரிக் எங்கெல்ஸ்

# கூலி முறை

*The Labour Standard* பத்திரிகையிலிருந்து
எடுத்த கட்டுரைகள்

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

மாஸ்கோ • *1981*
முன்னேற்றப் பதிப்பகம்

மொழிபெயர்ப்பாளர்: அர். கே. கண்ணன்

விலை:

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம் 1981

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ఎ $\frac{10101-152}{014(01)-81}$ 803—81 0101010000

# பொருளடக்கம்

நேர்மையான நாள் வேலைக்கு நேர்மையான நாள் கூலி . . . . . . . . . . . 5

கூலி முறை . . . . . . . . . . . 10

தொழிற்சங்கங்கள் I . . . . . . . . . 15

தொழிற்சங்கங்கள் II . . . . . . . . . 21

பிரெஞ்சு வர்த்தக ஒப்பந்தம் . . . . . . 26

முன்மாதிரியான இரண்டு நகராட்சி மன்றங்கள். . . . . . . . . . . . 34

அமெரிக்க உணவும் நிலப் பிரச்சினையும் . . . 40

தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கக் கருத்துப்படி கூலி முறை . . . . . . . . . . 45

தொழிலாளர் கட்சி . . . . . . . . . 52

பிஸ்மார்க்கும் ஜெர்மன் தொழிலாளர் கட்சியும் 57

பருத்தியும் இரும்பும் . . . . . . . . 62

சமுதாய வர்க்கங்கள் — அவசியமானவையும் அவசியமற்றவையும் . . . . . . . . . 68

குறிப்புகள் . . . . . . . . . . . 74

பெயர் பட்டியல் . . . . . . . . . . 80

# நேர்மையான நாள் வேலைக்கு நேர்மையான நாள் கூலி[1]

இது சென்ற ஐம்பது ஆண்டுகளாக ஆங்கிலேயத் தொழிலாளர் இயக்கத்தின் முழக்கமாக இருந்து வருகிறது. கேடுகெட்ட சங்கத் தடைச் சட்டங்கள் 1824ல் ரத்து செய்யப்பட்ட பின்[2] தொழிற்சங்கங்கள் தோன்றி வளர்ந்த காலத்தில் இது நன்கு பயன்பட்டது; ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணியில் ஆங்கிலேயத் தொழிலாளர்கள் நடை போட்டு வந்த மேன்மையான சார்டிஸ்டு இயக்கக் காலத்தில்[3] இது மேலும் நன்ருகப் பயன்பட்டது. எனினும் காலம் முன்னேக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன், ஏன், முப்பது ஆண்டுகளுக்கு முன்னேகூட, விரும்பத்தக்கதாய் அவசியமானதாய் இருந்த எத்தனையோ விஷயங்கள் இன்று பழமைப்பட்டுப்போயுள்ளன, அவை இன்று முற்றிலும் பொருத்தமற்றவையாயிருக்கும். இந்தப் பழைய, மரபுச்சிறப்பெய்திய முழக்கமும் அவற்றில் சேருமா?

நேர்மையான நாள் வேலைக்கு நேர்மையான நாள் கூலியா? அப்படியென்ருல், நேர்மையான நாள் கூலி என்ன, நேர்மையான நாள் வேலை என்ன? நவீனகாலச் சமுதாயம் நிலை கொண்டு தன்னைத்தானே வளர்த்துக் கொள்வதற்கு ஆதாரமாயுள்ள விதிகள் அவற்றை எப்படி நிர்ணயிக்கின்றன? இந்தக் கேள்விக்கு விடை தருமாறு ஒழுக்க சாத்திரத்துக்கோ, நீதிச்சட்ட சாத்திரத்துக்கோ, மனிதாபிமான உணர்ச்சிக்கோ, நியாய உணர்ச்சிக்கோ, மற்றும் ஈகையுணர்ச்சிக்குங்கூட விண்ணப்பித்துக் கொள்ளக் கூடாது. ஒழுக்க சாத்திரப்படி நேர்மையாயிருப்பது,

சட்டப்படி நேர்மையாயிருப்பதுவுங்கூட, சமுதாயரீதியிலே எவ்வளவோ நேர்மையற்றதாயிருக்கக் கூடும். சமுதாய நேர்மையையோ நேர்மையின்மையையோ தீர்மானிப்பது ஒரேயொரு விஞ்ஞானந்தான்—உற்பத்தி, பரிமாற்றம் சம்பந்தப்பட்ட பொருளாயத உண்மைகளை எடுத்துக் கவனிக்கும் விஞ்ஞானமான அரசியல் பொருளாதாரம் எனும் விஞ்ஞானமேயாகும்.

நிற்க. அரசியல் பொருளாதாரம் எதை நேர்மையான நாள் கூலி என்றும் நேர்மையான நாள் வேலை என்றும் சொல்கிறது? பகிரங்கமான சந்தையிலே முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையேயுள்ள போட்டியால் நிர்ணயிக்கப்படுகிற கூலி விகிதமும், நாள் வேலையின் நேரமும் கடுமையும் மட்டுந்தான். அப்படி நிர்ணயிக்கப்படுகிற பொழுது அவை என்னவாக உள்ளன?

சாதாரண நிலைமைகளில் நேர்மையான நாள் கூலி என்பது தொழிலாளியின் நிலையையும் நாட்டையும் பொருத்துள்ள வாழ்க்கைத் தரத்தின்படி தன்னை வேலை செய்யும் ஒழுங்கில் வைத்துக் கொள்வதற்கும் தன் இனத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும் அவசியமான பிழைப்புச் சாதனங்களைப் பெற்றுத் தருவதற்கு வேண்டிய தொகையே ஆகும். வாணிகத்தின் ஏற்ற இறக்கங்களையொட்டி நடப்பிலுள்ள கூலி விகிதம் இந்த விகிதத்தை விட சில சமயங்களில் மேலாகவோ சில சமயங்களில் கீழாகவோ இருக்கக் கூடும். எனினும், சாதாரண நிலைமைகளில் அந்த விகிதமானது எல்லா ஏற்ற இறக்கங்களின் சராசரியாக இருக்க வேண்டும்.

நேர்மையான நாள் வேலை என்பது தொழிலாளியின் ஒரு நாளத்திய முழு உழைப்புச் சக்தியைச் செல்வழிக்கிறதாயுள்ள வேலை நாளின் நேரமும் அசல் வேலையின் கடுமையுமாகும்—அவை அந்தத் தொழிலாளி அதே அளவுள்ள வேலையை அடுத்த நாளிலோ அதற்கடுத்த நாட்களிலோ செய்வதற்கான திறத்தைப் பாதிக்காதபடி இருப்பவை.

எனவே, இந்தப் பேரத்தை இப்படி வர்ணிக்கலாம்: தொழிலாளி தன்னுடைய முழு நாளத்திய உழைப்புச் சக்தியை முதலாளிக்குக் கொடுக்கிறான்; அதாவது, இந்தப்

பேரத்தைத் தொடர்ச்சியாகத் திரும்பத் திரும்ப செய்து கொள்வது சாத்தியமற்றுப் போகாதபடி எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவுக்குக் கொடுக்கிருன். இதற்குப் பரிமாற்றமாக, இதே பேரத்தை ஒவ்வொரு நாளும் திரும்பத் திரும்பச் செய்து வருவதை நிலைநிறுத்துவதற்குரிய பிழைப்புச் சாதனங்கள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு மட்டுமே பெறுகிருன், அதற்கு மேல் இல்லை. பேரத்தின் தன்மை அனுமதிக்கிறதற்கேற்ப தொழிலாளி அதிகமாகவும் முதலாளி குறைவாகவும் கொடுக்கிருன். இது மிகவும் வேடிக்கையான நேர்மைதான்.

விஷயத்தை மேலும் சற்று ஆழமாகப் பார்ப்போம். அரசியல் பொருளாதாரவாதிகள் சொல்கிறபடி கூலியையும் வேலை நாட்களையும் போட்டி நிர்ணயிக்கிறதினுல் இரு தரப்பினரும் சமநிலையில் நின்று பேரம் பேசத் தொடங்குவதுதான் நேர்மையாயிருக்கும் அல்லவா? ஆனுல் விஷயம் அப்படி இல்லை. முதலாளி தொழிலாளியுடன் ஒத்துப் போக முடியாவிட்டால் காத்திருக்கமுடியும், தன் மூலதனத்தைக் கொண்டு பிழைத்துவரமுடியும். ஆனுல் தொழிலாளிக்கு அப்படிக் காத்திருக்க முடியாது. கூலி கிடைத்தால்தான் அவனுல் பிழைத்திருக்க முடியும். ஆகவே எப்போது, எங்கே, எந்த ஷரத்துகளின்படி வேலை கிடைக்கிறதோ அந்த வேலையை ஒப்புக்கொண்டு தீர வேண்டும். பேரத்தில் தொழிலாளிக்குச் சமநிலை இல்லை. பசி என்னும் பயங்கரமான கட்டு அவனைக் கட்டிப்போடுகிறது. என்றபோதிலும், முதலாளி வர்க்கத்தின் அரசியல் பொருளாதாரத்தின்படி அதுதான் உன்னதமான நேர்மையாம்.

எனினும் இது அற்ப விஷயமே. புதிய தொழில்களிலே இயந்திரவகை ஆற்றலையும் இயந்திரங்களையும் பயன்படுத்துவதினுலும், ஏற்கெனவே இயந்திரங்களின் கீழ் வைக்கப்பட்டுள்ள தொழில்களில் இயந்திரங்களை விரிவுபடுத்துவதினுலும் மேம்படுத்துவதினுலும் தொழிலாளிகள் மேன்மேலும் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிடுகிருர்கள். நீக்கப்பட்ட தொழிலாளிகள் எந்த வேகத்தில் நாட்டின் பட்டறைத் தொழில்களில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட முடிகிற அதை விட அதிகமான வேகத்தில் இந்த வேலை நீக்கம் நிகழ்கிறது. நீக்கப்பட்ட தொழிலாளிகள் மூலத

னம் பயன்படுத்திக் கொள்வதற்கு உண்மையிலே ஒரு தொழில்துறைச் சேமப் பட்டாளமாக ஆகிறார்கள். தொழில் மோசமான தசையில் இருந்தால் அவர்கள் பட்டினி கிடக்கலாம், பிச்சையெடுக்கலாம், திருடிப்பிழைக்கலாம், அல்லது வேலைவிடுதிக்குப்[4] போகலாம். தொழில் நல்ல தசையில் இருந்தால் அவர்கள் உற்பத்தியை விரிவாக்குவதற்குத் தயாராகக் காத்திருக்கிறார்கள். இந்தச் சேமப் பட்டாளத்தைச் சேர்ந்த கடைசி ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தைக்கும் வேலை கிடைக்கும் வரை—வெறிகொண்ட மிகையுற்பத்தி நடக்கும் காலங்களில் மட்டுமே அவ்வாறு கிடைக்கிறது—அந்தப் பட்டாளத்தின் போட்டி கூலியைத் தாழ்த்திவைத்திருக்கும், அப்படை இருக்கிறதினாலேயே உழைப்புடன் நடத்தும் போராட்டத்தில் மூலதனத்தின் சக்தியைப் பலப்படுத்தும். மூலதனத்துடன் நடக்கும் ஓட்டப் பந்தயத்தில் உழைப்புக்குச் சமநிலை இல்லாதது மட்டுமல்ல, அதன் காலில் கட்டியுள்ள பீரங்கிக் குண்டையும் இழுத்துக் கொண்டு ஓடித்தீர வேண்டியிருக்கிறது. என்றபோதிலும், முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின்படி அது நேர்மையாகுமாம்.

இந்த மிகவும் நேர்மையான கூலியை மூலதனம் எந்த நிதியிலிருந்து எடுத்துக் கொடுக்கிறது? என்று விசாரிப்போம். நிச்சயமாக, மூலதனத்திலிருந்துதான். ஆனால் மூலதனம் மதிப்பு எதையும் உற்பத்தி செய்வதில்லை. நிலம் தவிர உழைப்பு ஒன்றுதான் செல்வத்துக்குத் தோற்றுவாய். மூலதனம் எனப்பட்டதே சேமித்து வைக்கப்பட்ட உழைப்பின் உற்பத்திப் பொருளே தவிர வேறில்லை. ஆகவே, உழைப்பின் கூலி உழைப்பிலிருந்தே கொடுக்கப்படுகிறது. தொழிலாளிக்குத் தன் சொந்த உற்பத்திப் பொருளிலிருந்தே கூலி கொடுக்கப்படுகிறது. சாதாரண நேர்மை என்று நாம் சொல்வோமே, அதன்படி பார்த்தால் தொழிலாளியின் கூலியாவது அவன் உழைப்பின் உற்பத்திப் பொருளுடன் ஒத்திருந்தாக வேண்டும். ஆனால் அரசியல் பொருளாதாரத்தின்படி அது நேர்மையாயிராது. மாறாக, தொழிலாளியின் உழைப்பின் உற்பத்திப் பொருள் முதலாளியிடம் சேர்கிறது. அதிலிருந்து தொழிலாளிக்குக் கிடைப்பதெல்லாம் தன் பிழைப்புக்கு அத்தியாவசியமா

யிருக்கிற சாதனங்கள்தாம், அதற்கு மேல் இல்லை. எனவே, இந்த அசாதாரணமான ''நேர்மையுள்ள'' போட்டியின் முடிவு என்னவென்றால், வேலை செய்கிறவர்களின் உழைப்பினுடைய உற்பத்திப் பொருள் வேலை செய்யாதவர்களின் கையிலே போய்த் தவிர்க்க முடியாதபடி திரள்கிறது. அவ்வாறு அதை உற்பத்தி செய்த மனிதர்களையே அடிமைப்படுத்துவதற்கு அவர்கள் கையில் வலுமிக்க சாதனமாகிவிடுகிறது.

நேர்மையான நாள் வேலைக்கு நேர்மையான நாள் கூலியாம்! நேர்மையான நாள் வேலையைப் பற்றியும் நிறையச் சொல்லலாம். அதன் நேர்மை கூலி விஷயத்திலுள்ள நேர்மைக்கு நேர் நிகராகும். ஆனால் அதை வேறொரு சமயத்துக்கு வைத்துக் கொள்வோம். மேலே சொன்னதிலிருந்து இந்தப் பழைய முழக்கத்தின் காலம் முடிந்துவிட்டதென்றும் அது இக்காலத்தில் நிற்காதென்றும் துல்லியமாகத் தெரிகிறது. அரசியல் பொருளாதாரத்தின் நேர்மை, அசல் சமுதாயத்தில் ஆட்சி செலுத்தும் விதிகளை உண்மையிலே நிர்ணயிப்பதற்குரிய நேர்மை, அந்த நேர்மையனைத்தும் ஒரு தரப்பிலேதான் உண்டு— மூலதனத்தின் தரப்பிலேதான் உண்டு. எனவே பழைய முழக்கம் என்றென்றும் மண்மூடிப் போகட்டும், அதனிடத்தில் மற்றொரு முழக்கம் எழட்டும்:

வேலைக்குரிய சாதனங்களான கச்சா பொருட்களும் தொழிற்சாலைகளும் இயந்திரங்களும் உழைக்கும் மக்களின் உடைமையாகுக.

*1881, மே 1—2*
எழுதப்பட்டது

*1881, மே 7,*
*The Labour Standard*, இதழ் 1ல்
தலையங்கமாக வெளி வந்தது

## கூலி முறை

''நேர்மையான நாள் வேலைக்கு நேர்மையான நாள் கூலி'' எனும் மரபுச்சிறப்பெய்திய முழக்கத்தை முந்தைய கட்டுரை ஒன்றில் பரிசீலித்தோம்; தற்காலச் சமுதாய நிலைமைகளில் மிகமிக நேர்மையான நாள் கூலியுங்கூட அவசியமாகவே தொழிலாளியின் உற்பத்திப் பொருளை மிகவும் நேர்மையற்ற முறையில் பிரிவினையுடன் பொருந்துவதாக ஆகிறது என்கிற முடிவுக்கு வந்தோம். அந்த உற்பத்திப் பொருளின் பெரும் பகுதி முதலாளியின் ஜேபியில் போய்ச் சேருகிறது; தொழிலாளி வேலை செய்வதற்கான ஒழுங்கில் தன்னை வைத்திருக்கவும் தன் இனத்தைப் பெருக்கவும் முடிகிற அளவுக்கு எவ்வளவு தேவையோ அதை மட்டும் பெற்றுக் கொள்வதோடு சும்மா இருந்து விட வேண்டும்.

இது அரசியல் பொருளாதாரத்தின் ஒரு விதி; வேறு விதமாகச் சொல்வதென்றால், சமுதாயத்தின் தற்காலத்திய பொருளாதார அமைப்புமுறையின் விதி. இங்கிலாந்தின் Court of Chancery[5] (உயர்நீதி மன்றம்) உள்ளிட்டு மொத்தமான பொதுச் சட்டம் நிலவரச் சட்டம் அனைத்தையும் விட இந்த விதி வலுவானது. ஒரு புறத்தில், நிலம், கச்சா பொருட்கள், இயந்திரங்கள் என்று எல்லா உற்பத்திச் சாதனங்களையும் ஏகபோகமாக்கிக் கொண்டிருக்கிற முதலாளிகள்; மறு புறத்தில், உற்பத்திச் சாதனங்களில் உடைமையனைத்தும் பறிக்கப்பட்டுவிட்டவர்களாய், தங்கள் சொந்த உழைப்புச் சக்தி தவிர வேறொன்றும் சொந்தத்தில் இல்லாதவர்களாயிருக்கும் உழைக்கும் மக்களாகிய தொழிலாளிகள் என்று சமுதா

யம் இரண்டு எதிரான வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள சமுதாய அமைப்புமுறை இருந்துவருகிறவரை கூலி பற்றிய விதி சர்வவல்லமையுள்ளதாகவே இருந்து வரும், தன் சொந்த உற்பத்திப் பொருளின் (முதலாளி ஏகபோகமாக்கிக் கொண்டிருப்பது) அடிமையாகச் செய்யப்பட்டிருக்கும் தொழிலாளியின் விலங்குகளை ஒவ்வொரு நாளும் புதிதாக இறுக்கிப்பூட்டி வரும்.

இந்த நாட்டின் தொழிற்சங்கங்கள் இந்த விதியை எதிர்த்துச் சுமார் அறுபது ஆண்டுகளாகப் போராடி வந்துள்ளனவே,—அதன் விளைவு என்ன? தொழிலாளி வர்க்கத்தை மூலதனத்தின்—தொழிலாளி தன் சொந்தக் கையால் உற்பத்தி செய்த பொருளின்—அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதில் அவை வெற்றி பெற்றுள்ளனவா? தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியாயினும் கூலியடிமைகள் எனும் நிலையிலிருந்து மேலேறி வருவதற்கு, தங்கள் சொந்த உற்பத்திச் சாதனங்களுக்கு—தங்கள் தொழிலுக்கு வேண்டியிருக்கிற கச்சா பொருட்களுக்கும் உற்பத்திக் கருவிகளுக்கும் இயந்திரங்களுக்கும்—தங்களே சொந்தக்காரர்களாகி அதன் வழியே தங்கள் சொந்த உழைப்பின் உற்பத்திப் பொருளுக்குத் தாங்களே சொந்தக்காரர்களாவதற்கு அவை உதவியுள்ளனவா? அவை அவ்வாறு செய்யவில்லை, என்றைக்கும் முயற்சிக்கவும் இல்லை. இது எல்லோரும் அறிந்த விஷயம்.

அதைச் செய்யாததினால் தொழிற்சங்கங்களால் பயன் இல்லை என்று நாம் சொல்ல வரவில்லை. மாறாக, இங்கிலாந்திலுள்ள தொழிற்சங்கங்களாகட்டும், மற்ற ஒவ்வொரு தொழிலுற்பத்தி செய்யும் நாட்டின் தொழிற் சங்கங்களாகட்டும், மூலதனத்தை எதிர்க்கும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கங்களுக்கு அவசியத்தேவையாகும். அந்தந்த நாட்டில் பழக்கமாயிருக்கும் வாழ்க்கைத் தரத்திற்கேற்ப அந்தந்த நாட்டுத் தொழிலாளிகளின் இனத்தைக் காத்துப்பெருக்கி வருவதற்குப் போதுமான அத்தியாவசியப் பொருட்களின் தொகைக்குச் சமமாகக் கூலியின் சராசரி விகிதம் உள்ளது. தொழிலாளிகளின் வெவ்வேறு பிரிவுகளில் இந்த வாழ்க்கை தரம் மிகவும் வேறுபட்டிருக்கக் கூடும். அவர்கள் கூலி விகிதத்தை நிலை

நிறுத்திக் கொள்ளவும் வேலை நேரத்தைக் குறைக்கவும் நடத்துகிற போராட்டத்தில் தொழிற்சங்கங்களுக்கு இருக்கும் பெரும் சிறப்பு இதுதான்: அவை வாழ்க்கைத் தரத்தைக் காத்து நிறுத்தவும் உயர்த்தவும் முயற்சிக்கின்றன. லண்டன் மாநகரின் கிழக்குப் பகுதியில் பல தொழில்கள் உள்ளன; செங்கல் அடுக்குகிறவர்களின், அவர்களின் துணையாட்களின் உழைப்பைவிட இவற்றின் உழைப்பு அதிகத் திறனுள்ளதல்ல, அதே கடுமை உள்ளது. என்றபோதிலும் இவற்றில் கிடைக்கிற கூலி முந்தியதில் பாதிக்குக் கூட தேறுவது கஷ்டம். என்ன காரணம்? காரணம் வெறுமே இது தான்: ஒரு வலுவுள்ள அமைப்பு அந்தப் பகுதியினரின் கூலியை அளப்பதற்கு அளவுகோலாக இருக்கும் ஒப்பு நோக்கில் உயர்வான வாழ்க்கைத் தரத்தை நிலைநிறுத்திக் கொள்ள உதவுகிறது; மற்றொரு பகுதியினர் ஒழுங்கமைப்புக் குலைந்து வலுவற்று இருப்பதினால் தங்களுடைய முதலாளிகளின் தவிர்க்க முடியாத அத்துமீறல்களுக்கு மட்டுமின்றித் தான்தோன்றித்தனமான அத்துமீறல்களுக்கும் பணிந்துபோக வேண்டியிருக்கிறது. அவர்களின் வாழ்க்கைத் தரம் படிப்படியாகக் குறைக்கப்படுகிறது, மேன்மேலும் குறைவான கூலியைக் கொண்டு பிழைத்து வரப் பழகிக் கொள்கிறார்கள், தாங்களே போதும் என்று ஒப்புக் கொள்ளக் கற்றுக் கொண்டிருக்கும் தரத்துக்குக் கூலியும் இயல்பாகவே வீழ்கிறது.

எனவே, கூலி பற்றிய விதி கரூராகக் கோடு கிழிக்கிற மாதிரி இல்லை. அது மாற்றவொண்ணாததல்ல, சில வரம்புகளுக்குள் மாற்றப்படலாம். (பெரும் வீழ்ச்சி நீங்கலாக) ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு தொழிலுக்கும் ஓரளவுக்கு ஒரு வீச்சு வரம்பு உண்டு, அதற்குள் கூலி விகிதம் சண்டையிடும் இரு தரப்பினரின் போராட்டத்தின் விளைவுகள் மூலம் மாற்றப்படலாம். ஒவ்வொரு வழக்கிலும் பேரத்தின் மூலமாகவே கூலி நிர்ணயிக்கப்படுகிறது; பேரத்தில் யார் அதிக காலத்துக்கு எதிர்த்து நிற்கிறானோ, சிறப்பாக எதிர்த்து நிற்கிறானோ அவனுக்குத்தான் தனக்கு உரியதைவிட அதிகமாகப் பெறுவதற்கான சிறந்த வாய்ப்பு உண்டு. தனித்து நிற்கும் தொழிலாளி முதலாளியோடு தான் விரும்பும் பேரத்தை முடித்துக் கொள்ள முயற்சித்

தால் அவன் சுலுவாகத் தோற்கடிக்கப்படுவான், நிச்சயமாகப் பணிய வேண்டியிருக்கும். ஆனால் ஒரு தொழிலைச் சேர்ந்த அத்தனை தொழிலாளிகளும் வலுவுள்ள அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு, தேவையேற்பட்டால் தங்கள் முதலாளிகளை எதிர்த்துநிற்பதற்கு உதவியாக நிதியும் தங்களுக்குள்ளே திரட்டிக் கொண்டு ஒரு சக்தியாக நின்று அந்த முதலாளிகளோடு பேரம் பேசமுடிகிற நிலைமையை உண்டாக்கிக் கொண்டால் அப்போதுதான் (வேறெப்போதுமில்லை) தற்காலச் சமுதாயத்தின் பொருளாதாரச் சட்டப்படி நேர்மையான நாள் வேலைக்கு நேர்மையான நாள் கூலி எனத்தக்க சிறு தொகையையாவது பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு உண்டு.

தொழிற்சங்கங்களின் போராட்டங்கள் கூலி பற்றிய விதியைக் குலைப்பதில்லை. மாறாக, அவ்விதியை அவை செயல்படுத்துகின்றன. தொழிற்சங்கங்களின் எதிர்ப்புச் சாதனங்கள் இல்லாமல் தொழிலாளிக்குக் கூலிமுறையின் விதிகளின்படி கிடைக்க வேண்டியதுங்கூட கிடைக்கிறதில்லை. முதலாளிக்குத் தொழிற்சங்கத்தைப் பற்றிப் பயம் இருந்து வந்தால் மட்டுமே தன் தொழிலாளியின் உழைப்புச் சக்தியின் மொத்த விற்பனை மதிப்பைக் கொடுக்குமாறு நிர்ப்பந்திக்க முடியும். சான்று வேண்டுமா? பெரிய தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியையும், தேங்கிய துன்பக் குட்டையாக விளங்கும் லண்டன் கிழக்குப் பகுதியிலுள்ள எண்ணற்ற சிறு தொழில்களில் கொடுக்கப்படுகிற கூலியையும் பாருங்கள்.

எனவே, தொழிற்சங்கங்கள் கூலி முறையைத் தாக்குவதில்லை. எனினும், தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார இழிவு கூலி உயர்வாக இருப்பதிலோ குறைவாக இருப்பதிலோ இல்லை. தன் உழைப்புக்குத் தன் உழைப்பின் உற்பத்திப் பொருள் முழுவதையும் பெறுவதற்குப் பதிலாகத் தன் சொந்த உற்பத்திப் பொருளின் கூலி எனப்படும் பகுதியை மட்டும் பெறுவதோடு தொழிலாளி வர்க்கம் திருப்திப்பட வேண்டியிருப்பதுதான் அதன் இழிவாகும். முதலாளி உழைப்புச் சாதனங்களுக்குச் சொந்தக்காரனாக இருப்பதால் உற்பத்திப் பொருள் முழுவதையும்

எடுத்துக் கொள்கிறுன் (அதிலிருந்து தொழிலாளிக்குக் கூலி கொடுத்துவிட்டு). எனவே, நிலம் கச்சா பொருட்கள் இயந்திரங்கள் முதலிய வேலைச் சாதனங்கள் அனைத்துக்கும் தொழிலாளி வர்க்கம் சொந்தக்காரன் ஆகாதவரை, அதன் வழியே தன் சொந்த உழைப்பின் உற்பத்திப் பொருள் முழுவதற்கும் சொந்தக்காரன் ஆகாதவரை அதற்கு உண்மையான மீட்சி கிடையாது.

*1881, மே 15—16*
*எழுதப்பட்டது*

*1881, மே 21,*
*The Labour Standard, இதழ் 3ல்*
*தலையங்கமாக வெளி வந்தது*

# தொழிற்சங்கங்கள்

## I

முதலாளிகளுக்கு எதிராகக் கூலி பற்றிய பொருளாதார விதியைச் செயல்படுத்தும் அளவில் தொழிற்சங்கங்களின் நடவடிக்கையைச் சென்ற இதழில் கவனித்தோம். இவ்விஷயத்தை மறுபடியும் பார்ப்போம். ஏனெனில், பொதுவாகவே உழைக்கும் வர்க்கங்கள் இதை முழுமையாகப் புரிந்துகொள்வது மிகமிக முக்கியமாகும்.

முடிந்தவரை கூலியைக் குறைப்பது தனிப்பட்ட முதலாளிக்கு மட்டுமின்றிப் பொதுவாக முதலாளி வர்க்கத்தின் நலனுக்கும் உகந்தது என்று தற்கால ஆங்கிலேயத் தொழிலாளிக்கு சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை என்று நினைக்கிறோம். எல்லாச் செலவுகளையும் கழித்தபின் உழைப்பின் உற்பத்திப் பொருள் இரண்டு பங்குகளாகப் பிரிக்கப்படுகிறது: ஒன்று தொழிலாளிகளின் கூலி ஆகிறது, மற்றது முதலாளிகளின் இலாபம் ஆகிறது. இதை டேவிட் ரிக்கார்டோ மறுக்கவொண்ணாத வகையிலே நிரூபித்தார். இனி, ஒவ்வொரு தனி வழக்கிலும் உழைப்பின் இந்த நிகர உற்பத்திப் பொருள் ஒரு குறிப்பிட்ட அளவில் இருப்பதால் கூலி எனும் பங்கு குறையாமல் இலாபம் எனும் பங்கு அதிகரிக்க முடியாது என்பது தெளிவு. கூலியைக் குறைப்பது முதலாளியின் நலனுக்கு உகந்தது என்று மறுப்பது அவனுடைய இலாபத்தை அதிகப்படுத்துவது அவனுடைய நலனுக்கு உகந்ததல்ல என்று சொல்வதற்குச் சமம்.

தற்காலிகமாக இலாபத்தை அதிகப்படுத்துவதற்கு வேறு சாதனங்கள் இருப்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால் அவை பொது விதியை மாற்றுவதில்லை. எனவே, அவை நம்மை இங்கே பாதிக்கவில்லை.

இனி, சமுதாயப் பொருளாதாரத்தின் ஒரு தெளிவான, நன்கு வரையறுக்கப்பட்ட விதி கூலி விகிதத்தை ஆண்டுவருகிறபோது முதலாளிகள் எப்படிக் கூலியைக் குறைக்க முடியும்? கூலி பற்றிய பொருளாதார விதி இருப்பது உண்மையே, மறுக்க முடியாது. ஆனால், நாம் ஏற்கெனவே பார்த்தவாறு, அது நீண்டு சுருங்கும் தன்மை உடையது, இரண்டு வழிகளில் அப்படி நீண்டு சுருங்கக் கூடியது. ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகளை ஒரு தாழ்ந்த வாழ்க்கைத் தரத்துக்குப் படிப்படியாகப் பழக்கப்படுத்துவதின் மூலமாக அத்தொழிலில் நேரடியாகக் கூலி விகிதத்தைக் குறைக்க முடியும், அல்லது கூலியை உயர்த்தாமலே ஒவ்வொரு நாளின் வேலை நேரத்தை (அல்லது அதே வேலை நேரத்தில் வேலையின் கடுமையை) அதிகப்படுத்துவதின் மூலமாக மறைமுகமாகக் கூலி விகிதத்தைக் குறைக்க முடியும்.

மற்றும், ஒரே தொழிலைச் சேர்ந்த முதலாளிகள் தமக்குள்ளே போட்டி போட்டுக் கொள்வதினால் ஒவ்வொரு முதலாளியும் தன் தொழிலாளிகளின் கூலியைக் குறைப்பதின் மூலமாகத் தன் இலாபத்தை அதிகப்படுத்திக் கொள்வதில் கொண்டுள்ள அக்கறைக்குப் புதிய தூண்டுதல் கிடைக்கிறது. ஒவ்வொருவனும் தன்னுடைய போட்டியாளர்களைவிட குறைந்த விலைக்கு விற்க முயற்சிக்கிறான். மற்றும் தன் இலாபத்தைத் தியாகம் செய்யாமலிருக்க வேண்டுமானால் கூலியைக் குறைக்க முயற்சிக்க வேண்டும். எனவே, ஒவ்வொரு தனி முதலாளிக்கும் உள்ள அக்கறையின் மூலமாகக் கூலி விகிதத்தின் மேல் கொண்டுவரப்படும் நிர்ப்பந்தம் அவர்களிடையேயுள்ள போட்டியால் பத்து மடங்காக அதிகப்படுத்தப்படுகிறது. முன்பு ஏறத்தாழ இலாபம் சம்பந்தப்பட்ட விவகாரமாக இருந்தது இப்போது அவசியத்தேவை சம்பந்தப்பட்ட விவகாரமாகிறது.

இந்த நிரந்தரமான, இடைவிடாத நிர்ப்பந்தத்தை எதிர்த்து நிற்பதற்கு ஒழுங்கமைப்பற்ற தொழிலாளிகளிடம் பயன்திறமுள்ள சாதனம் எதுவும் இல்லை. எனவே, தொழிலாளிகளின் அமைப்பு இல்லாத தொழில்களில் கூலி இடையறாது குறைகிற போக்கும் வேலை நேரம் இடையறாது அதிகரிக்கும் போக்கும் இருக்கிறது. மெது

வாக, ஆனால் நிச்சயமாக, இந்த நிகழ்வுப்போக்கு நடக்கிறது. செழுமையுள்ள காலங்களில் அவ்வப்பொழுது இது தடுத்துநிறுத்தலாம். ஆனால், பின்னால் தொழிலுக்குக் கெட்ட தசை உண்டாகிற காலங்களில் அதை மேலும் துரிதப்படுத்திவிடும். தொழிலாளிகள் படிப்படியாக மேலும் மேலும் தாழ்வான வாழ்க்கைத் தரத்துக்குப் பழக்கப்பட்டுப் போகிறார்கள். வேலைநேரம் சாத்தியமான உச்சநிலையை நோக்கி மேன்மேலும் நெருங்கிச் செல்கையில் கூலி அடி மட்டத்தை—அதற்கும் கீழே போனால் தொழிலாளி பிழைத்துவரவோ தன் இனத்தைப் பெருக்கி வரவோ அறவே சாத்தியமில்லை என்கிற நிலையை—மேன் மேலும் நெருங்கி வரும்.

சுமாராக இந்நூற்றாண்டின் துவக்கத்தில் இதற்கு ஒரு தற்காலிகமான விதிவிலக்கு இருந்தது. நீராவியும் இயந்திரங்களும் வேகமாக விரிவடைந்துங்கூட அவற்றின் உற்பத்திப் பொருளுக்கு அதைவிட வேகமாக உயர்ந்து வரும் கிராக்கியின் காரணமாக அந்த விரிவாக்கம் போதவில்லை. வேலை விடுதியிலிருந்து முதலாளியிடம் விற்கப்பட்ட குழந்தைகளின் கூலி நீங்கலாக, இத்தொழில்களில் பொதுவாகவே கூலி உயர்வாக இருந்தது. இன்றியமையாத, திறமையுள்ள கையுழைப்புக்கான கூலி மிக உயர்வாக இருந்தது. சாயமேற்றுபவனும், இயந்திரம் இயக்குகிறவனும், வெல்வெட் வெட்டுபவனும், கைப்பொறியால் நூல் நூற்பவனும் வாங்கி வந்த கூலியைப் பற்றிக் கேட்டாலே கட்டுக்கதைபோல் தோன்றுகிறது. அதே நேரத்தில் இயந்திரங்களால் விலக்கப்பட்டுவிட்ட தொழிலாளிகள் ஊட்டமின்றி மெள்ள மெள்ள நசித்தார்கள். ஆனால் புதுப்புனைவான இயந்திரங்கள் நல்ல கூலி வாங்கி வந்த இந்தத் தொழிலாளிகளைப் படிப்படியாக விலக்கிவிட்டன. இயந்திரங்களைச் செய்யும் இயந்திரங்கள் புனையப்பட்டன; இயந்திரங்களால் செய்யப்பட்ட சரக்குகளின் வரத்து கிராக்கிக்குச் சமமாகி மிஞ்சிவிடவும் செய்த விகிதத்தில் அவை புனையப்பட்டன. 1815ல் பொதுவான சமாதானம் தொழிலின் ஒழுங்குமுறையை மீண்டும் நிலைநாட்டியபோது, பத்தாண்டுக்கு ஒரு தடவையாக செழுமைக்கும் மிகையுற்பத்திக்கும் வர்த்தகக் கிலிக்கும் இடையே ஏற்ற இறக்கங்

கள் ஏற்படும் போக்கு தொடங்கியது. தொழிலாளிகள் பழைய செழுமைக் காலங்களிலிருந்து காத்துப் பேணி வந்த—வெறித்தனமான மிகையுற்பத்தி காலங்களில் ஒருக்கால் அதிகப்படுத்திக் கொண்டும் இருந்த—அனு கூலங்கள் அனைத்தும் இப்போது தொழில்துறையில் கேடும் கிலியும் நிலவிய காலத்தில் அவர்களிடமிருந்து பறிக்கப் பட்டுவிட்டன. விரைவிலே இங்கிலாந்தின் தொழில்துறை யைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் ஒழுங்கமைப்பற்ற உழைப்பாளர்களின் கூலி இடையறுது அடிமட்டத்தை நோக்கி இறங்கும் என்கிற பொது விதிக்குப் பணிந்துவிட் டார்கள்.

ஆனுல் இதற்கிடையே, 1824ல் சட்டபூர்வமாக்கப் பட்ட தொழிற்சங்கங்களும் குறுக்கிட்டுவிட்டன, குறுக் கிட வேண்டிய தருணமும் வந்துவிட்டிருந்தது. முதலாளி கள் எப்போதும் ஒழுங்கமைந்த நிலையில் இருக்கிருர்கள். மிகப் பெரும்பான்மையான வழக்குகளில் அவர்களுக்கு சம்பிரதாயமான சங்கமோ, ஒழுங்குவிதிகளோ, அதிகாரி களோ தேவையில்லே. தொழிலாளிகளின் எண்ணிக்கை யுடன் ஒப்பிடும்போது அவர்களின் எண்ணிக்கை சிறிதாக இருப்பதும், அவர்கள் ஒரு தனி வர்க்கமாக அமைந்திருப் பதும், அவர்களிடையே இடையறுத சமுதாய, வர்த்தக உறவு இருந்து வருவதும் அவற்றுக்குப் பதிலாக அவர் களுக்குப் பயன்படுகிறது. பிற்காலத்தில்தான், ஒரு தொழிற் கிளையைச் சேர்ந்த முதலாளிகள் ஒரு மாவட்டத்தை வசமாக்கிக் கொண்டபோது (லங்காஷயரில் ஜவுளித் தொழில் வசப்படுத்திக் கொண்ட மாதிரி) முதலாளிகளின் சம்பிரதாயமான தொழிற்சங்கம்அவசியமாகிறது. மறுபுறத் தில், ஒழுங்கு விதிகளால் நன்கு வரையறுக்கப்பட்டு தன் அதிகாரத்தை அலுவலர்களிடமும் கமிட்டிகளிடமும் ஒப் படைத்துள்ள ஒரு வலுவான அமைப்பு தொழிலாளிகளுக் குத் துவக்கத்திலிருந்தே இல்லாமல் சமாளிக்க முடியாது. 1824ம் வருடத்திய சட்டம் இந்த அமைப்புகளைச் சட்ட பூர்வமாக்கியது. அந்நாள் முதலாக இங்கிலாந்தில் உழைப்பு ஒரு சக்தி ஆகியது. முன்பெல்லாம் தன்னுள்ளே போட்டியால் பிளவுண்டு துணையின்றிக் கிடந்த மக்கள் அதுமுதல் அவ்வாறு இல்லே. சங்கத்தாலும் கூட்டுக் செய்

கையாலும் கிடைத்த பலத்துடன் நிறைவான கஜானுவின் —நம் பிரெஞ்சு சகோதரர்கள் கச்சிதமாகச் சொல்வது போல் ''எதிர்ப்பு நிதியின்''—சக்தியும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. விவகார நிலே முழுவதும் மாறிவிட்டது. கூலியைக் குறைப்பதிலும் வேலே நேரத்தை அதிகப்படுத்துவதிலும் ஈடுபடுவது முதலாளிக்கு அபாயகரமான விஷயமாகிவிட்டது.

எனவேதான் அக்காலத்திய முதலாளி வர்க்கம் தொழிற்சங்கங்கள் மீது கடுமையாக எரிந்து விழுந்தது. தொழிலாளி வர்க்கத்தைத் வருத்திப் பிழியும் தனது நீண்டகால நடைமுறை ஒரு நிரந்தரமான உரிமையாகவும் சட்டபூர்வமான தனிச்சலுகையாகவும் எப்போதும் முதலாளி வர்க்கம் கருதி வந்திருக்கிறது. அதற்கு இப்போது முற்றுப் புள்ளி இடப்படும். எனவே அவர்கள் பலத்த கூக்குரல் எழுப்பியதிலும் இக்காலத்தில் அயர்லாந்தின் நிலப்பிரபுக்கள் நினைக்கிற மாதிரி[6] தங்களுடைய உரிமைகளுக்கும் சொத்துக்கும் ஊறு விளேக்கப்படுவதாக நினைப்பதிலும் வியப்பு இல்லே.

அறுபது ஆண்டுகளின் போராட்ட அனுபவம் அவர்களே ஓரளவுக்கு வழிக்குக் கொண்டுவந்து இருக்கிறது. இன்று தொழிற்சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளாக உள்ளன; தொழிற்சாலேகள் பட்டறைகள் சட்டங்கள் வேலேநேரத்தை ஒழுங்குமுறைப்படுத்தும் ஒழுங்கியக்கிகளாக இருப்பது போல் தொழிற்சங்கங்களின் செய்கை கூலியை ஒழுங்குமுறைப்படுத்தும் ஒழுங்கியக்கிகளில் ஒன்ருக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல. தொழிலாளிகளின் அனுபவத்திலிருந்து லங்காஷயர் ஐவுளி மில் மேஸ்திரிகளும் படிப்பினே பெற்று இப்பொழுது தங்களுக்குப் பொருத்தம் என்று தோன்றும்போது மற்ற தொழிற்சங்கங்களேப் போலவோ அவற்றைவிட மேலாகவோ வேலேநிறுத்தத்தை நடத்தத் தெரிந்து கொண்டிருக்கிருர்கள்.

எனவே, தொழிற்சங்கங்களின் செய்கை மூலமாகக் கூலி பற்றிய விதி முதலாளிகளே எதிர்த்துச் செயல்படுத்தப்படுகிறது; நன்கு ஒழுங்கமைக்கப்பெற்ற எந்த ஒரு தொழிலிலும் உள்ள தொழிலாளிகள் முதலாளிகளிடம்

வாடகைக்கு விட்ட தங்கள் உழைப்புச் சக்தியின் முழு மதிப்பை ஏறத்தாழப் பெற முடிகிறது; மற்றும், உழைப்புச் சக்தி அகாலமாகத் தீர்ந்துபோகும் நிலை எட்டாத அளவுக்கு அதிகப்பட்ச நேரத்தை மிஞ்சிப்போகாதவாறு யினும் அரசாங்கச் சட்டங்களின் உதவியைக் கொண்டு செய்யப்படுகிறது. என்றபோதிலும், தொழிற்சங்கங்கள் இன்று ஒழுங்கமைக்கப்பெற்றுள்ள நிலையில் அதிகப்பட்சமாக பெற நினைக்கக் கூடியது இவ்வளவுதான். இதற்குங் கூட இடையறாது போராடி வந்தால்தான் முடியும், பெருமளவில் பலத்தையும் பணத்தையும் செலவழித்தால் தான் முடியும். அப்புறம், குறைந்தபட்சம் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்கிற தொழில் ஏற்ற இறக்கங்கள் ஏற்கெனவே சாதித்துக் கொண்டதை அடித்துப்போட்டு விடுகின்றன, மறுபடியும் போராட்டம் நடத்த வேண்டி ஏற்பட்டுவிடுகிறது. இந்த விஷ வட்டத்துக்கு முடிவே கிடையாது. முன்பு இருந்த மாதிரியே தொழிலாளி வர்க்கம் இருந்து வருகிறது, நம் சார்டிஸ்டு மூதாதையர் பயமின்றிச் சொன்னதுபோல் கூலியடிமைகளின் வர்க்கமாகவே இருந்து வருகிறது. இவ்வளவு உழைப்பும் தியாகமும் துன்பமும் பட்டும் இறுதி விளைவு இப்படியா ஆக வேண்டும்? இதுவா பிரிட்டிஷ் தொழிலாளிகளின் உச்சக் குறிக்கோளாக என்றென்றும் இருந்து வர வேண்டும்? அல்லது, இந்த நாட்டின் தொழிலாளி வர்க்கம் கடைசியிலே இந்த விஷ வட்டத்தை முறிக்க முயன்று கூலிமுறையையே முற்றிலும் ஒழித்துவிடுகிற ஓர் இயக்கத்தில் அதற்கு முடிவு தேடிக் கொள்ளுமா?

தொழிலாளி வர்க்கத்தின் அமைப்பாளர்கள் என்கிற வகையில் தொழிற்சங்கங்கள் வகிக்கும் பாத்திரத்தை அடுத்த கட்டுரையில் பரிசீலிப்போம்.

*1881, கிட்டத்தட்ட மே 20*
*எழுதப்பட்டது*

*1881, மே 28, ஜூன் 4,*
*The Labour Standard, இதழ்கள் 4,5*
*தலையங்கமாக வெளி வந்தது*

## தொழிற்சங்கங்கள்

## II

கூலி விகிதத்தை ஒழுங்கியக்குவதற்கும் மூலதனத்தை எதிர்த்து நடக்கும் போராட்டத்தில் தொழிலாளிக்குக் கொஞ்சத்திற்குக் கொஞ்சமாயினும் எதிர்ப்பு வழிவகைகளை உறுதிப்படுத்துவதற்கும் தொழிற்சங்கங்கள் பங்கு செலுத்தும் அளவில் மட்டுமே இதுவரை தொழிற்சங்கங்களின் பணிகளைப் பரிசீலித்தோம். ஆனல் அந்த அம்சத்துடன் விஷயம் தீர்ந்துவிடவில்லை.

மூலதனத்தை எதிர்த்துத் தொழிலாளி நடத்தும் போராட்டம் என்று சொன்னேம். மூலதனத்தைத் தாங்கிப் பேசுகிறவர்கள் என்னதான் மறுத்துப் பேசுகிற போதிலும் அந்தப் போராட்டம் இருக்கிறது உண்மை. இலாபத்தை உயர்த்துவதற்குக் கூலியைக் குறைப்பது மிகவும் பத்திரமான, கையருகேயுள்ள வழிவகையாக இருந்துவருகிற வரை—ஏன், கூலி முறை என்பதே இருந்து வருகிற வரை—அது இருந்து வரும். தொழிற்சங்கங்கள் இருப்பது இதற்குப் போதிய சான்ருகும். மூலதனத்தின் அத்துமீறல்களை எதிர்த்துப் போராடுவதற்காக அல்ல என்ருல் வேறு எதிற்காக அவை ஏற்படுத்தப்பட்டன? விஷயங்களை மழுப்பிப் பேசுவதில் பயனில்லை. ஒரு புறத்தில், உழைப்பைப் பயன்படுத்துவதற்குரிய சாதனங்கள் அனைத்துக்கும் சொந்தக்காரர்களான முதலாளிகள், மறு புறத்தில் தம் சொந்த உழைப்புச் சக்தியைத் தவிர வேறெதுவும் சொந்தமாக இல்லாத தொழிலாளிகள் என்று முக்கியமாக இரண்டு பகையான மாபெரும் வர்க்கங்களாகத் தற்காலச் சமுதாயம் பிரிந்துள்ள அருவருப்பான உண்மையை இனிப்பான சொற்களால் மூடி மறைக்க முடியாது. தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பினுடைய உற்பத்திப் பொருளை இவ்விரு வர்க்கங்களிடையே பிரிக்க வேண்டியிருக்கிறது.

இந்தப் பிரிவினை விஷயமாகத்தான் போராட்டம் இடையருது நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வர்க்கமும் முடிந்தவரை பெரிய பங்கு எடுத்துக் கொள்ள முயற்சிக்கிறது. இந்தப் போராட்டத்தில் மிகமிக வேடிக்கையான விஷயம் என்னவென்ருல், தன் சொந்த உற்பத்திப் பொருளில் ஒரு பங்கு பெறப் போராடிக் கொண்டிருக்கும் தொழிலாளி வர்க்கந்தான் உண்மையிலே முதலாளிகளைக் கொள்ளையடிப்பதாக அடிக்கடி குற்றஞ்சாட்டப் படுகிறது!

ஆனல் சமுதாயத்தின் இரண்டு மாபெரும் வர்க்கங்களிடையே நடக்கும் போராட்டம் அவசியமாகவே அரசியல் போராட்டமாக ஆகிவிடுகிறது. மத்திய அல்லது முதலாளி வர்க்கத்துக்கும் நிலப்பிரபுவம்சத்தினருக்கும் இடையே நடந்த நீண்ட போராட்டம் இப்படித்தான் இருந்தது. அதே முதலாளிகளுக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையே நடக்கும் போராட்டமும் இப்படித்தான் இருக்கிறது. வர்க்கத்தை எதிர்த்து வர்க்கம் நடத்தும் ஒவ்வொரு போராட்டத்திலும் சாதிக்கப்பார்க்கும் அடுத்த குறிக்கோள் அரசியல் அதிகாரமாகும். ஆளும் வர்க்கம் தன் அரசியல் மேலாதிக்கத்தை—அதாவது, நாடாளுமன்றத்தில் தன்னுடைய திடமான பெரும்பான்மையை—பாதுகாத்துக் கொள்கிறது. கீழ்நிலையிலுள்ள வர்க்கம் நடப்பிலுள்ள சட்டங்களைத் தன்னுடைய நலன்களுக்கும் தேவைகளுக்கும் பொருத்தமாக மாற்றும் பொருட்டு முதலில் அந்த அதிகாரத்தில் ஒரு பகுதி பெறுவதற்காகவும் பிறகு அதிகாரம் முழுவதையும் பெறுவதற்காகவும் போராடுகிறது. இவ்வகையிலேதான் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கம் அந்த அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கு வாய்த்த மக்கள் சாஸனத்துக்காக[7] ஆர்வத்துடன், பலவந்தத்துடனுங்கூட, பல ஆண்டுகள் போராடியது. அது தோற்கடிக்கப்பட்டது. என்றபோதிலும், வெற்றிபெற்ற முதலாளி வர்க்கத்தை அந்தப் போராட்டம் வெகுவாக பாதித்ததின் காரணமாக அன்று முதல் அது நீண்டகாலப் போர்நிறுத்தத்தைப் பெறுவதற்கு அடிக்கடி தொழிலாளி வர்க்கத்துக்குச் சலுகைகள் கொடுக்கத் தயாராயிருந்தது.

நிற்க. வர்க்கத்தை எதிர்த்து வர்க்கம் நடத்தும் போராட்டத்தில் மிகவும் முக்கியமான ஆயுதம் அமைப்பேயா

கும். முற்றிலும் அரசியல் ரீதியான அல்லது சார்டிஸ்டு அமைப்பு எவ்வளவுக்கெவ்வளவு நொறுங்கி வீழ்ந்து வந்ததோ அவ்வளவுக்கவ்வளவு பலமாக தொழிற்சங்க அமைப்பு வளர்ந்து, கடைசியில் இப்போது வெளிநாட்டுத் தொழிலாளி வர்க்க அமைப்பு எதுவும் தனக்கு நிகரில்லாத அளவில் வலுப்பெற்றுள்ளது. பத்து லட்சத்திலிருந்து இருபது லட்சம் வரை தொழிலாளர்களைக் கொண்ட ஒரு சில பெரிய தொழிற்சங்கங்கள், இவற்றிற்குப் பின் பலமாக நிற்கும் சிறிய தொழிற்சங்கங்கள் அல்லது உள்ளூர் தொழிற்சங்கங்கள்—இவை ஒரு சக்தியாகும். ஆளும் வர்க்கத்தின் எந்த அரசாங்கமும்—அது விக் கட்சி அரசாகமாயினும் சரி, டோரி கட்சி அரசாங்கமாயினும் சரி[8]—அந்தச் சக்தியைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த வலுவுள்ள தொழிற்சங்கங்களின் தோற்றம், வளர்ச்சி சம்பந்தப்பட்ட மரபுகளின்படி அவை இதுவரை கூலியையும் வேலை நேரத்தையும் ஒழுங்கியக்குவதிலும் தொழிலாளிகளுக்கு வெளிப்படையாகவே பகையாயுள்ள சட்டங்களை ரத்து செய்ய வைப்பதிலும் பங்கு கொள்ளும் தமது பணியுடன் மட்டும் நின்று கொண்டுள்ளன. மேலே சொன்னவாறு, அவை எதிர்பார்க்க உரிமையுள்ள அளவுக்குப் பயனுள்ள வகையில் அந்தப் பணியைச் செய்துள்ளன. எனினும், அவை அதற்குமேலும் சாதித்துள்ளன—தங்கள் பலத்தைத் தங்களைவிட நன்கு அறிந்திருக்கும் ஆளும் வர்க்கம் தானுகவே முன்வந்து அதற்குமேலாகச் சலுகைகள் அளித்துள்ளது. டிஸ்ரேலி செய்த வீட்டுக் குடியிருப்பாளர் வாக்குரிமை [household suffrage] சட்டம்[9] ஒழுங்கமைப்புள்ள தொழிலாளி வர்க்கத்தில் குறைந்தபட்சம் பெரும் பகுதியினருக்காவது வாக்குரிமை வழங்கியது. இந்தப் புதிய வாக்காளர்கள் தங்கள் சொந்தச் சித்தத்தின்படி நடப்பார்கள், முதலாளி வர்க்க மிதவாத அரசியல்வாதிகள் காட்டும் வழியில் நடப்பதை நிறுத்திக் கொள்வார்கள் என்று டிஸ்ரேலி அனுமானித்திராவிட்டால் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பாரா? உழைக்கும் மக்கள் தங்களுடைய மாபெரும் தொழிற்சங்கங்களின் நிர்வாகத்தில் தாங்கள் நிர்வாக வேலைக்கும்

அரசியல் வேலைக்கும் தகுதியுடையவர்களே என்று நிருபித்துக் கொண்டிராவிட்டால் டிஸ்ரேலி அந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்க முடியுமா?

அதே சட்டம் தொழிலாளி வர்க்கத்துக்கு ஒரு புதிய வாய்ப்புநிலையைத் திறந்துவிட்டது. அது அவர்களுக்கு லண்டனிலும் எல்லாத் தொழில் நகரங்களிலும் பெரும்பான்மை கொடுத்து, நாடாளுமன்றத்திற்குத் தங்கள் சொந்த வர்க்கத்தைச் சேர்ந்த நபர்களை அனுப்பியதின் மூலமாக மூலதனத்தை எதிர்த்துப் புதிய ஆயுதங்களோடு போராட்டத்தில் இறங்குவதற்கு உதவியது. ஆனால் இங்கே நாம் வருத்தத்துடன் ஒன்று சொல்லவேண்டியிருக்கிறது: தொழிற்சங்கங்கள் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிக் காவலராக இருக்கும் தங்கள் கடமையை மறந்துவிட்டன. அந்தப் புதிய ஆயுதம் பத்தாண்டுகளுக்கு மேலாகவே அவற்றின் கையில் இருந்து வந்தபோதிலும் அதை அவை பயன்படுத்தவில்லை என்றே சொல்லிவிடலாம். அவை உண்மையிலே தொழிலாளி வர்க்கத்தின் முன்னணியில் நடந்தாலொழிய தாம் இன்று வகிக்கும் நிலையைத் தொடர்ந்து வகித்துவர முடியாது என்பதை மறக்கக் கூடாது. இங்கிலாந்தின் தொழிலாளி வர்க்கத்திடம் நாற்பது ஐம்பது தொழிலாளிகளை நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தனுப்பும் சக்தி இருந்துங்கூட தங்கள் பிரதிநிதிகளாக முதலாளிகளோ முதலாளிகளின் குமாஸ்தாக்களான வழக்குரைஞர்கள், பத்திரிகையாளர்கள் போன்றவர்களோ என்றென்றும் இருந்துவருவதில் திருப்திப்பட்டிருப்பது இயற்கைக்குப் புறம்பானது.

மேலும் ஒன்று: தான் கொஞ்ச காலமாகத் தவறான பாதையில் சென்றுகொண்டிருப்பதாக இந்நாட்டுத் தொழிலாளி வர்க்கம் உணரத் தொடங்கியிருப்பதற்குப் பல அறிகுறிகள் உள்ளன; கூலி உயர்வுக்கும் வேலைநேரக் குறைப்புக்கும் மட்டும் நடத்துகிற இயக்கங்கள் முடிவே இல்லாத ஒரு விஷ வட்டத்தில் தன்னை வைத்துவிட்டுள்ளதையும் அடிப்படையான தீமை கூலி முறையே தவிர கூலி குறைவாயிருப்பதல்ல என்பதையும் உணரத் தொடங்கியிருப்பதற்குப் பல அறிகுறிகள் உள்ளன. இந்த அறிவு தொழிலாளி வர்க்கத்திடையே பொதுவாகப் பரவிவிடுமேயா

ஞல் தொழிற்சங்கங்களின் நிலை கணிசமாக மாறித் தீர வேண்டும். தாம் மட்டுமே தொழிலாளி வர்க்கத்தின் அமைப்புகளாக இருக்கும் சிறப்புரிமையை அவை மேற்கொண்டு அனுபவித்த வாரா. தனி தொழில்களைச் சேர்ந்த சங்கங்களின் பக்கத்தில், அல்லது அவற்றிற்கு மேலான நிலையில், ஒரு பொதுச் சங்கம்—தொழிலாளி வர்க்கம் முழுவதற்கும் உரிய ஓர் அரசியல் அமைப்பு—தோன்றித் தீர வேண்டும்.

இவ்விதமாக, ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் இரண்டு விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பது நல்லது: ஒன்று, இந்நாட்டுத் தொழிலாளி வர்க்கம் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறுவதில் தனக்குரிய முழுப் பங்கைத் தவறுக்கு இடமற்ற குரலில் கோரும் நேரம் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது. இரண்டாவது, உயர்வான கூலிக்கும் குறைவான வேலை நேரத்துக்கும் நடத்தும் போராட்டமும்சரி, இன்று தொழிற்சங்கங்கள் செயலாற்றி வரும் முறையிலுள்ள செய்கை முழுவதும் சரி, தம்மளவில் ஒரு குறிக்கோள் ஆகமாட்டா, அவை கூலி முறையை அடியோடு ஒழிப்பது என்கிற மேலும் உயர்வான குறிக்கோளை அடைவதற்குரிய ஒரு வழிவகை, மிகவும் அவசியமான பயன்திறமுள்ள வழிவகை, பல வழிவகைகளில் ஒன்றுகும் என்று தொழிலாளி வர்க்கம் புரிந்துகொண்டிருக்கக்கூடிய காலமும் வேகமாக நெருங்கி வருகிறது.

நாடாளுமன்றத்தில் உழைப்பு முழுப் பிரதிநிதித்துவம் பெறுவதற்கும் கூலி முறையை ஒழிப்பதற்கான தயாரிப்புச் செய்வதற்கும் மொத்தமாகத் தொழிலாளி வர்க்கம் முழுவதற்குமான அமைப்புகள் அவசியமாகிவிடும், தனித் தனி தொழில்களைச் சேர்ந்த அமைப்புகள் அல்ல. எவ்வளவு விரைவிலே இது செய்யப்படுகிறதோ அவ்வளவு நல்லது. ஒரே கட்டுத்திரளாக ஒழுங்கமைத்துக் கொண்டுள்ள பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தை ஒரு நாளைக்கேனும் எதிர்த்து நிற்கக் கூடிய சக்தி உலகத்தில் கிடையாது.

*1881, கிட்டத்தட்ட மே 20*
*எழுதப்பட்டது*

*1881, மே 28, ஜூன் 4,*
*The Labour Standard, இதழ்கள் 4, 5*
*தலையங்கமாக வெளி வந்தது*

## பிரெஞ்சு வர்த்தக ஒப்பந்தம்

ஜூன் 9 வியாழக்கிழமையன்று காமன்ஸ் சபையில் திரு. மொங்க் (கிளாஸ்டர் தொகுதி உறுப்பினர்) ஒரு தீர்மானம் கொண்டுவந்தார், ''தீர்வைகளை மேலும் குறைப்பதின் வழியாக இரு நாடுகளிடையேயுள்ள வர்த்தக உறவுகளை வளர்க்கும் போக்கில் இல்லாததாய் பிரான்ஸுடன் செய்யும் எந்த வர்த்தக ஒப்பந்தமும் திருப்திகரமாக இராது'' என்று.

ஓரளவுக்கு நீண்ட விவாதம் நடந்தது. அரசாங்கத்தின் சார்பில் ஸர் சா. டில்க் அரசுறவுத்துறை ஆசாரத்திற்காக மெத்தனமான எதிர்ப்பு தெரிவித்தார். திரு. ஜே. ஆ. பால்ஃபர் (டாம்வொர்த் தொகுதி உறுப்பினர்) பதிலடி கொடுக்கும் முறையிலான தீர்வைகள் மூலமாக வெளிநாடுகளைக் காப்புவரிகளைக் குறைக்குமாறு கட்டாயப்படுத்த வேண்டும் என்று விரும்பினார். நாம் அவர்களோடு செய்கிற வர்த்தகத்தின் மதிப்பையும் அவர்கள் நம்முடன் செய்யும் வர்த்தகத்தின் மதிப்பையும் எந்த ஒப்பந்தமும் இல்லாமலே பிரெஞ்சுக்காரர்கள் கண்டுபிடித்துக் கொள்ள விட்டு விடலாமே என்றார் திரு. ஸ்லாக் (மாஞ்செஸ்டர் தொகுதி உறுப்பினர்). வர்த்தக ஒப்பந்தங்கள் மூலமாக சுயேச்சையான வாணிபத்தை எங்கே எட்டப் போகிறோம் என்று நிராசை தெரிவித்தார் திரு.இல்லிங்வொர்த் (பிராட்ஃபர்ட் தொகுதி உறுப்பினர்). தற்காலத்திய சுயேச்சை வாணிப அமைப்புமுறை ஒரு மோசடியே, ஏனெனில் அது சுயேச்சையான இறக்குமதிகளும் கட்டுத்தளையுள்ள ஏற்றுமதிகளும் கொண்டிருப்பது என்று திரு. மாக்-ஐவெர் (பர்கென்ஹெட் தொகுதி உறுப்பினர்) அறிவித்தார். 77க்கு

49 எனும் வாக்குக் கணக்கில் அந்தத் தீர்மானம் நிறைவேறியது. இந்தத்தோல்வி திரு. கிளாட்ஸ்டனின் உணர்ச்சிகளையாகட்டும், பதவியையாகட்டும் பாதிக்கப் போவதில்லை.

முட்டாள்தனமான வெளிநாட்டுக்காரனும், அதேபோல் முட்டாள்தனமான காலனிநாட்டுக் குடிமகனும் சுயேச்சையான வாணிபத்தால் உலகனைத்துக்கும் கிடைக்கிற வரப்பிரசாதங்களையும் எல்லாப் பொருளாதாரக் கேடுகளையும் போக்கவல்ல அதன் திறமையையும் அங்கீகரிக்க மறுப்பதில் காட்டுகிற பிடிவாதத்தைப் பற்றித் திரும்பத் திரும்ப வரிசையாக நெடுநாளாகக் கேட்டுவரும் முறையீடுகளுக்கு இந்த விவாதம் ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். இங்கிலாந்தில் சுயேச்சையான வாணிபம் நிலைநாட்டப்பட்டுவிட்டால் போதும், அது அந்நாட்டின்மேல் பொழிகிற வரப்பிரசாதங்களைக் கண்டு கொண்டு மற்ற நாடுகள் அனைத்தும் அதன் உதாரணத்தைப் பின்பற்றித் தீர வேண்டியதுதான், ஆங்கிலேயத் தொழிற் பொருட்களுக்குத் தங்களுடைய துறைமுகங்களைத் திறந்துவைத்துத் தீர வேண்டியதுதான் என்று மாஞ்செஸ்டர் கருத்துப் பிரிவினர்[10] சொன்ன ஜோசியம் அறவே பொய்த்துவிட்டது போல் வேறெந்த ஜோசியமும் பொய்த்ததில்லை. சுயேச்சை வாணிபத்தைப் பற்றி நயமாகப் போதித்த திருத்தொண்டர்களின் குரல் வெட்ட வெளியில் எழுப்பிய கூக்குரலாகவே இருந்துவிட்டது. மொத்தத்தில் ஐரோப்பா கண்டமும் அமெரிக்காவும் தங்களுடைய காப்பு வரிகளை உயர்த்தியது மட்டுமல்ல, பிரிட்டிஷ் காலனிகளுங்கூட சுயாட்சி பெற்றவுடனே அவற்றைப் பின்பற்றலாயின. இந்தியா பிரிட்டிஷ் ஆளுகையின்கீழ்[11] வைக்கப்பட்டதோ இல்லையோ, அங்கேயுங்கூட பருத்தி ஜவுளிகள் மீது ஐந்து சதவீதத் தீர்வை புகுத்தப்பட்டு உள்நாட்டுத் தொழிற் பொருட்களுக்கு ஊக்கியாகப் பயன்பட்டது.

ஏன் இப்படி ஆக வேண்டும் என்பது மாஞ்செஸ்டர் கருத்துப்பிரிவினருக்கு விளங்காப் புதிராகவே இருக்கிறது. எனினும், விஷயம் மிகவும் தெளிவானதுதான்.

ஏறத்தாழ சென்ற நூற்றாண்டின் மத்தியில் இங்கிலாந்து பருத்தி ஜவுளிக்கு முதன்மையான களமாக இருந்தது.

எனவே, பருத்தி ஜவுளிகளுக்குக் கிராக்கி விரைவாக அதிகரித்து வந்ததையொட்டி இயந்திரங்கள் புனையப்படுவதற்கும் அதுவே இயல்பான இடமாக இருந்தது. இவ்வியந்திரங்கள் நீராவி எஞ்சினின் துணை கொண்டு முதன்முதலில் பருத்தி ஜவுளித் தொழிலையும் பிறகு ஒன்றன்பின்னொன்றாக மற்ற ஜவுளித் தொழில்களையும் புரட்சிகரமாக மாற்றிவிட்டன. பிரிட்டனின் அகன்ற, எளிதாகத் தோண்டியெடுக்கப்படக் கூடிய நிலக்கரி வயல்கள் நிராவியின் துணை கொண்டு இப்போது நாட்டின் செழுமைக்கு அடிப்படையாகிவிட்டன. நிலக்கரிக்கு மிகவும் பக்கத்தில் விரிவான இரும்புக் கனிவளப் படிவுகள் இருந்ததால் இரும்புத் தொழில் வளர்வதற்கு வசதியாயிருந்தது. எஞ்சின்களுக்கும் இயந்திரங்களுக்கும் இருந்த கிராக்கி இயந்திரத் தொழில் வளர்ச்சிக்குப் புதிய ஊக்கம் கொடுத்தது. அப்புறம், இந்தப் பட்டறைத் தொழில் அமைப்பு முறை முழுவதின் புரட்சியின் மத்தியிலே ஜாக்கொபின் எதிர்ப்புப் போர்களும் நெப்போலியன் நடத்திய போர்களும் வந்தன; இந்தப் போர்கள் சுமார் இருபது ஆண்டுகளுக்கு அநேகமாக எல்லாப் போட்டி நாடுகளின் கப்பல்களையும் கடலினின்று விரட்டிவிட்டன; அவ்வழியே, அட்லாண்டிக் கடந்த எல்லாச் சந்தைகளையும் சில ஐரோப்பியச் சந்தைகளையும் ஆங்கிலேயத் தொழிலுற்பத்திப் பொருட்களுக்கு நடைமுறை ஏகபோகமாக்கி வைத்தன. 1815ல் சமாதானம் மீண்டும் நிலைநாட்டப்பட்டபோது, மற்ற நாடுகளில் நீராவி எஞ்சின்களைப் பற்றி அநேகமாக ஒன்றும் தெரியாதிருந்த காலத்தில், இங்கிலாந்து தன்னுடைய நீராவியியக்கத் தொழில்களின் உற்பத்திப் பொருட்களைக் கொண்டு உலகத்துக்கு வினியோகிக்கத் தயாராக நின்றது. பட்டறைத் தொழில் துறையில் அவற்றைவிட இங்கிலாந்து வெகு தொலைவுக்கு முன்னேறியிருந்தது.

ஆனால், சமாதானம் மீண்டும் நிலைநாட்டப்பட்டதிலிருந்து மற்ற நாடுகளும் விரைவிலே இங்கிலாந்தைப் பின்பற்றும்படி தூண்டப் பெற்றன. சீனத்துச் சுவர் போன்ற தனது தடுத்துவிலக்கும் போக்குள்ள காப்பு வரியின் பாதுகாப்பில் நின்றுகொண்டு பிரான்ஸ் நீராவியியக்க முறையிலான உற்பத்தியைப் புகுத்தியது. இங்கிலாந்து

உள்ளிட்ட மற்றெந்த நாட்டையும் விட அக்காலத்தில் எவ்வளவோ மிதமான காப்புவரி போட்டிருந்த ஜெர்மனியும் அவ்வாறே புகுத்தியது. மற்ற நாடுகளும் அவ்வாறே செய்தன. அதே நேரத்தில் பிரிட்டிஷ் நிலப்பிரபு வம்சத்தினர் தங்களுடைய வாடகைகளை உயர்த்தும் பொருட்டுத் தானியச் சட்டங்களைப்[12] புகுத்தி அதன் வழியே ரொட்டி விலையையும் அதையொட்டி கூலியின் பண விகிதத்தையும் உயர்த்தினர். என்றபோதிலும், ஆங்கிலேயப் பட்டறையுற்பத்தி கன வேகமாக முன்னேறியது. 1830 வாக்கில் அது "உலகத்தின் பட்டறையாக" ஆவதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டது. அதை எதார்த்தத்தில் உலகத்தின் பட்டறையாகச் செய்யும் பணியைத் தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கம்[13] எடுத்துக் கொண்டது.

தானியச் சட்டங்களை நீக்குவதின் குறிக்கோளைப் பற்றி யாரும் மறைத்துப் பேசவில்லை. ரொட்டி விலையைக் குறைத்து அதன் வழியே கூலியின் பண விகிதத்தைக் குறைத்தால் கெடுமதியுள்ள அல்லது மதியற்ற வெளி நாட்டுக்காரர்கள் தொடுக்கப் பயமுறுத்தி வந்த போட்டியனைத்தையும் பிரிட்டிஷ் பட்டறையுற்பத்தியாளர்களால் எதிர்த்து நிற்க முடியும். இயந்திரத் துறையில் இங்கிலாந்து பெரிதும் முன்னேறியிருந்தது; மாபெரும் வர்த்தகக் கப்பற்படையும், நிலக்கரியும், இரும்பும் வைத்திருந்தது; எனவே உலகம் முழுவதற்கும் இங்கிலாந்து பட்டறையுற்பத்திப் பொருட்களை வழங்க வேண்டும், அதற்குப் பரிமாற்றமாக வெளியுலகம் இங்கிலாந்துக்கு விவசாயப் பொருட்கள், தானியம், ஒயின், சணல், பருத்தி, காப்பி, தேயிலை முதலியவற்றை வழங்க வேண்டும்—இதைவிட இயல்பான விஷயம் வேறென்ன இருக்க முடியும்? அது ஆண்டவன் கட்டளை அல்லவா, அதை எதிர்ப்பது ஆண்டவன் கட்டளையை மீறிக் கலகம் செய்வதாகும், வேறொன்றுமில்லை. அதிகப் பட்சமாகப் போனால், இயந்திரங்களால் உற்பத்தி செய்ய முடியாத—அறிவுத்தெளிவுள்ள ஓர் ஆலைமுதலாளி கவனிக்கச் சிறிதும் தகுதியற்ற—சொகுசுப் பொருட்களை இங்கிலாந்துக்கும் மற்ற நாடுகளுக்கும் பிரான்ஸ் வழங்குவதை அனுமதிக்கலாம். அப்

பொழுதுதான், அப்பொழுது மட்டுந்தான், உலகில் அமைதியும் மனிதர்கள்பால் நல்லெண்ணமும் நிலவி வருமாம். அப்பொழுதுதான் எல்லா நாடுகளும் வர்த்தகத்தின், பரஸ்பர இலாபத்தின் அன்பு வளர்க்கும் உறவுகளால் பிணைக்கப்பட்டிருக்குமாம்; அப்பொழுதுதான் அமைதியின், செழுமையின் ஆட்சி என்றென்றும் நிலைநிறுத்தப்பெற்றிருக்குமாம். மற்றும், ''நல்ல காலம் வருதப்பா, கொஞ்சம் காத்திருங்கள்'' என்று தொழிலாளி வர்க்கத்திடம், தங்கள் ''வேலையாட்களிடம்'' சொன்னார்கள். ''வேலையாட்கள்'' இன்னும் காத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள், உண்மை.

ஆனால் ''வேலையாட்கள்'' காத்துக்கிடந்தபோதிலும் அந்தக் கெடுமதியுள்ள, மதியற்ற வெளிநாட்டுக்காரர்கள் காத்திருக்கவில்லை. தொழில்துறையில் இங்கிலாந்து பெற்றிருந்த தற்காலிகமான அனுகூலங்களையே உலகெங்கும் நிரந்தரமாக அதற்குப் பட்டறையுற்பத்திப் பொருட்களில் ஏகபோகத்தை உண்டாக்கிக் கொடுப்பதற்கும் மற்றெல்லா நாடுகளையும் வெறுமே இங்கிலாந்தைச் சார்ந்து கிடக்கும் விவசாயத் தொங்குசதைகளாக—வேறு வார்த்தைகளில் சொல்வதானால், மிகவும் பொறாமைப்படத்தக்க அயர்லாந்தின் நிலைக்கு—தாழ்த்துவதற்கும் உரிய சாதனமாகச் செய்துவைக்கும் ஓர் அமைப்பு முறையின் அழகை அவர்கள் பார்க்கவில்லை. பட்டறையுற்பத்தித் தொழில்கள் இல்லாமற் செய்யப்பட்டு அதன் வழியே வெறும் பட்டிக்காட்டுக் கூட்டமாகத் தாழ்த்தப்பட்டால் எந்த நாடும் நாகரிகத்தில் மற்ற நாடுகளுக்கு நிகராக இருந்துவர முடியாது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். எனவே, தேசிய அவசரத்தேவைக்குத் தனிப்பட்ட வர்த்தக இலாபத்தைக் கீழ்ப்படுத்தி அவர்கள் உயர்வான காப்பு வரிகளைக் கொண்டு கருநிலையிலுள்ள தங்கள் பட்டறைத்தொழில்களைக் காத்துக் கொண்டனர். அயர்லாந்தின் பொருளாதார நிலைக்குத் தாழ்த்தப்படாதவாறு தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உயர்வான காப்பு வரிகள் ஒன்றே வழி என்று அவர்களுக்குத் தோன்றியது.

எல்லா வழக்குகளுக்கும் இந்தச் செய்கை சரியாயிருக்கும் என்று நாம் சொல்லவரவில்லை. மாறாக, பிரான்ஸ்

சுயேச்சையான வாணிபத்தை நோக்கிக் கணிசமாக நெருங்கி வந்தால் மாபெரும் அனுகூலங்களைப் பெறும். இன்றுள்ள ஜெர்மன் பட்டறையுற்பத்தித் தொழில்கள் சுயேச்சையான வாணிபத்தின்கீழ் தாம் இன்றைய நிலைக்கு வந்துள்ளன. பிஸ்மார்க்கின் புதிய காப்புமுறையைச் சேர்ந்த காப்பு வரிகள் ஜெர்மன் பட்டறையுற்பத்தியாளர்களைத் தவிர வேறு யாருக்கும் தீங்கிழைக்கப் போவதில்லை. ஆனால், காப்புமுறை கொஞ்ச காலத்துக்கு இருந்து வருவது நியாயமானது மட்டுமல்லாமல் முழுக்க முழுக்க அவசியமாயும் இருக்கக் கூடிய நாடு ஒன்றுண்டு; அதுதான் அமெரிக்கா.

பட்டறையுற்பத்தித் தொழில்களைப் புகுத்துவது தேசிய அவசியமாகிவிட்ட வளர்ச்சிக் கட்டத்தில் அமெரிக்கா இருக்கிறது. உழைப்பைக் குறைக்கும் இயந்திரங்களைப் புனைவதில் இப்போது தலைமையில் நிற்பது இங்கிலாந்து அல்ல அமெரிக்காதான் என்கிற உண்மையே இதற்குச் சிறப்பான சான்று. ஒவ்வொரு நாளும் அமெரிக்கப் புனைவுகள் இங்கிலாந்தின் தனியுரிமைப் பத்திரங்களையும் (பேடென்டுகளையும்) இயந்திரங்களையும் விலக்கி வருகின்றன. அநேகமாக எல்லாப் பட்டறையுற்பத்தித் தொழிற்கிளைகளிலும் அமெரிக்க இயந்திரங்கள் இங்கிலாந்துக்குக் கொண்டுவரப்படுகின்றன. மேலும், உலகிலேயே மிகவும் ஊக்கமுள்ள மக்கள் அமெரிக்காவில் உள்ளனர்; அமெரிக்காவிடம் உள்ள நிலக்கரி வயல்களோடு ஒப்பிடும்போது இங்கிலாந்திடம் ஒன்றுமேயில்லை என்று சொல்லிவிடலாம் போலிருக்கிறது; அமெரிக்காவிடம் இரும்பும் மற்ற உலோகங்களும் ஏராளமாக உள்ளன. அப்படிப்பட்ட நாடு வளர்ந்துவரும் தன் இளம் பட்டறையுற்பத்தித் தொழில்களோடு நெடுங்காலமாக நிலைபெற்றிருக்கும் ஆங்கிலேயத் தொழில்களின் நீள நெடுங்காலப் போட்டி எனும் போராட்டத்தை எதிர்கொள்ள விடுமா—அதிலும் சுமார் இருபதாண்டுக் காலக் காப்புமுறையைக் கொண்டு அவற்றை எந்தப் போட்டியாளனோடும் சமநிலையில் உடனடியாக வைக்க முடியும் என்றிருக்கும்போது? ஆனால் அமெரிக்கா தன்னுடைய காப்புமுறை மூலமாகத் தன்னையே நஷ்டப்படுத்திக் கொள்கிறது என்று மாஞ்செஸ்டர் கருத்துப் பிரிவினர்

கூறுகின்றனர். பழைய சாதாரண இரயில் வண்டியில் போகாமல் விரைவு இரயில் வண்டியில் போவதற்கு—மணிக்குப் பன்னிரண்டு மைலுக்குப் பதிலாக ஐம்பது மைல் போவதற்கு—கூடுதலாகக் கட்டணம் செலுத்துகிறவன் நஷ்டப்படுகிற மாதிரிதான் இது.

நிச்சயமாக இன்றையத் தலைமுறையினர் பார்க்கத் தான் போகிறார்கள்: அமெரிக்கப் பருத்தி ஜவுளிகள் ஆங்கிலேயப் பருத்தி ஜவுளிகளுடன் இந்தியாவிலும் சீனாவிலும் போட்டி போட்டு அவ்விரு முதன்மையான சந்தைகளிலும் படிப்படியாக வலுப்பெற்றுவிடும்; அமெரிக்க இயந்திரங்களும் இரும்புத் தளவாடங்களும் இங்கிலாந்தில் செய்யப்பட்டவைகளுடன் இங்கிலாந்து உள்ளிட்ட எல்லா உலக நாடுகளிலும் போட்டி போடும்; ஃபிளாண்டர்ஸ் பட்டறையுற்பத்தித் தொழில்களை ஹாலந்துக்கும், டச்சு பட்டறையுற்பத்தித் தொழில்களை இங்கிலாந்துக்கும் போகச் செய்த அதே தணிப்பறியாத நிர்ப்பந்தம் உலகத் தொழில் துறையின் மையத்தை இந்த நாட்டிலிருந்து அமெரிக்காவுக்குக் கொஞ்ச காலத்தில் மாற்றிவிடும். இங்கிலாந்திடம் பிறகு எஞ்சி நிற்கும் வரம்புக் குறுக்கமுள்ள துறையில் சில ஐரோப்பிய நாடுகள் பலமான போட்டியாளர்களாக இருக்கக் காணும்.

இங்கிலாந்தின் தொழில்துறை ஏகபோகம் வேகமாக மறைந்து வரும் உண்மையை இனிமேல் தட்டிக் கழிக்க முடியாது. ''அறிவுத் தெளிவுள்ள'' முதலாளி வர்க்கம் அதை மூடிமறைப்பது தனக்கு நல்லது என்று நினைக்குமேயானால் தொழிலாளி வர்க்கம் அந்த உண்மையை நேருக்கு நேர் நின்று காணட்டும். ஏனெனில் அது அவர்களின் ''மேலோர்களை'' விட அவர்களுக்கு அக்கறையுள்ளதாகும். அந்த ''மேலோர்'' நீண்ட காலத்துக்கு உலகத்தின் வங்கி முதலாளிகளாகவும் இலேவாதேவிக்காரர்களாகவும் இருந்து வரக் கூடும்—தங்களுக்கு முன் நலிவுத்தசையில் இருந்த வெனிஸ் நாட்டினரும் டச்சு நாட்டினரும் இருந்த மாதிரி. ஆனால், இங்கிலாந்தின் மாபெரும் ஏற்றுமதி வர்த்தகம் ஆண்டுதோறும் விரிவடைவதற்குப் பதிலாகச் சுருங்கத் தொடங்கும் போது ''வேலையாட்களின்'' நிலைமை என்னவது? இரும்புக் கப்பற்கட்டும் தொழிலை தேம்ஸ்

நதிக் கரையிலிருந்து கிளைட் நதிக் கரைக்கு மாற்றிவிட்டது லண்டனின் கிழக்குப் பகுதி முழுவதையும் நிரந்தரமான பஞ்சைத் தனத்தில் ஆழ்த்திவிடப் போதுமானதாயிருந்ததென்றால் இங்கிலாந்தின் எல்லா முக்கியமான தொழில்களையும் அநேகமாக முற்றாக அட்லாண்டிக் மாகடலுக்கப்பால் மாற்றிவிட்டால் இங்கிலாந்தின் நிலைமை என்னாகும்?

அது ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்கும்: ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கத்தை ஆங்கிலேய முதலாளி வர்க்கத்துடன் இன்னமும் பிணைத்துவைத்திருக்கும் கடைசிக் கண்ணியை அது உடைத்தெறியும். ஒரு தேசிய ஏகபோகத்தைப் பொதுவில் செயல்படுத்தி வந்ததே அந்தக் கண்ணி. அந்த ஏகபோகம் ஒழிக்கப்பட்டவுடன் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கம் தன் சொந்த நலன்களையும் தன் சொந்த விமோசனத்தையும் தானே கவனித்துச் சமாளிக்கும்படி, கூலி முறைக்கு முடிவு காணும்படி கட்டாயப் படுத்தப்படும். அதுவரை அது காத்திராது என்று நம்புவோமாக.

*1881, ஜூன் நடுவில்*
*எழுதப்பட்டது*

*1881, ஜூன் 18,*
*The Labour Standard, இதழ் 7ல்*
*தலையங்கமாக வெளி வந்தது*

## முன்மாதிரியான இரண்டு நகராட்சி மன்றங்கள்

உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழிலாளர் இயக்கங்களைப் பற்றித் தகவல் கொடுத்து வருவோம் என்று நம் வாசகர்களுக்கு வாக்களித்திருந்தோம். அவ்வப்பொழுது அமெரிக்காவிலிருந்து கிடைத்த செய்திகளை நம்மால் கொடுக்க முடிந்தது. இன்று பிரான்ஸிலிருந்து கிடைத்த சில விஷயங்களைக் கொடுக்க முடிந்திருக்கிறது. நம் தலையங்கப் பகுதிகளில் விவாதிக்கத்தகுந்த முக்கியத்துவமுள்ளவை அவை.

இந்நாட்டில் இன்னமும் வழக்கில் இருந்து வரும் பல பொது வாக்குப்பதிவு முறைகள் பிரான்ஸில் இல்லை. நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு ஒரு வகையான வாக்குரிமை வாக்குப்பதிவு முறை, நகராட்சி மன்றத் தேர்தல்களுக்கு மற்றொரு வகை, வெஸ்ட்ரி தேர்தல்களுக்கு இன்னொரு வகை என்றெல்லாம் இருப்பதற்குப் பதிலாக எங்கும் சாதாரண அனைத்து மக்கள் வாக்குரிமை வாக்குச் சீட்டுப் பதிவு என்பதே விதியாக இருக்கின்றன. பிரான்ஸில் சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சி அமைக்கப் பெற்ற போது நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு மட்டுமின்றி எல்லா நகராட்சி மன்றத் தேர்தல்களுக்கும் தொழிலாளி வர்க்க வேட்பாளர்களை நிறுத்துவதென்று தீர்மானிக்கப் பட்டது. உண்மையில், பிரான்ஸில் கடந்த ஜூன் 9ம் நாளன்று நடந்த நகராட்சி மன்றத் தேர்தல்களில் அந்த இளங் கட்சி தொழில் புரியும் பல நகரங்களிலும் கிராமக் கம்யூன்களிலும்—குறிப்பாக சுரங்கத் தொழிலுள்ள கம்யூன்களிலும்—வெற்றி பெற்றது. தனித்தனி வேட்பாளர்

கள் வெற்றி பெற்றது மட்டுமல்ல, சில இடங்களில் நகராட்சி மன்றங்களில் பெரும்பான்மை கூட பெற முடிந்தது. ஒரு நகராட்சி மன்றம் முழுவதுமே தொழிலாளர்களின் வசமாயிற்று. அதைப் பற்றி இப்போது சொல்லப் போகிறோம்.

*The Labour Standard* பத்திரிகையை நிறுவுவதற்குச் சற்று முன்னர், பெல்ஜிய நாட்டு எல்லைக்கு வெகு அருகாமையில் உள்ள ருபே நகரத்தில் தொழிற்சாலைத் தொழிலாளிகளின் வேலைநிறுத்தம் ஒன்று நடந்தது. நகரை வசப்படுத்திக்கொள்ள அரசாங்கம் துருப்புகளை உடனே அனுப்பி வைத்தது. அதன் வழியாக, ஒழுங்கை நிலை நாட்டும் சாக்கில் (ஒழுங்குக்கு அபாயம் எதுவும் ஏற்படவில்லை) துருப்புகள் தலையிடுவதற்குச் சாக்காகப் பயன்படக் கூடிய செயல்களில் வேலைநிறுத்தக்காரர்கள் இறங்கும்படி ஆத்திரமூட்ட முயன்றது. ஆனால் மக்கள் அமைதியாக இருந்தனர். அவர்கள் எல்லா ஆத்திரமூட்டல்களையும் எதிர்த்து நிற்பதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று அந்த நகராட்சி மன்றத்தின் செய்கையாகும். இந்த நகராட்சி மன்றத்தில் தொழிலாளிகளே பெரும்பான்மையினர். அதில் வேலை நிறுத்த விஷயம் எடுத்துக் கொள்ளப்பட்டு வெகுவாக விவாதிக்கப்பட்டது. அதன் விளைவாக, வேலைநிறுத்தக்காரர்கள் செய்தது சரியே என்று நகராட்சி மன்றம் அறிவித்ததோடு அல்லாமல் வேலை நிறுத்தக்காரர்களை ஆதரித்து 50,000 பிராங்கு (2,000 பவுன்) நிதியும் கொடுக்கத் தீர்மானித்தது. ஆனால் அந்த மானியத்தை வழங்கமுடியாமற் போயிற்று; காரணம், பிரெஞ்சுச் சட்டப்படி, நகராட்சி மன்றங்களின் எந்தத் தீர்மானங்களேனும் நகராட்சி மன்ற அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டவையாக மாவட்ட ஆளுநர் கருதினால் அத்தீர்மானங்களை ரத்துச் செய்யும் உரிமை அவருக்கு உண்டு. என்றபோதிலும், நகரத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதித் தலைமை வேலைநிறுத்தத்துக்கு அளித்த பலமான தார்மீக ஆதரவு தொழிலாளிகளுக்கு மாபெரும் மதிப்புள்ளதாக இருந்தது.

பிரான்ஸின் மத்தியில் உள்ள (அல்லியே மாவட்டத்தைச் சேர்ந்த) கமென்த்ரீ நகரின் சுரங்கக் கம்பெனி ஜூன் 8ம் நாளன்று 152 தொழிலாளிகளை வேலையிலிருந்து

நீக்கிவிட்டது; மேலும் பாதகமான, புதிய வேலை நிபந்தனைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிய மறுத்தனர். மேலும் மோசமான வேலை நிபந்தனைகளைப் படிப்படியாகப் புகுத்துவதற்குக் கொஞ்ச காலமாகப் பயன்படுத்தி வந்த ஓர் அமைப்புமுறையின் ஒரு பகுதியாக இது இருந்ததினால் சுரங்கத் தொழிலாளிகள் அனைவரும்—சுமார் 1600 பேர்—வேலைநிறுத்தம் செய்தனர். அவர்களைப் பயமுறுத்திப் பணியவைக்கவோ, ஆத்திரமூட்டவோ வழக்கம்போல் அரசாங்கம் உடனே துருப்புகளை அனுப்பிவைத்தது. எனினும், இந்நகரத்திலும் நகராட்சி மன்றம் உடனே தொழிலாளிகளின் கோரிக்கையை ஆதரித்து நின்றது. ஜூன் 12ல் நடந்த (இத்தனைக்கும் அது ஒரு ஞாயிற்றுக்கிழமை) கூட்டத்தில் பின்வருமாறு தீர்மானங்களை நிறைவேற்றியது:

1. எவர்களுடைய வேலை எல்லோருடைய வாழ்வுக்கும் ஆதாரமாக இருக்கிறதோ அவர்களுடைய வாழ்வை உறுதிப்படுத்துவது சமுதாயத்தின் கடமை; அக்கடமையை அரசு நிறைவேற்ற மறுத்தால் கம்யூன்கள் அதை நிறைவேற்றித் தீர வேண்டும்; எனவே, உச்ச அளவில் வரி செலுத்துகிற நகரவாசிகளின் ஒப்புதலோடு 25,000 பிராங்கு (1,000 பவுன்) கடன் வாங்கிச் சுரங்கத் தொழிலாளிகளின் நலனுக்குப் பயன்படுத்துவது என்று இந்த நகராட்சி மன்றம் தீர்மானிக்கிறது; தம்மைச் சேர்ந்த 152 தொழிலாளிகள் நியாயமின்றி வேலையிலிருந்து நீக்கப்பட்டதால் அவர்கள் வேலைநிறுத்தம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

நகராட்சி மன்றத் தலைவரின் ரத்து அதிகாரமுள்ள வாக்கு நீங்கலாக ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. மதிப்புள்ள தேசியச் சொத்தாகிய கமென்த்ரி சுரங்கங்களை அரசு ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனிக்கு விற்று அதன் வழியாக அங்கே வேலை செய்கிற தொழிலாளிகளை அந்தக்கம்பெனியின் தயவிலே விட்டுவிட்டுள்ளது; எனவே, அந்தச் சுரங்கத் தொழிலாளிகளைக் கம்பெனி ஒடுக்கிவருவது அவர்களின் வாழ்வையே நாசமாக்கும் அளவுக்குப் போகாமல் பார்த்துக் கொள்வது அரசின் கடமையாகும்; ஆனால், அரசு தற்சமயம் நடக்கும் வேலைநிறுத்தத்தின் போது கம்பெனிக்குத் துணையாகத் துருப்புகளைக்

கொடுத்துத் தனது நடுநிலையையுங்கூடக் கைவிட்டுக் கம்பெனியின் பக்கம் சேர்ந்திருக்கிறது.

தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாப்பது இந்நகராட்சி மன்றத்தின் கடமை. எனவே, தொழிலாளி வர்க்கத்தின் நலன்களின் பேரால் இந்நகராட்சி மன்றம் மாவட்டத் துணை ஆளுநரைக் கேட்டுக் கொள்கிறதாவது:

1. துருப்புகள் உடனே திருப்பியழைக்கப்பட வேண்டும்; அவை இங்கிருப்பதற்கு நியாயமே கிடையாது; அவை இங்கிருப்பது ஆத்திரமூட்டலேயாகும்;

2. கம்பெனி நிர்வாகியிடம் பேசி வேலைநிறுத்தத்தை உண்டாக்கிவிட்ட நடவடிக்கையை ரத்துச் செய்யுமாறு தூண்ட வேண்டும்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

அந்நகராட்சி மன்றம் மூன்றுவதொரு தீர்மானத்தையும் ஒருமனதாக நிறைவேற்றியது; மேலே தீர்மானிக்கப்பட்ட கடனை நகராட்சி மன்றத்தின் வறுமையின் காரணமாகத் திருப்பிக் கொடுக்கமுடியாமற் போகலாம் என்று அஞ்சி வேலைநிறுத்தக்காரர்களுக்கு உதவியாகப் பொது மக்களிடமிருந்து நிதி திரட்டுவது என்றும் பிரான்ஸிலுள்ள மற்ற எல்லா நகராட்சி மன்றங்களும் அந்நிதிக்கு மானியம் அளிக்குமாறு அறைகூவி அழைப்பதென்றும் அத்தீர்மானம் கூறுகிறது.

நாடாளுமன்றத்தில் மட்டுமின்றி நகராட்சி மன்றங்களிலும் மற்றெல்லா ஊராட்சி மன்றங்களிலும் தொழிலாளிகள் இருப்பதின் சிறப்புக்கு இது ஒரு எடுப்பான எடுத்துக்காட்டாகும். அந்தந்த நகராட்சி மன்றங்கள் தொழிலாளிகளுக்குத் துணையாக நிற்கிறவையாக இருந்தால் இங்கிலாந்தில் பல வேலைநிறுத்தங்கள் வேறுவிதமாக முடிந்திருக்குமே! பெரும்பாலும் தொழிலாளிகளால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஆங்கிலேய நகராட்சி மன்றங்களிலும் ஊராட்சி மன்றங்களிலும் அநேகமாக எல்லோருமே முதலாளிகளாகவும் அவர்களின் நேரடியான அல்லது மறைமுகமான ஏஜெண்டுகளாகவும் (வழக்குரைஞர்கள் முதலானவர்கள்)—மிஞ்சிப்போனல், கடைக்காரர்களாகவும்—உள்ளனர்.

ஒரு வேலைநிறுத்தமோ கதவடைப்போ துவங்கியவுடனே உள்ளூர் ஆட்சிமன்றங்களின் தார்மீக, பொருளாயதச்

சக்தி முழுவதும் முதலாளிகளுக்குச் சாதகமாகத் தொழிலாளிகளை எதிர்த்துப் பயன்படுத்தப்படுகிறது. பிரான்ஸில் துருப்புகளைப் பயன்படுத்துவது போலவே இங்கும் தொழிலாளிகளைச் சட்டவிரோதமான செயல்களில் இறங்கும்படி ஆத்திரமூட்டிவிட்டு வேட்டையாடுவதற்குப் போலீஸுங்கூட (தொழிலாளிகளின் ஜேபியிலிருந்து சம்பளம் பெறுகிற போலீஸுங்கூட) பயன்படுத்தப்படுகிறது.

மிகப் பெரும்பான்மையான வழக்குகளில் ஏழ்மைச் சட்ட அதிகாரிகள் தொழிலாளிகளுக்கு நிவாரணம் அளிக்க மறுக்கின்றனர்; விருப்பம் இருந்தால் அவர்கள் வேலை செய்யட்டுமே என்பது அவ்வதிகாரிகளின் அபிப்பிராயம். இது இயல்புதான். நகர, ஊராட்சி மன்ற அதிகாரிகளாக இருக்கத் தொழிலாளிகளால் அனுமதிக்கப்பட்டிருக்கும் இவ்வர்க்கத்தினரின் கருத்தில் வேலைநிறுத்தம் என்பது சமுதாய அமைப்புமுறையை எதிர்க்கும் பகிரங்கமான கலகமாகும், தனிச் சொத்துடைமையின் புனிதமான உரிமைகளை எதிர்க்கும் கெடு செயலாகும். எனவே, தொழிலாளி வர்க்கம் நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கு முதலாளிகளையும் முதலாளிகளின் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க ஒப்புக் கொண்டு வருகிற வரை நகராட்சி, ஊராட்சி மன்றங்களின் மாபெரும் தார்மீக, பொருளாதய அதிகாரம் முழுவதையும் முதலாளிகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறது.

இரண்டு பிரெஞ்சு நகராட்சி மன்றங்களின் செய்கை பல பேர்களின் கண்ணைத் திறந்துவிடும் என்று நம்புகிறோம். ''இப்படிப்பட்ட விவகாரங்களை பிரான்ஸிலே மேலாகச் சமாளிக்கிறார்கள்'' என்று என்றென்றும், ஆங்கிலேயத் தொழிலாளிகளைப் பற்றியும் சொல்லப்படுமா? ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கத்திடம் முதிர்ந்த, வலுவான அமைப்பும், நெடுங்கால அரசியல் சுதந்திரங்களும் நீண்ட அரசியல் செய்கை அனுபவமும் உள்ளன; அதனால் மற்ற எந்த ஐரோப்பிய நாட்டுத் தொழிலாளி வர்க்கத்தையும் விட அதற்கு மிகப் பெரிய அனுகூலங்கள் உள்ளன. என்றபோதிலும், ஜெர்மானியர்கள் நாடாளுமன்றத்துக்குப் பன்னிரண்டு தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகளைத்

தேர்ந்தெடுத்து அனுப்பமுடிந்தது; மற்றும், ஜெர்மானியத் தொழிலாளர்களும் பிரெஞ்சுக்காரர்களும் பல நகராட்சி மன்றங்களில் பெரும்பான்மை பெற்றுள்ளனர். இங்கிலாந்தில் வாக்குரிமை வரம்பிட்டுக் குறுக்கப்பட்டிருப்பது உண்மை. என்ருலும் இப்போதுங்கூட எல்லாப் பெரிய நகரங்களிலும் தொழில்வளமுள்ள மாவட்டங்களிலும் வாக்காளர்களில் தொழிலாளி வர்க்கத்தினருக்குப் பெரும்பான்மை உண்டு. அவர்கள் மட்டும் விரும்பிஞல் போதும், அந்த உள்ளார்ந்த பெரும்பான்மை பயன்திறமுள்ள பெரும்பான்மையாகிவிடும், அரசில் ஒரு சக்தியாக ஆகிவிடும், உழைக்கும் மக்கள் திரண்டு குவிந்துள்ள எல்லா வட்டாரங்களிலும் ஒரு சக்தியாக ஆகிவிடும். நாடாளுமன்றத்திலும், நகராட்சி மன்றங்களிலும், காப்பாளர்களின் உள்ளூர் காரியங்களிலும் பிறவற்றிலும் தொழிலாளிகள் இருந்துவிட்டால் போதும், மக்களை அடிக்கடி ஏறிமிதித்து அடக்கும் டோக்பெர்ரிகளின் திட்டங்களையும் முயற்சிகளையும் குலைக்கும் திறமுள்ள தொழிலாளி வர்க்க அரசுத்துறையாளர்களும் உருவாவதற்கு எத்தனைக் காலம் பிடிக்கும்?

*1881, ஜூன் இரண்டாவது பாதியில் எழுதப்பட்டது*

*1881, ஜூன் 25, The Labour Standard, இதழ் 8ல் தலையங்கமாக வெளி வந்தது*

## அமெரிக்க உணவும் நிலப் பிரச்சினையும்

1837 இலையுதிர் காலந்தொட்டு நியூயார்க் நகரிலிருந்து நிதி பேரக் கிலிகளும் வர்த்தக நெருக்கடிகளும் இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்படுவதைப் பார்ப்பது மிகவும் பழக்கமாகிவிட்டிருக்கிறது. பத்தாண்டுகளுக்கு ஒரு தடவையாகத் தொழில்துறையில் ஏற்படும் பின்னடைவுகளில் இரண்டில் குறைந்தபட்சம் ஒன்ருவது அமெரிக்காவில் துவங்கியதாகும். ஆனல், அதற்கு மேலும் போய் பிரிட்டிஷ் வேளாண்மைத்துறையிலுள்ள பழஞ்சிறப்புள்ள உறவுகளை அமெரிக்கா கவிழ்ப்பதும், நிலப்பிரபுவுக்கும் குத்தகைதாருக்கும் இடையேயுள்ள பழங்காலத்திய நிலப்பிரபுத்துவ உறவுகளை அடியோடு மாற்றுவதும், ஆங்கிலேய வாடகைமுறைகளை உடைத்து நொறுக்குவதும், ஆங்கிலேயப் பண்ணைகளைத் தரிசாகப் போடச் செய்வதும் பத்தொன்பதாம் நூற்ருண்டின் கடைசிக் கால்பகுதிக்கு என்று விட்டுவைத்த காட்சியாகும்.

ஆம், அப்படித்தான் இருக்கிறது. மேற்குப் புல்வெளிக் கன்னி நிலம்—துண்டு துண்டாக அல்லாமல் ஆயிரக்கணக்கான சதுர மைல் பரப்பில் இன்று சாகுபடி செய்யப்பட்டு வரும் கன்னி நிலம்—இப்போது கோதுமை விலையை ஆளத் தொடங்கியுள்ளது, அதன் விளைவாக, கோதுமை சாகுபடி நிலத்தின் வாடகையையும் ஆளத் தொடங்கியுள்ளது. பழைய நிலம் எதுவும் அத்துடன் போட்டியிட முடியாது. அது அற்புதமான நிலம்; சமதரையாகவோ சற்றே தாழ்ந்துயர்ந்தோ செல்லும் நிலம்; கொடிய நிலவெழுச்சிகளால் பாதிக்கப்படாதது, புவியியலில் மூன்ரும் காலத்தைச்

சேர்ந்த ஒரு மாகடலின் படுகையில் மெள்ள வண்டலிட்ட அதே நிலைமையில் இருந்து வருவது; கல்லோ பாறையோ மரமோ ஏதும் இல்லாதது, நிலத்தைப் பண்படுத்துவதற்கான உழைப்பு எதுவும் இன்றியே உடனடிச் சாகுபடிக்கு இலாயக்கான நிலம். துப்புரவாக்கத் தேவையில்லை, வடிகால் வெட்டவும் தேவையில்லை. கலப்பையால் கீறியவுடன் விதைப்பாட்டுக்கு இலாயக்காகிவிடுகிறது. உரம் போடாமலே ஒன்றன்பின் ஒன்ருக இருபது முப்பது தடவை கோதுமை விளைச்சல் கொடுக்கும். மாபெரும் அளவில் வேளாண்மைக்குத் தகுதியுள்ள நிலம், மாபெரும் அளவில் வேளாண்மை நடக்கிறது. ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த விவசாய நிலச் சொந்தக்காரர்களின் சிறு பண்ணைகள் போல் அல்லாமல் தன்னுடைய பண்ணைகள் பெரியவை என்று பிரிட்டிஷ் சாகுபடியாளர் பெருமைப்பட்டுக் கொள்வது உண்டு. ஆனல், அமெரிக்கப் புல்வெளிப் பண்ணைகளோடு ஒப்பிட்டால்—40,000 ஏகராவும் அதற்கு மேலும் பரப்புள்ளதாய், படைவீரர்கள் போல் பயிற்றுவிக்கப்பட்டும் ஆணைக்கு உட்படுத்தப்பட்டும் ஒழுங்கமைக்கப்பட்டும் உள்ள ஆட்களையும் குதிரைகளையும் கருவிகளையும் பட்டாளம் பட்டாளமாகக் கொண்டு சாகுபடி செய்யப்படுகிற பண்ணைகளோடு ஒப்பிட்டால்—பிரிட்டனின் மிகப் பெரிய பண்ணைகள் கூட எந்த மூலைக்கு?

வேளாண்மையில் நிகழ்ந்துள்ள இந்த அமெரிக்கப் புரட்சி, அமெரிக்கர்கள் புனைந்துள்ள படி முற்றிலும் உருமாற்றப் பெற்றுள்ள போக்குவரத்துச் சாதனங்களுடன் சேர்ந்து ஐரோப்பாவுக்கு மிகக் குறைந்த விலையில் கோதுமை அனுப்பி வைக்கிறதினல் அதை எதிர்த்து எந்த ஐரோப்பியச் சாகுபடியாளனுலும் போட்டி போட முடியாது—குறைந்தபட்சம் அவன் வாடகை கொடுத்து வரவேண்டியிருக்கும் வரையாவது. இதை முதன்முதலில் உணர்த்திய 1879ம் ஆண்டைப் பாருங்கள். அப்போது மேற்கு ஐரோப்பா முழுவதிலும் விளைச்சல மோசமாக இருந்தது, இங்கிலாந்தில் அறவே சாவியாகிவிட்டது. என்ற போதிலும், அமெரிக்கத் தானியத்தின் புண்ணியத்தால் விலை வாசிகள் அநேகமாக அப்படியே நிலை பெற்றிருந்தன. முதல் தடவையாக பிரிட்டிஷ் சாகுபடியாளன்

ஒரே நேரத்தில் விளைச்சல் சாவியாய்ப் போனதையும் கோதுமைக்குக் குறைவான விலைகளையும் கண்டான். அப்பு றம் விவசாயிகள் கிளர்ந்தெழத் தொடங்கினர், நிலச் சொந்தக்காரர்கள் பயந்து போயினர். அடுத்த வருடம் விளைச்சல் மேலாயிருந்தது, விலைவாசிகள் மேலும் குறைந் தன. அமெரிக்காவில் உள்ள உற்பத்திச் செலவும் போக்கு வரத்துச் செலவும் சேர்ந்துதான் இப்போது தானிய விலை யை நிர்ணயிக்கின்றன. எந்த அளவுக்குப் புதிதாகப் புல் வெளி நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவரப்படுகின்றன வோ அதற்குத்தகவாக இப்படித்தான் மேன்மேலும் ஆண்டு தோறும் நடக்கும். அந்த வேலைக்கு விவசாயப் பட்டாளங் கள் தேவை; அவற்றை நாமே ஐரோப்பாவில் தேடிப்பிடித்து அனுப்புகிறோம்—குடியேறிகளை அனுப்புவதின் மூலமாக.

நிற்க. முன்பெல்லாம் விவசாயிக்கும் நிலச்சொந்தக் காரனுக்கும் ஒரு ஆறுதலாயினும் இருந்தது, தானியத் தில் இலாபம் இல்லாமற் போனாலும் இறைச்சியில் இலா பம் கிடைக்கும் என்று. விளைச்சல் நிலத்தை மேய்ச்சல் நிலமாக்கியதும் மீண்டும் எல்லாம் இன்பமயமாகிவிட்டது. ஆனால் இப்போது அந்த வழிதுறையும் அடைக்கப்பட்டுள் ளது. என்றும் அதிகரித்துக் கொண்டேயிருக்கும் அளவில் அமெரிக்க இறைச்சியும் அமெரிக்கக் கால்நடையும் ஏற்று மதி செய்யப்படுகின்றன. அது மட்டுமல்ல. தங்களிடம் மிகையாக ஏராளமாயிருக்கும் இறைச்சியை (இப்போது வீணடிக்கப்பட்டு வரும் இறைச்சியை) ஐரோப்பாவுக்கு, குறிப்பாக இங்கிலாந்துக்கு, ஏற்றுமதி செய்வதற்கு இட மளிக்கிற வழிமுறைகளைத் தேடிக் கொள்வதில் குறைந்த பட்சம் இரண்டு மாபெரும் கால்நடை உற்பத்தி நாடுகள் கண்ணும் கருத்துமாயுள்ளன. இன்றைய விஞ்ஞான நிலை யையும் விஞ்ஞானத்தைச் செயல்படுத்துகிறதிலுள்ள விரை வான முன்னேற்றத்தையும் பார்க்கும்போது, குறைந்தபட் சம் ஒரு சில ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவிலிருந்தும் தென் அமெரிக்காவிலிருந்தும் மாட்டிறைச்சியும் ஆட்டிறைச்சி யும் நிறைநேர்த்தியாகப் பதனம் செய்யப்பட்டு ஏராள மான அளவில் இறக்குமதி செய்யப்படும் என்று நாம் உறு தியாக நம்பலாம். அப்போது பிரிட்டிஷ் சாகுபடியாளனின் செழுமை என்னவாகும், பிரிட்டிஷ் நிலப்பிரபுவின் நீண்ட

வாடகைப் பட்டியல் என்னவாகும்? பழவகைகளை உற்பத்தி செய்யலாம், மெத்த சரி. அவை ஏற்கெனவே சந்தைக்கு நிறைய வருகின்றன. இந்த இன்பண்டங்களை மேலும் அதிகமாக பிரிட்டிஷ் தொழிலாளி சாப்பிடமுடியும். ஆனால் அதற்கு முன் அவனுடைய கூலியை உயர்த்தியாக வேண்டும்.

இந்தப் புதிய அமெரிக்க விவசாயப் போட்டியின் பாதிப்பை ஐரோப்பாவும் உணர்ந்துள்ளதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அங்குள்ள சிறிய நிலச்சொந்தக்காரன் பெரும்பாலும் அடமானக் கடனில் மூழ்கிக்கிடக்கிறவன்; பிரிட்டனின், அயர்லாந்தின் சாகுபடியாளன் வாடகை செலுத்துகிறான் என்றால் இவன் வட்டியும் நீதிமன்ற வழக்குச் செலவுகளும் செலுத்துகிறான். இவனும் இந்தப் போட்டியின் பாதிப்பை அதே அளவுக்கு உணர்கிறான். இந்த அமெரிக்கப் போட்டிக்கு ஒரு தனிவழக்கான பாதிப்பு உண்டு: பெருமளவான நிலவுடைமையை மட்டுமின்றிச் சிறு நிலவுடைமையையும் அது இலாபமற்றதாக்கிப் பயனற்றும் போகச் செய்கிறது.

மண் வளத்தை உறிஞ்சித் தீர்க்கும் இந்த முறை—அமெரிக்காவில் இன்று நடைமுறையில் உள்ள வகையில்—என்றென்றும் நீடித்து வர முடியாது, விவகாரங்கள் மீண்டும் சரிப்பட்டு வந்தாக வேண்டும் என்று சொல்லக் கூடும். உண்மை, அது என்றென்றும் நீடித்து வரமுடியாது தான். ஆனால் அந்தச் செயல்முறையை இன்னொரு நூற்றாண்டுக்கு நீடித்து வரக் கூடிய அளவுக்கு மண் வளம் காலியாக்கப்படாத நிலம் நிறைய இருக்கிறது. மேலும், இது போன்ற அனுகூலங்களை அளிக்கும வேறு நாடுகளும் உள்ளன. தெற்கு ருஷ்ய ஸ்டெப்பி சமவெளி முழுவதும் உண்டு. சொல்லப்போனால், வியாபாரம் செய்கிற மனிதர்கள் அங்கேயும் நிலம் வாங்கி அதே காரியத்தைச் செய்திருக்கின்றனர். அர்ஜென்டினா குடியரசில் விரிந்து பரந்த பம்பா சமவெளிகள் உள்ளன; மேலும் வேறு வேறு நாடுகளும் உண்டு. எல்லா நிலங்களும் பெருமளவான வேளாண்மை மலிவான உற்பத்தி எனும் இந்தப் புதிய முறைக்கு இலாயக்கானவை. எனவே, இந்தச் செயல் முறை முடிவடையுமுன் ஐரோப்பாவின் பெரிய, சிறிய

நிலப்பிரபுக்கள் அனைவரையும் குறைந்தபட்சம் இரண்டு தடவையாவது கொன்றுவிடப் போதிய காலத்துக்கு நீடித்திருக்கும்.

சரி, இதன் விளைவு என்ன? நிலத்தைத் தேசியமயமாக்கும்படியும் தேசியக் கட்டுப்பாட்டின்கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அந்நிலத்தைச் சாகுபடி செய்யும் படியும் அது நம்மைக் கட்டாயப்படுத்தும்—அதுதான் விளைவாக இருக்கும், இருக்கவும் வேண்டும். அப்பொழுது மட்டுமே, அமெரிக்காவின் அல்லது வேறெந்த தானிய விலையும் இறைச்சி விலையும் எப்படியிருந்தபோதிலும் நிலத்தைச் சாகுபடி செய்வது ஒருங்கே சாகுபடியாளர்களுக்கும் நாட்டுக்கும் மீண்டும் இலாபகரமாயிருக்கும். இதற்கிடையே, நிலப்பிரபுக்கள் அமெரிக்காவுக்கு உண்மையிலே போகிறதானுல் (போகலாமா என்று யோசித்துக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது) நலமாகப் போய் வாருங்கள் என்று ஆசி கூறுகிறோம்.

*1881, ஜூன் பிற்பகுதியில்*
*எழுதப்பட்டது*

*1881, ஜூலை 2,*
*The Labour Standard, இதழ் 9ல்*
*தலையங்கமாக வெளி வந்தது*

# தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கக் கருத்துப்படி கூலி முறை

வேருெரு பத்தியில் திரு. ஜான் நோபிள் என்பவரிட மிருந்து வந்த கடிதத்தைப் பிரசுரித்திருக்கிறேம். ஜூன் 18ன் *The Labour Standard*, பத்திரிகையின் ஒரு தலையங் கக் கட்டுரையில்* உள்ள நமது சில குறிப்புரைகளைப் பற்றி அவர் குறை கூறுகிருர். வரலாற்று விஷயங்கள் அல்லது பொருளாதாரத் தத்துவங்கள் பற்றி வாதப்போர் நடத்து வதற்கு நமது தலையங்கப் பத்திகளைப் பயன்படுத்த முடியாது. என்றபோதிலும், இந்த ஒரு தடவை அவருக் குப் பதில் அளிப்போம். அவர் அதிகாரபூர்வமான கட்சிப் பதவி வகித்த போதிலும் நேர்மையானவராகத் தெரி கிருர்.

தானியச் சட்டங்களை ரத்துச் செய்வதின் குறிக்கோள் ''ரொட்டி விலையைக் குறைத்து அதன் வழியாக ரொக்கக் கூலி விகிதங்களைக் குறைப்பதே'' என்று நாம் உறுதியிட் டுக் கூறியதற்கு அது ''காப்புமுறைவாதிகளின் கருத்துப் பிழை'' என்றும், அதை எதிர்த்து விடாப்பிடியாகச் சங்கம் போராடிவருகிறது என்றும் திரு. நோபிள் பதி லளித்து அதை நிருபிப்பதற்கு ரிச்சர்ட் காப்டென் சொற் பொழிவுகளிலிருந்து சில மேற்கோள்களையும் சங்கக் கவுன் ஸிலின் ஒரு பிரகடனத்தையும் தருகிருர்.

பிரச்சினையிலிருக்கும் இந்தக் கட்டுரையை எழுதியவர் அச்சமயம் மாஞ்செஸ்டரில் உற்பத்தியாளர்களிடையே தானும் ஓர் உற்பத்தியாளஞக வாழ்ந்து வந்தார். சங்கத்

---

* இப்பதிப்பின் 26-33 பக்கங்கள் பார்க்க.—(ப-ர்.)

தின் அதிகாரபூர்வமான சித்தாந்தம் என்ன என்று அவருக்கு நன்ருகத் தெரியும், உண்மைதான். அதை மிகவும் சுருக்கி மிகப் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட வகையில் (ஏனெனில் அதில் பல்வேறு வகைகள் உண்டு) சொல்வதென்ருல் இவ்வாறு சொல்லலாம்: தானியம் மீதுள்ள தீர்வையை ரத்துச் செய்வதால் நம் வெளிநாட்டு வர்த்தகம் அதிகரிக்கும், நம் இறக்குமதிகளும் நேரடியாக அதிகரிக்கும், அதற்குப் பரிமாற்றமாக வெளிநாட்டு வாடிக்கைக்காரர்கள் நம் தொழிற் பொருட்களை வாங்குவார்கள், அதன் வழியாக நம் தொழிற் பொருட்களுக்குக் கிருக்கி அதிகரிக்கும்; அதன் வழியாக நம் தொழில்துறைத் தொழிலாளர் கூட்டத்தின் உழைப்புக்குக் கிருக்கி அதிகரிக்கும், எனவே கூலியும் உயர்ந்துதீர வேண்டும். இந்தத் தத்துவத்தை நாள்தோறும் ஆண்டுதோறும் திருப்பித் திருப்பிச் சொல்வதின் மூலமாக அச்சங்கத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் (ஆழமற்ற பொருளாதாரவாதிகள் அவர்கள் என்பதிஞல்) திடுக்கிடத்தக்க வன்கூற்றைக் கடைசியிலே வெளியிட முடிந்தது; அதாவது, இலாபத்துக்குத் தலைகீழ் விகிதமாயல்லாமல் உணவு விலைக்குத் தலைகீழ் விகிதத்தில் கூலியின் ஏற்றமும் இறக்கமும் இருக்கிறது என்றும், ரொட்டி விலையுயர்வு குறைவான கூலியையும் ரொட்டி விலை மலிவு உயர்வான கூலியையும் குறிக்கிறது என்றும் கூறிஞர்கள். தானியத் தீர்வைகள் ரத்தாவதற்கு முன்னும் பின்னும் பத்தாண்டுக்கு ஒரு முறை நிகழ்ந்து வந்த வர்த்தகப் பின்னடைவுகள் தானியச் சட்டங்களிஞல் ஏற்பட்ட சாதாரணமான விளைவுகளே என்றும், அந்த வெறுக்கத்தக்க சட்டங்களை நீக்கியவுடன் அவை மறைந்து தீர வேண்டியதே என்றும் அச்சங்கத்தின் பிரதிநிதிகள் அறிவித்தனர். மற்றும், பிரிட்டிஷ் ஜவுளி இல்லாமல் உடையின்றி நடுங்கித் தவித்து பிரிட்டிஷ் உற்பத்தியாளனின் உற்பத்திப் பொருளுக்காக ஏங்கிக் கிடக்கும் வக்கற்ற வெளிநாட்டாருக்கும் பிரிட்டிஷ் உற்பத்தியாளனுக்கும் குறுக்கே பெருந் தடையாக நிற்பவை தானியச் சட்டங்கள் மட்டுமே என்றும் அறிவித்தனர். திரு. நோபிள் மேற்கோள் காட்டிய பகுதியில் காப்டென் அப்படித்தான் உண்மையிலே சொல்ல முடிந்தது: அதாவது,

1839-1842 இடையே நிகழ்ந்த வர்த்தகத் தேக்கமும் கூலி வீழ்ச்சியும் அவ்வாண்டுகளில் நிலவிய மிக உயர்வான தானிய விலையினால் விளைந்தவையே, என்று. ஆனால் அது அப்படியொன்றும் இல்லை. பத்தாண்டுகளுக்கு ஒரு தடவையாக இதுவரை ஒழுங்குமுறையோடு திரும்பத்திரும்ப நிகழ்ந்து வரும் வர்த்தகத் தேக்கத்தின் ஒழுங்குமுறையான தசைகளில் ஒன்றே அது. உண்மையில் இத்தசை மோசமான விளைச்சலாலும் பேராசை பிடித்த நிலப்பிரபுத்துவச் சட்டத்தின் முட்டாள்தனமான குறுக்கீட்டாலும் நீடிக்கப்பட்டும் தீவிரப்படுத்தப்பட்டும் உள்ளது.

நிற்க. இதுதான் காப்டெனின் அதிகாரபூர்வமான தத்துவம். கிளர்ச்சியாளன் என்கிற வகையில் எவ்வளவோ கெட்டிக்காரராக இருந்தும் அவர் ஒரு திறமையற்ற வியாபாரி, ஆழமற்ற பொருளாதாரவாதி. அத்தத்துவத்தை அவர் மிகப் பற்றுறுதியுடன் நம்பினார் என்பதில் ஐயமில்லை—இன்று வரை திரு. நோபிள் நம்பி வருவது போல. ஆனால் அச்சங்கத்திலிருந்த பெரும்பகுதியினர் காரியத்தில் கண்ணுள்ள வியாபாரிகள், காப்டெனைவிட அதிகமாக வியாபாரத்தில் கவனம் செலுத்துகிறவர்கள், பொதுவாகவே வெற்றியும் கண்டவர்கள். இவர்களைப் பொறுத்தவரை விவகாரங்கள் முற்றிலும் வேறாயிருந்தன. உண்மை, அயலார் முன்னிலையிலும் பொதுக் கூட்டங்களிலும் குறிப்பாகத் தங்கள் தொழிலாளிகள் முன்னிலையிலும் இந்த அதிகாரபூர்வமான தத்துவமே எடுத்துப் பேசத்தக்கதாகப் பொதுவாகக் கருதப்பட்டது. ஆனால் வியாபாரிகள் வியாபாரத்தில் கண்ணாயிருக்கும் போது தங்கள் வாடிக்கைக்காரர்களிடம் மனம் திறந்து பொதுவாகப் பேசமாட்டார்கள். திரு. நோபிள் அப்படி நினைக்கவில்லையென்றால் அவர் மாஞ்செஸ்டர் பங்கு மார்க்கெட் பக்கம் போகாமல் விலகி நிற்பதே நல்லது. தானியத்தில் சுயேச்சையான வாணிகத்தின் விளைவாக எவ்வழியில் கூலி உயர்ந்து தீர வேண்டும் என்று சற்று நெருக்கிக் கேட்டால் போதும், இந்தப் பதில் வெளிவருகிறது: இந்த உயர்வு பண்டங்கள் வடிவிலுள்ள கூலியைப் பாதிக்கும் என்று கருதப்படுகிறது, ரொக்கக் கூலி விகிதம் உயராமல் போவது சாத்தியமே—என்றாலும் இது சாராம்சத்தில் கூலியுயர்வு

தானே? மேலும் நெருக்கிக் கேட்டால் வழக்கமாக வெளி வரும் பதில் இதுதான்: ரொக்கக் கூலி விகிதம் விழவுங் கூடும், ஆனால் அன்று தொழிலாளி அனுபவித்து வந்த வசதிகளை விட இந்தக் குறைந்த பணத்தால் கிடைக்கிற வசதிகள் மேலாகவே இருக்கும். மற்றும், வாணிகத்தில் எதிர்பார்க்கப்படும் மாபெரும் விரிவாக்கத்தை எப்படிச் சாதிப்பது, அதற்கு வழி என்ன என்று மேலும் நெருங்கிச் சில கேள்விகள் கேட்டால், இந்தக் கடைசி நேர்வைத் தான் தாங்கள் முக்கியமாக நம்பி இருப்பதாக விரைவிலே சொல்லக் கேட்பீர்கள்: அதாவது, ரொக்கக் கூலி விகிதம் குறையும், ஆனால் ரொட்டி முதலியவற்றின் விலைவாசி வீழ்ச்சியோடு சேர்த்துப் பார்க்கும் போது அது இந்தக் கூலிக் குறைவை ஈடுசெய்வதற்கு மேலாகவே இருக்கும், என்று. மேலும், ரொக்கக் கூலி விகிதத்தைக் குறைத்து, அதன் வழியே வெளிநாட்டுப் போட்டியின் மண்டையில் அடிப்பதற்காகத்தான் மலிவான ரொட்டி வேண்டும் என் கிறோம் எனும் தங்கள் அபிப்பிராயத்தை ஒளிக்கக்கூட முயலாத பேர்வழிகளும் நிறைய இருந்தார்கள். எதார்த் தத்தில், அச்சங்கத்தில் பெரும்பகுதியினராக இருந்த முதலாளிகளின், வியாபாரிகளின் நோக்கமும் குறிக்கோ ளும் இதுதான்; வர்த்தகப் பேர்வழிகளோடு காரியம் செய்யும் பழக்கம் உள்ளவர்களுக்கு, எனவே அந்தப் பேர் வழிகளின் சொல்லை வேதவாக்காக எப்போதும் எடுத்துக் கொள்ளாத பழக்கம் உள்ளவர்களுக்கு இதைப் புரிந்து கொள்வதில் அவ்வளவாகக் கஷ்டம் இருக்கவில்லை. இதைத் தான் நாம் சொன்னோம், மீண்டும் சொல்கிறோம். சங்கத் தின் அதிகாரபூர்வமான சித்தாந்தத்தைப் பற்றி நாம் ஒரு வார்த்தையேனும் சொல்லவில்லை. பொருளாதாரத் துறையில் அது ஒரு ''கருத்துப் பிழை'', நடைமுறைத் துறையில் நலத்தின்பாற்பட்ட நோக்கங்களை மறைக்கும் வெறும் திரையேயாகும்—தாங்களே நம்பிவிடும் அளவுக் குச் சில தலைவர்கள் அதை அடிக்கடி திருப்பிச் சொல்லி வந்த போதிலுங்கூட.

25 ஷில்லிங்குக்கு ஒரு குவார்டர் என்கிற கணக்கில் தானியம் கிடைக்கவிருக்கும் வாய்ப்புநிலையை நினைத்துத் தொழிலாளிகள் ''திருப்தியோடு கை துடைத்துக் கொள்

வது'' பற்றி காப்டென் கூறிய வார்த்தைகளை திரு. நோபிள் மேற்கோள் காட்டுவது மிகவும் வேடிக்கையாயிருக்கிறது. அக்காலத்திய தொழிலாளிகள் மலிவான ரொட்டியைத் துச்சமாகக் கருதவில்லை. என்றாலும், அவர்களுக்குக் காப்டென் கூட்டத்தாரின் காரியங்களில் எவ்வளவு ''திருப்தி'' இருந்ததென்றால், சென்ற பல ஆண்டுகளாக இங்கிலாந்தின் வடக்குப் பகுதி முழுவதிலும் உண்மையிலேயே பெரியது எனத்தக்க ஒரு பொதுக் கூட்டத்தையாயினும் சங்கத்தால் நடத்த முடியாதபடி செய்துவிட்டிருந்தார்கள். 1843ல் ஸால்ஃபோர்ட் நகர மண்டபத்தில் சங்கம் பொதுக் கூட்டம் நடத்துவதற்குச் செய்த கடைசி முயற்சியின் போது இவ்வாசிரியரும் வந்திருந்து மக்கள் சாஸனத்துக்குச் சாதகமாக வெறுமே ஒரு திருத்தம் கொண்டு வந்தவுடனே அந்தக் கூட்டம் அநேகமாகக் கலைந்து போனதைப் பார்க்கும் ''திருப்தி'' கிடைத்தது. அன்று முதல் ''நுழைவுச் சீட்டு வழங்கி அனுமதிப்பது'' என்பதே சங்கத்தின் எல்லாக் கூட்டங்களுக்கும் விதியாயிற்று, அந்த நுழைவுச் சீட்டு எல்லோருக்கும் சுளுவாகக் கிடைக்கிறதாயிருக்கவில்லை. அத்தருணத்திலிருந்து ''சார்டிஸ்டுகள் முட்டுக்கட்டை போடுவது'' நின்றுபோயிற்று. சங்கம் பாசாங்கு பண்ணியதுபோல் தங்களை அது பிரதிநிதித்துவப்படுத்தக் கிடையாது என்பதை நிருபிப்பது எனும் குறிக்கோளை உழைப்பாளி சாதித்துக் கொண்டார்கள்.

இறுதியாக, சங்கத்தின் கூலி பற்றியத் தத்துவத்தைப் பற்றிச் சில வார்த்தைகள். ஒரு பண்டத்தின் சராசரி விலை அதன் உற்பத்திச் செலவுக்குச் சமம். அது எந்த வரையளவையை விட்டுமேலும் கீழுமாகப் போகிறதோ அந்த வரையளவைக்குத் திரும்பக் கொண்டு வருவதுதான் கிருக்கிவரத்துக்களின் செய்கையாகும். இது எல்லாப் பண்டங்கள் விஷயத்திலும் உண்மையென்றால், உழைப்பு என்கிற (இன்னும் சுருராகச் சொன்னால், உழைப்புச் சக்தி என்கிற) பண்டத்தின் விஷயத்திலும் உண்மையே. அப்படியானால், கூலி விகிதத்தை நிர்ணயிப்பது தொழிலாளியின் நுகர்வுக்குப் பழக்கமான, அவசியமான பண்டங்களின் விலையேயாகும். அதாவது, மற்ற விஷயநிலைமைகள் அனைத்தும் மாறாது இருந்து வரும் நிலையில், வாழ்க்கைக்குரிய அத்தி

யாவசியப் பண்டங்களின் விலையையொட்டி கூலி ஏறவும் இறங்கவும் செய்கிறது. இது அரசியல் பொருளாதாரத்தின் ஒரு விதி. இதை எதிர்த்து பெரொனெட்-தாம்ப்ஸன், காப்டென், பிரைட் வகையருக்கள் அனைத்தும் என்றென்றும் எதுவும் செய்ய முடியாது. ஆனல் மற்ற விஷய நிலைமைகள் அனைத்தும் எப்போதும் மாருமல் அப்படியே இருப்பதில்லை. எனவே, வேறு பொருளாதார விதிகளின் உடன்போக்கான செய்கை இவ்விதியின் செய்கையை நடைமுறையில் திருத்துகிறது; அது இருண்டு மங்கலாகத் தோற்றம் அளிக்கிறது, சில சமயம் கண்டு கொள்வதற்குச் சிரமப்பட வேண்டிய அளவுக்கு அது இருண்டு மங்கலாகத் தோற்றம் அளிக்கிறது. தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்தின் காலத்திலிருந்து கொச்சைப்படுத்தும் பொருளாதாரவாதிகளுக்கு, விஞ்ஞானச்சிறப்பற்ற பொருளாதாரவாதிகளுக்கு இது ஒரு சாக்காகப் பயன்பட்டது; முதலில் உழைப்புக்கும், பிறகு மற்றெல்லாப் பண்டங்களுக்கும் உண்மையான நிர்ணயிக்கத்தக்க மதிப்பு எதுவும் கிடையாதென்றும் உற்பத்திச் செலவுடன் சம்பந்தமில்லாமல் கிருக்கி வரத்துக்களால் ஏறத்தாழ ஒழுங்கியக்கப்படும் ஏற்ற இறக்குமுள்ள விலை மட்டுமே அவற்றிற்கு உண்டு என்றும், விலைகளை உயர்த்துவதற்கு—எனவே, கூலியை உயர்த்துவதற்கும்—கிருக்கியை அதிகரிக்கச் செய்வதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை என்றும் அவர்கள் பாசாங்கு பண்ண சாக்காயிற்று. அதன் வழியாக, கூலி விகிதத்துக்கும் உணவு விலைக்கும் உள்ள வெறுப்பான தொடர்பை விலக்கி விட்டு, விலையேற்றமுள்ள ரொட்டி குறைந்த கூலியைக் குறிக்கிறதென்றும் மலிவான ரொட்டி உயர்வான கூலியைக் குறிக்கிறதென்றும் சொல்கிற இந்தக் கொச்சையான, நகைக்கத்தக்க சித்தாந்தத்தில் தைரியமாக அதைப் பிரகடனப்படுத்த முடிந்தது.

விலையேற்றமுள்ள, வரிக்குட்பட்டிருந்த ரொட்டியுடன் 1847க்கு முன் இருந்ததை விட இன்றைய மலிவான ரொட்டியுடன் பொதுவாகவே அதே உயர்ந்த நிலையிலோ அதைவிட உயர்வான நிலையிலோ கூலி இருக்கவில்லையா என்று ஒருக்கால் திரு. நோபிள் கேட்களாம். அதற்குப் பதிலளிக்க ஒரு நீண்ட விசாரணை தேவைப்படும்.

ஆனால் இது மட்டும் உறுதி: எங்கே ஒரு தொழிற்கிளை செழித்தும் அதே நேரத்தில் தொழிலாளிகளும் தற்காப்பு விஷயத்தில் பலமாக ஒழுங்கமைத்துக் கொண்டும் உள்ள நிலைமை இருக்கிறதோ அங்கே அவர்களின் கூலி பொதுவாகவே குறையவில்லை, சில சமயம் ஒருக்கால் அதிகரித்தும் இருக்கிறது. அதற்குமுன் அவர்கள் குறைவான கூலி பெற்று வந்ததையே இது நிருபிக்கிறது. எங்கே ஒரு தொழிற்கிளை நலிந்தும் தொழிலாளிகள் தொழிற்சங்கங்களில் பலமாக ஒழுங்கமைக்கப்படாமலும் உள்ள நிலைமை இருக்கிறதோ அங்கே இந்தக் கூலி விலக்கின்றி வீழ்ந்திருக்கிறது, பட்டினி கிடக்கும் தரத்துக்கு அடிக்கடி வீழ்ந்திருக்கிறது. லண்டனின் கிழக்குப் பகுதிக்குச் சென்று நீங்களே பாருங்கள்!

*1881, ஜூலை தொடக்கத்தில்*
*எழுதப்பட்டது*

*1881, ஜூலை 9,*
*The Labour Standard, இதழ் 10ல்*
*தலையங்கமாக வெளி வந்தது*

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

# தொழிலாளர் கட்சி

''கட்சிக் கொள்கையின் பக்கம் போகாதே!'' என்று நண்பர்களும் அனுதாபிகளும் எத்தனையோ தடவை நம்மை எச்சரித்திருக்கிறார்கள் அல்லவா! தற்கால இங்கிலாந்தின் கட்சிக் கொள்கையைப் பொருத்தவரை அவர்கள் சொன்னது முற்றிலும் சரி. ஒரு தொழிலாளர் பத்திரிகை (கட்சிப் பத்திரிகை தற்கால அர்த்தத்தில் அச்சொல்லைப் பயன்படுத்துகிறோம்) விக்காகவோ டோரியாகவே இருக்கக் கூடாது, கன்ஸர்வேடிவ் ஆகவோ லிபரல் ஆகவோ இருக்கக் கூடாது, ராடிகல் (தீவிரம்) ஆகக்கூட இருக்கக் கூடாது. கன்ஸர்வேடிவ்கள், லிபரல்கள், ராடிகல்கள், இவர்கள் அத்தனை பேரும் ஆளும் வர்க்கங்களின் நலன்களை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள், நிலப்பிரபுக்கள் முதலாளிகள் சில்லறை வியாபாரிகள் இடையே மேலோங்கி நிற்கும் பல்வேறு கருத்துச் சாயல்களையே பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். இவர்கள் தொழிலாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்களா என்று பார்த்தால் மிகத்திண்ணமாக இவர்கள் தொழிலாளி வர்க்கத்தைத் தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். தொழிலாளி வர்க்கத்துக்குச் சொந்தத்தில் அரசியல் சமுதாய நலன்கள் உண்டு. அது தன்னுடைய சமுதாய நலன்கள் என்று கருதுகிறவற்றிற்காக எப்படி நிமிர்ந்து போராடியது என்பதைத் தொழிற்சங்கங்களின் வரலாறும் வேலை நேரக் குறைப்பு இயக்கத்தின் வரலாறும் காட்டுகின்றன. ஆனால் அது தன்னுடைய அரசியல் நலன்களை அநேகமாக முற்றிலும் மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த நபர்களான டோரிகளிடமும் விக்குகளிடமும் ராடிகல்களிடமும் விட்டு

விட்டுள்ளது. சுமார் கால் நூற்ருண்டாக ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் ''மகத்தான லிபரல் கட்சியின்'' வாலாக இருந்து வருவதோடு திருப்தியடைந்து இருக்கிறது.

ஐரோப்பாவிலேயே மிகச் சிறந்த ஒழுங்கமைப்புள்ள தொழிலாளி வர்க்கத்துக்கு இது தகுதியான அரசியல் நிலை அல்ல. மற்ற நாடுகளில் தொழிலாளிகள் எவ்வளவோ தீவிரமாகச் செயலாற்றி வந்திருக்கிருர்கள். ஜெர்மனியில் பத்தாண்டுகளுக்கு மேலாகவே ஒரு தொழிலாளர் கட்சி (சமூக-ஜனநாயகவாதிகள்) இருந்து வருகிறது. அதற்கு நாடாளுமன்றத்தில் பத்து உறுப்பினர்கள் உள்ளனர். அக்கட்சியின் வளர்ச்சியைக் கண்டு பிஸ்மார்க் பயந்து போய் கேடுகெட்ட அடக்குமுறை நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிருர்; அவற்றைப் பற்றி மற்ருெரு பத்தியில்* விபரம் தருகிருேம். எனினும் பிஸ்மார்க்கையும் மீறிக்கொண்டு அந்தத் தொழிலாளர் கட்சி திடமாக முன்னேறுகிறது. சென்ற வாரத்தில்தான் மான்ஹைம் நகராட்சி மன்றத் தேர்தல்களில் பதினுறு இடங்களையும் ஸாக்ஸன் நாடாளுமன்றத் தேர்தலில் ஓரிடத்தையும் அது வென்றுள்ளது. பெல்ஜியம், ஹாலந்து, இத்தாலி நாடுகளில் ஜெர்மானியர்களின் உதாரணத்தைப் பின்பற்றியுள்ளனர். இந்நாடுகள் ஒவ்வொன்றிலும் தொழிலாளர் கட்சி இருக்கிறது. அங்கே தற்சமயம் நாடாளுமன்றத்துக்கு இந்தக் கட்சிகள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனுப்புவதற்கு வாய்ப்பு இல்லாத அளவுக்கு வேட்பாளர் தகுதி உயர்வாக இருக்கிறது. பிரான்ஸில் இப்போதுதான் தொழிலாளர் கட்சியை ஒழுங்கமைப்பதில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கிருர்கள். சென்ற தேர்தல்களில் அது பல நகராட்சி மன்றங்களில் பெரும்பான்மை பெற்றிருக்கிறது; அடுத்த அக்டோபரில் பிரதிநிதிகள் மன்றத்துக்கு நடக்கும் பொதுத் தேர்தலில் சில இடங்களை வெல்லும் என்பதில் ஐயமில்லை. சாகுபடியாளன், வியாபாரி, முதலாளி எனும் வர்க்கத்துக்குத் தொழிலாளி வர்க்கத்தினர் மாறிச் செல்வது இன்னமும் ஒப்புநோக்கில் சுளுவாயிருந்து வரும்

---

* இப்பதிப்பின் 57-61 பக்கங்கள் பார்க்க.—(ப-ர்.)

அமெரிக்காவிலேகூட தொழிலாளிகள் தங்களை ஒரு சுதந்தரமான கட்சியாக ஒழுங்கமைத்துக் கொள்வது அவசியம் என்று கண்டுள்ளனர். எல்லா நாடுகளிலும்—பிரிட்டனைத் தவிர எல்லா நாடுகளிலும்—தொழிலாளி அரசியல் அதிகாரத்துக்காகவும், நாடாளுமன்றத்தில் தன் வர்க்கத்தின் நேரடிப் பிரதிநிதித்துவத்துக்காகவும் போராடுகிறான்.

என்றபோதிலும், பழைய கட்சிகளின் காலம் முடிந்துவிட்டதென்றும், பழைய மூடக்கொள்கைகள் பொருளற்றுப் போய்விட்டன என்றும், பழைய சூத்திரங்கள் பொய்த்துப் போயின என்றும், பழைய சர்வரோகநிவாரணிகள் இனிமேல் பயன்படா என்றும் ஓர் உணர்ச்சி இங்கிலாந்தில் இன்று பரவலாக உள்ளதுபோல் என்றும் இருந்ததில்லை. புதிய பாதையில் சென்று தீர வேண்டும், ஜனநாயகத் திசையிலேதான் இப்பாதை இருக்க முடியும் என்று எல்லா வர்க்கங்களிலும் உள்ள சிந்திக்கும் பகுதியினர் காணத் தொடங்கியுள்ளனர். ஆனால், தொழில் துறையையும் விவசாயத் துறையையும் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் மக்களில் மாபெரும் பெரும்பான்மையாயுள்ள இங்கிலாந்தில் ஜனநாயகம் என்றால் தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சி என்றே பொருள்—கச்சிதமாகச் சொன்னால் அவ்வளவுதான். ஆகவே, அந்தத் தொழிலாளி வர்க்கம் தன்னை வந்தடையவிருக்கும் பணிக்கு—இந்த மாபெரும் பேரரசை ஆளும் பணிக்கு—தன்னைத் தயார்படுத்திக் கொள்ளட்டும். தவிர்க்க முடியாதபடி தங்கள் பங்குக்கு வரவிருக்கும் பொறுப்புகளைப் புரிந்துகொள்ளட்டும். இதற்குத் தலைசிறந்த வழி தங்கள் வர்க்கத்தைச் சேர்ந்த நபர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைக்க ஏற்கெனவே தங்களிடம் உள்ள சக்தியை—நாட்டின் ஒவ்வொரு பெரிய நகரத்திலும் தங்களுக்குள்ள அசல் பெரும்பான்மையை—பயன்படுத்துவதுதான். இன்றுள்ள வீட்டுக் குடியிருப்பாளர் வாக்குரிமையைக் கொண்டு செயின்ட் ஸ்டீஃபென்ஸுக்கு (நாடாளுமன்றத்துக்கு) நாற்பது ஐம்பது தொழிலாளிகளை எளிதாக அனுப்பமுடியும்; உண்மையாகச் சொன்னால், அங்கே புதிய இரத்தம் பாய்ச்சுவது மிகவும் தேவைப்படுகிறது. நாடாளுமன்றத்தில் அத்தனைத் தொழிலாளிகள் இருந்தால் அயர்லாந்து நில மசோதா[14] (இன்று ஆக

விருக்கிறபடி) அயர்லாந்து நிலப்பிரபுக்களின் நஷ்ட ஈடு சட்டமாக ஆவதைச் சாத்திய மற்றதாக்கிவிடும்; நாடாளுமன்றத் தொகுதிகளைத் திருத்தியமைக்க வேண்டும், இலஞ்ச ஊழலை உண்மையிலேயே தண்டனைக் குரியதாக்க வேண்டும், இங்கிலாந்து நீங்கலாக எங்கும் வழக்கமாயிருக் கிறபடி தேர்தல் செலவுகளை அரசாங்க நிதி ஏற்க வேண் டும், முதலிய கோரிக்கைகளை எதிர்ப்பதும் சாத்தியமற்ற தாகிவிடும்.

மேலும், இங்கிலாந்தில் ஓர் உண்மையான ஜனநாயக கக் கட்சி என்பது சாத்தியமில்லை—அது தொழிலாளர் கட்சியாக இருந்தாலொழிய. மற்ற வர்க்கங்களைச் சேர்ந்த அறிவொளி பெற்ற நபர்கள் (சிலர் நம்பச்செய்ய விரும்பு கிற மாதிரி அவற்றில் அப்படிப்பட்ட நபர்கள் நிறைய இல்லை) அந்தக் கட்சியில் சேரலாம், தங்கள் நேர்மை யைப் பற்றி வாக்குறுதி அளித்தபின் நாடாளுமன்றத்தின் அதன் பிரதிநிதியாகவும் இருக்கலாம். எங்கும் உள்ள வழக்கு இது. எடுத்துக்காட்டாக, ஜெர்மனியில் தொழி லாளர் பிரதிநிதிகள் அனைவரும் அசல் தொழிலாளிகள் அல்லர். ஆனல், இங்கிலாந்திலும் சரி வேறெங்காயினும் சரி, தனித்த தொழிலாளி வர்க்கத் தன்மை இருந்தாலொ ழிய எந்த ஜனநாயகக் கட்சியும் பயன்திறமுள்ள வகை யில் வெற்றிகரமாயிராது. அத்தன்மையைக் கைவிட்டால் குறுங்குழுக்களும் போலிகளும் தவிர வேறெதுவும் இராது.

வெளிநாடுகளைவிட இங்கிலாந்து விஷயத்தில் இது பெருமளவுக்கு உண்மையாகும். உலகத்திலேயே முதன் முதலாகத் தோன்றிய தொழிலாளர் கட்சியாகிய சார்டிஸ்ட் கட்சி உடைந்து கலைந்து போனதிலிருந்து ராடிகல் (தீவிரக் கட்சியின்) போலிகள் துரதிர்ஷ்டவசமாக நிறை யவே உள்ளனர். உண்மை. ஆனல் சார்டிஸ்டுகள் (சாஸனத் தரப்பினர்) உடைவுண்டு போனர்களாம், எதையும் சாதிக்கவில்லையாம். அப்படியா, எதையும் சாதிக்கவில்லையா? மக்கள் சாஸனத்தின் ஆறு அம்சங்களில் இரண்டு—வாக் குச் சீட்டு மூலம் வாக்குப்பதிவு, சொத்து சம்பந்தப்பட்ட தகுதி கூடாது என்பவை—இப்போது நாட்டில் சட்டமாக உள்ளன. எல்லோருக்கும் வாக்குரிமை எனும் மூன்ருவது அம்சம் குறைந்தபட்சம் ஏறத்தாழ வீட்டுக் குடியிருப்பா

ளர் வாக்குரிமை என்கிற வடிவிலாயினும் நடைமுறையில் உள்ளது. சமமான தேர்தல் தொகுதிகள் எனும் நான்காவது அம்சம் தெளிவாக நடைமுறையில் காணப்போகிற நிலையில் இருக்கிறது, இன்றைய அரசாங்கம் வாக்குறுதி செய்துள்ள சீர்திருத்தமாக உள்ளது. எனவே சார்டிஸ்ட் இயக்கம் உடைந்துபோனதின் விளைவாக சார்டிஸ்ட் வேலைத்திட்டத்தில் செம்பாதி நடைமுறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தொழிலாளி வர்க்கத்தின் பழைய அரசியல் அமைப்பு பற்றிய வெறும் நினைவே இந்த அரசியல் சீர்திருத்தங்களையும்—மற்றும், தொடராகச் சமுதாயச் சீர்திருத்தங்களையும்—சாதிக்க முடிந்ததென்றால், நாடாளுமன்றத்தில் நாற்பது ஐம்பது பிரதிநிதிகளின் ஆதரவைக் கொண்டிருக்கும் ஒரு தொழிலாளர் அரசியல் கட்சி உண்மையில் இருக்கமேயானால் அது என்னதான் சாதிக்க முடியாது?

ஒவ்வொருவனும் தன்னைத் தானே கவனித்துக் கொண்டு தீர வேண்டிய உலகத்திலே நாம் வாழ்கிறோம். அவ்வாறு இருந்துங்கூட, நிலப்பிரபு முதலாளி சில்லறை வியாபாரி எனும் வர்க்கத்தினரும் அவர்களுக்கு வால்பிடிக்கும் வழக்குரைஞர்கள் பத்திரிகை எழுத்தாளர்கள் முதலியவர்களும் தன்னுடைய நலன்களைக் கவனித்துக் கொள்ள ஆங்கிலேயத் தொழிலாளி வர்க்கம் அனுமதித்து வருகிறது. தொழிலாளியின் நலனுக்கேற்ற சீர்திருத்தங்கள் இவ்வளவு மெதுவாகவும், துளித்துளியாகவும் வருகிறதில் வியப்பேதுமில்லை. இங்கிலாந்தின் தொழிலாளிகள் மட்டும் மனம் வைத்தால் போதும், தங்கள் நிலைமைக்குத் தேவையான சமுதாய சீர்திருத்தம் அரசியல் சீர்திருத்தம் ஒவ்வொன்றையும் நிறைவேற்றிக் கொள்ளும் எஜமானர்களாகிவிடுவார்கள். பிறகு ஏன் அந்த முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாது?

*1881, ஜூலை நடுவில்*
*எழுதப்பட்டது*

*1881, ஜூலை 23,*
*The Labour Standard, இதழ் 12ல்*
*தலையங்கமாக வெளி வந்தது*

# பிஸ்மார்க்கும் ஜெர்மன் தொழிலாளர் கட்சியும்

ஜெர்மனியில் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி உறுப்பினர்களை எதிர்த்து பிஸ்மார்க்கும் அவரது அடிவருடிகளும் புரிந்து வரும் அட்டூழியங்களைப் பற்றி அண்மையில் பிரிட்டிஷ் முதலாளித்துவப் பத்திரிகைகள் கெட்டியாக மௌனம் சாதித்து வருகின்றன. *Daily News* ஒன்றுதான் ஓரளவுக்கு விதிவிலக்காயுள்ளது. முன்பெல்லாம் வெளிநாடுகளில் கொடுங்கோன்மையுள்ள அரசாங்கங்கள் தங்கள் குடிமக்களை எதிர்த்து இப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனமான செயல்களில் ஈடுபட்டபோது பிரிட்டிஷ் நாளேடுகளிலும் வாரப் பத்திரிகைகளிலும் கூக்குரல் பலமாயிருக்கும். ஆனால் இவ்வழக்கில் ஒடுக்கப்படும் தரப்பினர் தொழிலாளிகள், தொழிலாளி என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படும் தொழிலாளிகள்; இவர்கள் விஷயத்தில் ''சமுதாயத்தின்'' பத்திரிகைப் பிரதிநிதிகள், ''மேல்தட்டுப் பத்து குடும்பங்களைச் சேர்ந்த'' பத்திரிகைப் பிரதிநிதிகள் உண்மைகளை மறைக்கிறார்கள், அவர்களின் பிடிவாதமான மௌனத்தால் அவர்கள் அவற்றை ஆதரிக்கிறார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது. உண்மை, தொழிலாளிகளுக்கு அரசியலோடு என்ன விவகாரம்? தங்களை விட ''மேலானவர்களிடம்'' அதை விட்டு விடட்டுமே! பிரிட்டிஷ் பத்திரிகைகளின் மௌனத்திற்கு மற்றொரு காரணமும் உண்டு: பிஸ்மார்க்கின் தனிப்பட்டச் சட்டத்தையும்[15] அதை அவர் செயற்படுத்தும் முறையையும் தாக்கி விட்டு அதே மூச்சில் திரு. ஃபோர்ஸ்டர்[16] அயர்லாந்தில் செய்து வரும் அடக்குமுறைச்

செயல்களைத் தாங்கிப் பிடிப்பது மிகவும் கடினம். இது வேதனை தரும் விஷயம், தொடவே கூடாது. இன்றைய அரசாங்கம் அயர்லாந்தில் செய்து வரும் செய்கையால் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் எவ்வளவு தூரத்துக்கு இங்கிலாந்தின் தார்மீக நிலை தாழ்த்தப்பட்டுவிட்டது என்கிற விஷயத்தைத் தானே சுட்டிக்காட்டும் என்று முதலாளித்துவப் பத்திரிகைகளிடம் எதிர்பார்க்க முடியாதுதான்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் ஜெர்மன் தொழிலாளர் கட்சி விரைவாக அதிகரித்து வரும் எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்று முன்னுக்கு வந்தது; இதற்கு முந்தைய தேர்தலில் ஐந்து லட்சத்துக்கும் மேலாகக் கட்சிக்கு வாக்குகள் கிடைத்தன. கடைசியாக நடந்த தேர்தலில் ஆறு லட்சம் வாக்குகள் அவர்களின் வேட்பாளர்களுக்குக் கிடைத்தன. பெர்லினில் இருவர், எல்பெர்ஃபெல்ட்-பார்மெனில் ஒருவர், பிரெஸ்லாவிலும் டிரெஸ்டெனிலும் ஒருவர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டனர். லிபரல், கன்ஸர்வேடிவ், கத்தோலிக்கக் கட்சிகள் மொத்தத்துடன் அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணிக்கு எதிராக—பேரரசரைச் சுட்டுக் கொல்ல நடந்த இரண்டு முயற்சிகள் கிளப்பிவிட்ட (இம்முயற்சிகளுக்குத் தொழிலாளர் கட்சிதான் பொறுப்பு என்று ஒருமனதாக மற்றெல்லாக் கட்சிகளும் எழுப்பிவிட்ட) கூக்குரலுக்கு எதிராக—பத்து இடங்களை வென்று கொண்டது. அதன் பிறகு பிஸ்மார்க் வெற்றிகரமாக நிறைவேற்றிய சட்டத்தின்படி சமூக-ஜனநாயகவாதம் தடை செய்யப்பட்டது. ஐம்பதுக்கு மேற்பட்ட தொழிலாளர் பத்திரிகைகள் மூடப்பட்டன, அவர்களின் கிளப்புகளும் சங்கங்களும் கலைக்கப்பட்டன, அவர்களின் நிதிகள் கைப்பற்றப்பட்டன, அவர்களின் கூட்டங்களை போலீஸ் கலைத்துவிட்டது. இவ்வனைத்திற்கும் மகுடமிட்டாற்போல மொத்த மொத்தமாக நகரங்களையும் மாவட்டங்களையும் ''அவசரகால நிலைமையுள்ளதாகப் பிரகடனம் செய்கிற'' சட்டத்தையும் போட்டினர்—அயர்லாந்தில் செய்த மாதிரியே. ஆனால், பிரிட்டிஷ் அடக்குமுறைச் சட்டங்களுங்கூட[17] அயர்லாந்தில் செய்யத் துணியாததை பிஸ்மார்க் ஜெர்மனியில் செய்தார். ''பிரகடனப்படுத்தப்பட்ட''

ஒவ்வொரு மாவட்டத்திலும் சோஷலிஸப் பிரச்சாரம் செய்வதாக ''நியாயமாகச் சந்தேகித்தால்'' எந்த நபரையும் வெளியேற்றும் உரிமையைப் போலீஸ் பெற்றது. ஆம், பெர்லினில் உடனே அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டது, நூற்றுக்கணக்கான (குடும்பங்களோடு சேர்த்துப் பார்த்தால் ஆயிரக் கணக்கான) மக்கள் வெளியேற்றப்பட்டனர். ஏனெனில், பிரஷ்யப் போலீஸ் எப்போதும் ஆண்களைக் குடும்பத்தோடு சேர்த்துத்தான் வெளியேற்றுகிறது. திருமணமாகாத இளைஞர்களைப் பொதுவாகவே விட்டுவிடுகிறது. வெளியேற்றம் அவர்களுக்கு ஒரு பெரிய தண்டனையாக இராது. ஆனால், பெரு வழக்காக, குடும்பத் தலைவர்களுக்கு அது ஒரு துன்பமிக்க நீண்ட வாழ்க்கையாகி விடும்—முற்றாக அழிந்து போகவில்லை என்றால். அப்புறம் ஹாம்பர்க் ஒரு தொழிலாளியை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது, உடனே அங்கு அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப் பட்டது. ஹாம்பர்கிலிருந்து முதலில் சுமார் நூறு பேர் வெளியேற்றப்பட்டனர், குடும்பங்களோடு சேர்த்தால் மற்றும் முன்னூறுக்கு மேல் கூடும். இரண்டே நாளில் தொழிலாளர் கட்சி அவர்களின் பயணச் செலவுகளுக்கும் மற்ற உடனடித் தேவைகளுக்கும் வேண்டிய வழிதுறைகளைச் செய்து கொடுத்தது. இப்போது லைப்ஸிக்கிலும் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது; இல்லாவிட்டால் அரசாங்கம் அக்கட்சியின் அமைப்பை உடைத்தெறிய முடியாது என்கிற சாக்குத் தவிர வேறிருக்கவில்லை. முதல் நாளில் வெளியேற்றப்பட்டவர்கள் முப்பத்து மூன்று பேர்—பெரும்பாலும் திருமணமாகிக் குடும்பத்தோடு இருப்பவர்கள். ஜெர்மன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் பட்டியலின் தலைமை ஸ்தானத்தில் உள்ளனர். ஒருக்கால் திரு. டில்லான் அவர்களுக்கும் பாராட்டுக் கடிதம் அனுப்புவார்—தன்னைவிட அவர்களின் நிலைமை அவ்வளவு மோசமாயில்லை என்பதால்.

அது மட்டுமல்ல. சட்டப்படி தொழிலாளர் கட்சி தக்க முறையில் தடைசெய்யப்பட்டும் ஜெர்மானியர்கள் அனுபவிக்கிறதாகச் சொல்லப்படும் அரசியல் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டும் ஆனவுடன் அக்கட்சியின் தனித்

தனி உறுப்பினர்களை போலீஸ் தன் இஷ்டம்போல் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும். தடைசெய்யப்பட்ட பிரசுரங்களுக்காகச் சோதனை போடுகிற சாக்கில் அவர்களின் மனைவியரையும் புதல்வியரையும் மிகவும் கீழ்த்தரமாகவும் மிருகத்தனமாகவும் நடத்துகின்றனர். போலீஸ் தம் இஷ்டம்போல் உறுப்பினர்களைக் கைதுசெய்கிறது, வாரக் கணக்கில் ரிமாண்டில் வைக்கிறது, சிறையில் சில மாதங்கள் கழித்த பிறகுதான் அவர்களை விடுதலை செய்கிறது. குற்றச்சட்டத்தில் இல்லாத புதிய புதிய குற்றங்களைப் போலீஸ் புனைந்துவிடுகிறது, சாத்தியமாகிறதற்கு அப்பாலுங்கூட அக்குற்றச் சட்டத்தை நீட்டிச் செயல்படுத்துகிறது. மேலும், போலீஸுக்கு உதவி புரியும் அளவுக்கு, உடந்தையாயிருக்கும் அளவுக்கு லஞ்சப்பேர்வழிகளான, கொள்கை வெறி பிடித்த நீதிபதிகளும் போலீஸுக்கு அடிக்கடி கிடைக்கின்றனர். இந்த விலை கொடுத்தால்தான் பதவியுயர்வு கிடைக்கும்! இதன் மொத்த விளைவு என்ன என்பதைப் பின்வரும் புள்ளி விபரங்கள் புலப்படுத்தும். 1879 அக்டோபரிலிருந்து 1880 அக்டோபர் வரை உள்ள ஓராண்டில் ராஜதுரோகம் புரிதல், ராஜதுரோகம் சார்ந்த குற்றங்கள் புரிதல், பேரரசரை அவமதித்தல் முதலியவற்றிற்காகப் பிரஷ்யாவில் மட்டும் 1,108 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர்; மற்றும், அரசியல் மான நஷ்டக் குற்றங்கள், பிஸ்மார்க்கை அவமதித்தல், அல்லது அரசாங்கத்தைக் கறைப்படுத்தல் முதலியவற்றிற்காக 10,094 பேருக்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டனர்; மொத்தம் பதினோராயிரத்து இரு நூற்றிரண்டு அரசியல் கைதிகள்—இது அயர்லாந்தில் திரு. ஃபோர்ஸ்டர் புரியும் வீரச் செயல்களையுங்கூட மிஞ்சிவிடுகிறது!

இந்த அடக்குமுறையினாலெல்லாம் பிஸ்மார்க் சாதித்திருப்பது என்ன? அயர்லாந்தில் திரு. ஃபோர்ஸ்டர் சாதித்த அளவுக்குத்தான். அயர்லாந்து நிலச் சங்கம்[18] போலவே சமூக-ஜனநாயகக் கட்சியும் பூத்துக் குலுங்கும் நிலைமையில் இருக்கிறது, உறுதியான அமைப்பு வைத்துக் கொண்டு இருக்கிறது. சில நாட்களுக்கு முன் மான்ஹைம் நகராட்சிமன்றத் தேர்தல் நடந்தது. தொழிலாளர் கட்சி பதினாறு வேட்பாளர்களை நிறுத்தியது; அத்தனை பேரும்

மூன்றுக்கு ஒன்று என்கிற அளவில் பெரும்பான்மையுடன் வென்றனர். மேலும், ஜெர்மன் நாடாளுமன்றத்தில் டிரெஸ்டன் தொகுதிக்கு உறுப்பினராயிருக்கும் பேபெல் ஸாக்ஸன் நாடாளுமன்றத்துக்கு லைப்ஸிக் மாவட்ட வேட்பாளராகத் தேர்தலில் நின்றார். பேபெல் அசல் தொழிலாளி (கடைசல் தொழிலாளி), ஜெர்மனியில் தலைசிறந்த பேச்சாளர் அல்லது தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவர். அவர் தேர்ந்தெடுக்கப்படாமல் தடுப்பதற்காக அரசாங்கம் அவருடைய கமிட்டி முழுவதையும் வெளியேற்றியது. விளைவு என்ன? வரம்புக் குறுக்கமுள்ள வாக்குரிமை முறை இருந்துங்கூட பலமான பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே பிஸ்மார்க்கின் அடக்குமுறை அவருக்கு ஒரு பயனும் அளிக்கிறதாயில்லை. மாறாக, மக்களைத்தான் ஆத்திரமடையச் செய்கிறது. தங்கள் நலவுரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்கு எல்லாச் சட்டபூர்வமான வழிமுறைகளும் மறுக்கப்பட்டவர்கள் ஏதாவது ஒரு நல்ல நாளில் சட்டவிரோதமான வழிமுறைகளைப் பின்பற்றுவார்கள், அவர்களை யாரும் குற்றம் சொல்ல முடியாது. அந்தச் சித்தாந்தத்தை எத்தனை தடவை திரு. கிளாட்ஸ்டனும் திரு. ஃபோர்ஸ்டரும் பிரகடனப்படுத்தியுள்ளனர்? இன்று அவர்கள் அயர்லாந்தில் எப்படி செயல் புரிந்து வருகிறார்கள்?

*1881 ஜூலை நடுவில்*
*எழுதப்பட்டது*

*1881, ஜூலை 23,*
*The Labour Standard, இதழ் 12ல்*
*தலையங்கமாக வெளி வந்தது*

# பருத்தியும் இரும்பும்

நம் காலத்தில் பருத்தியும் இரும்பும் மிகமிக முக்கிய மான கச்சா பொருட்களில் இரண்டாகும். பருத்தி இரும்பு வகைப்பட்ட பொருட்களை உற்பத்திசெய்வதில் தலைமை கொள்கிற நாடு பொதுவாகவே தொழிலுற்பத்தி நிலவும் நாடுகளின் பட்டியலில் முதலிடம் வகிக்கிறது. இங்கி லாந்து இவ்வாறு இருப்பதின் காரணமாக, இங்கிலாந்து இவ்வாறு இருந்து வரும் வரை, உலகத்தின் முதன்மை யான தொழிலுற்பத்தி நாடாக இருக்கும்.

அப்படியென்றால் இங்கிலாந்தில் பருத்தி இரும்புத் துறைகளில் வேலை செய்யும் தொழிலாளிகள் குறிப்பிடத் தக்க செழுமையில் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கக் கூடும்; சந்தையில் இங்கிலாந்து ஆதிக்கம் வகிப்பதால் இப்பொருட்களின் விஷயத்தில் வர்த்தகம் எப்போதும் நல்லபடியாக இருந்துதீர வேண்டும் என்றும் எதிர்பார்க் கக் கூடும்; சுயேச்சை வாணிபத்துக்காகக் கிளர்ச்சி நடந்த காலத்தில் வாக்குறுதி செய்யப்பட்ட செழுமையுகம் குறைந்தபட்சம் இவ்விரண்டு தொழிற்கிளைகளிலாவது நடைமுறையில் சாதிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கக் கூடும். அந்தோ! நிலைமை அவ்வாறில்லை என்று நாமறி வோம். பிற தொழில்களைப் போலவே இங்கேயும் உழைக் கும் மக்களின் நிலைமை முன்னைவிட மோசமாகிவிடவில்லை யென்றால், சில வழக்குகளில் முன்னைவிட மேலாக இருக் கிறதென்றால், அதற்கு ஒரே காரணம் அவர்களின் சொந்த முயற்சிகள்தாம்—பலமான ஒழுங்கமைப்பும், உறுதியாக நடத்தில் வேலைநிறுத்தங்களுந்தான். இதை யும் நாம் அறிவோம். 1874வாக்கிலும் அதற்குப் பிறகும்

உள்ள ஒருசில ஆண்டுகளில் செழுமை கண்டபின் பருத்தி இரும்புத் தொழில்கள் முற்றாக வீழ்ச்சியுற்றதும் நமக்குத் தெரியும். தொழிற்சாலைகள் மூடப்பட்டன, உலைகள் நிறுத்தப்பட்டன. உற்பத்தி தொடர்ந்து நடந்த இடங்களில் குறைவான வேலைநேரமே விதி வழக்காயிருந்தது. இப்படிப்பட்ட வீழ்ச்சிக் காலங்களை முன்பே கண்டிருக்கிறோம்; சராசரி பத்தாண்டுகளுக்கு ஒரு முறை அவை நிகழ்கின்றன; அவை இருக்கும் வரை இருந்துவிட்டுப் போனபின் ஒரு புதிய செழுமைக்காலம் வந்துசேருகிறது, என்றவாறு.

எனினும், குறிப்பாக இரும்பு பருத்தித் தொழில்களில் இன்றையத் தேக்க காலகட்டத்தை வேறுபடுத்திக் காட்டுவது என்னவென்றால், அது சில ஆண்டுகளாகத் தன்னுடைய வழக்கமான நிகழ்வுக்காலத்தையும் தாண்டி நீடித்து வருவதாகும். தொழிலை மீண்டும் மேலுக்குக் கொண்டுவர பல முயற்சிகள் நடந்துள்ளன, பல தடவை முடுகியோடியதும் உண்டு. எல்லாம் வீணாயின. அசல் வீழ்ச்சியின் காலம் முடிந்துவிட்டதென்றாலும் வர்த்தகம் மந்தமான நிலையிலேயே இருந்து வருகிறது, சந்தைகள் முழு உற்பத்தியையும் வாங்கி விற்கத் திறனற்று நீடிக்கின்றன.

இதற்குக் காரணம், தொழிற் பொருட்களை மட்டுமின்றி இயந்திரங்களையே உற்பத்தி செய்வதற்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தும் படியான நம் தற்கால அமைப்பு முறையைக் கொண்டு நம்பவொண்ணா வேகத்துடன் உற்பத்தியைப் பெருக்க முடியும். ஐம்பது சதவீதம் அதிகமாகப் பொருட்களை உற்பத்தி செய்ய முடிகிற வகையில் பருத்தி நூற்புக்கும் நெசவுக்கும் நிறநீக்கத்திற்கும் வண்ண அச்சுக்கும் வேண்டிய இயந்திர தளவாடத்தையும், இரு மடங்காக எல்லா விதமான தேனிரும்பு இரும்புப் பொருட்களின் உற்பத்தி முழுவதையும் ஒரே செழுமைக்காலப் பகுதியில் பெருக்குவதென்று முதலாளிகள் மனம் வைத்தால் சாதிப்பதில் கஷ்டம் எதுவும் இராது. அசல் அதிகரிப்பு அந்த அளவுக்கு எட்டவில்லை. உற்பத்தி விரிவாக்கப்பட்ட போதிலும், முந்தைய காலப் பகுதிகளோடு ஒப்பிட்டால் தகவுப்பொருத்தத்தை மீறி உயர்ந்திருக்கிறது. அதன் விளைவு நிரந்தரமான மிகையுற்

பத்தியும் நிரந்தரமான வர்த்தகத் தேக்கமும் தான். குறைந்தபட்சமாகக் கணிசமான காலத்துக்கு முதலாளிகள் சும்மா பார்த்துக் கொண்டு இருக்க முடியும். ஆனால் உழைப்பாளிகள் துன்பப்பட வேண்டியிருக்கிறது. ஏனெனில் அவர்களைப் பொருத்தவரை அதன் பொருள் நிரந்தர வறுமையும் வேலைவிடுதிக்குப் போய்ச்சேர வேண்டிய கதியுமேயாகும்.

கட்டற்ற போட்டியுள்ள மேன்மையான அமைப்பு முறையின் விளைவு இதுவே, காப்டென் பிரைட் கூட்டத்தார் வாக்குறுதியளித்த செழுமையுகத்தின் நடைமுறைச் சாதனை இதுவே! இதைத்தான் உழைப்பாளி மக்கள் அனுபவித்துத் தீர வேண்டியிருக்கும்—அவர்கள் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகச் செய்து வந்திருக்கிற மாதிரி சாம்ராஜ்யத்தின் பொருளாதாரக் கொள்கையை நிர்வகிப்பதைத் தங்களுடைய ''இயல்பான தலைவர்களிடம்'' விட்டுவைத்தால், தாமஸ் கார்லைல் கருத்துப்படி நாட்டின் தொழிலாளர் படை மீது அதிகாரம் செலுத்தும் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கும் ''தொழில் தளபதிகளிடம்'' விட்டுவைத்தால். தொழில் தளபதிகளாம் இவர்கள்! இவர்களோடு ஒப்பிட்டால் 1870ல் இருந்த லூயீ நெப்போலியனின் தளபதிகள் மேதைகளாவர். இந்தப் போலி தொழில் தளபதிகளுக்குள்ளே ஒவ்வொருவனும் மற்றனைவரையும் எதிர்த்துப் போராடுகிறான், அவனவன் நலனுக்காகவே அவனவன் போராடுகிறான், அயலார் என்ன செய்கிறார்கள் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் தன்னுடைய தொழில் தளவாடத்தை அதிகப்படுத்திக்கொள்கிறான். கடைசியிலே, மிகையான வர்த்தகம் விளைந்திருப்பதைக் கண்டு எல்லோரும் பெரிதாக வியப்படைகிறார்கள். உற்பத்தியை ஒழுங்கியக்குவதற்கு அவர்களால் ஒன்றுபட முடியாது; ஒரே நோக்கத்துக்கு மட்டுமே அவர்களால் ஒன்றுபட முடியும்: அதாவது, தங்களுடைய உழைப்பாளிகளின் கூலியைத் தாழ்த்தி வைத்திருப்பதற்காக. ஆக, சந்தைகளின் வினியோகத் திறத்தை எவ்வளவோ மிஞ்சுகிற அளவுக்கு அவர்கள் நாட்டின் உற்பத்திச் சக்தியைக் கவனமின்றி விரிவாக்குவதின் வழியாக ஒரு மிதமான செ

ழுமைக் காலம் தொழிலாளிகளுக்குக் கொடுக்கக் கூடிய ஒப்பீடான வசதியைத் தொழிலாளிகளிடமிருந்து பறிக்கிறார்கள், நீண்ட வீழ்ச்சிக் காலத்திற்குப் பிறகு தங்களுடைய வருமானத்தைச் சராசரி தரத்துக்குக் கொண்டு வரத் தொழிலாளிகளுக்கு உரிமையாயுள்ள ஒப்பீடான வசதியை அவர்கள் தொழிலாளிகளிடமிருந்து பறிக்கிறார்கள். நாட்டின் மாபெரும் பொருளாதார நலன்களை இயக்கிச் வழிசெலுத்துவதற்கு, உற்பத்தியின் செயற்போக்கை இயக்கி வழிசெலுத்துவதற்கும்கூட முதலாளிகள், ஒரு வர்க்கம் என்கிற வகையில், இனி திறனற்றுப்போயிருப்பதை இன்னமும் புரிந்துகொள்ள மாட்டோமா? பிரிட்டிஷ் உழைப்பாளி மக்களின் மிகப் பெரிய பகைவன் நித்தம் பெருகி வரும் தங்களுடைய சொந்தக் கைகளின் உற்பத்தித் திறனே என்பது—உண்மையாக இருந்தாலும்—அபத்தமான முட்டாள்தனமல்லவா?

ஆனால், இன்னொரு உண்மையையும் கவனத்தில் வைக்க வேண்டும். தங்கள் உற்பத்திச் சக்திகளைப் பெருக்கிக் கொள்வது பிரிட்டிஷ் முதலாளிகள் மட்டுமல்ல. மற்ற நாடுகளிலும் அவ்வாறே நடக்கிறது. பல்வேறு முதன்மையான நாடுகளின் இரும்பு பருத்தித் தொழில்களைத் தனித்தனியே எடுத்து ஒப்புநோக்குவதற்குப் புள்ளியியல் இடங்கொடாது. என்றாலும், ஜவுளித் தொழில் சுரங்கத் தொழில் உலோக உற்பத்தித் தொழில் முழுவதையும் எடுத்துப் பார்த்தால், பிரஷ்யாவின் புள்ளியியல் வாரியத்தின் தலைவர் டாக்டர் எங்கெல் *Das Zeitalter des Dampfs* (''நீராவி சகாப்தம்'', பெர்லின், 1881) எனும் நூலில் கொடுத்துள்ள விஷயாதாரங்களைக்கொண்டு நாம் ஒப்பீடான அட்டவணையைத் தயாரிக்க முடியும். அவருடைய கணக்கீடு பிரகாரம், மேலே குறிப்பிட்ட தொழில்களில் கீழே சொல்லப்பட்டுள்ள நாடுகளில் பின்வரும் மொத்த குதிரைச் சக்தி (ஒரு குதிரைச் சக்தி என்பது 75 கிலோகிராம் எடையை ஒரு விநாடியில் ஒரு மீட்டர் உயரத்துக்குத் தூக்கும் சக்திக்குச் சமம்) உள்ள நீராவி இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன:

| | | ஐவுளித் தொழில்கள் | சுரங்கம் உலோகத் துறைகள் |
|---|---|---|---|
| இங்கிலாந்து, 1871 | . . | 5,15,800 | 10,77,000 கு.ச. |
| ஜெர்மனி, 1875 | . . . | 1,28,125 | 4,56,436 ,, |
| பிரான்ஸ். . . . | சுமார் | 1,00,000 | 1,85,000 ,, |
| அமெரிக்கா . . . . . | | 93,000 | 3,70,000 ,, |

ஆகவே, இங்கிலாந்தின் முதன்மையான மூன்று போட்டியாளர்களான நாடுகள் பயன்படுத்தும் மொத்த நீராவிச் சக்தி இங்கிலாந்து ஐவுளித் தொழில் துறையில் பயன்படுத்தும் நீராவிச் சக்தியில் ஐந்துக்கு மூன்று எனும் விகிதத்தில் இருப்பதையும், சுரங்கத் தொழில் உலோகத் தொழில் துறைகளில் அது இங்கிலாந்துக்கு சமமாக இருப்பதையும் பார்க்கிறோம். மேலும், அவற்றின் தொழில்கள் இங்கிலாந்தின் தொழில்களைவிட எவ்வளவோ வேக விகிதத்தில் முன்னேற முன்னேற முந்தியவற்றின் மொத்த பொருள் பிந்தியதின் (இங்கிலாந்தின்) பொருளை விரைவிலே மிஞ்சிவிடும் என்பதில் ஐயம் இருக்க முடியாது.

இரயில் எஞ்சின்களும் கப்பல் எஞ்சின்களும் நீங்கலாக, உற்பத்தியில் பயன்படுத்தப்படும் நீராவிக் குதிரைச் சக்தியைக் காட்டும் இந்த அட்டவணையைப் பாருங்கள்:

| | | குதிரைச் சக்தி |
|---|---|---|
| பிரிட்டன் . . . . . . . | சுமார் | 20,00,000 |
| அமெரிக்கா . . . . . . | ,, | 19,87,000 |
| ஜெர்மனி . . . . . . . | ,, | 13,21,000 |
| பிரான்ஸ் . . . . . . . | ,, | 4,92,000 |

நீராவிச் சக்தியைப் பயன்படுத்தும் தொழில்களில் இங்கிலாந்தின் ஏகபோகம் எவ்வளவு தூரம் குறைந்திருக்கிறது, இங்கிலாந்தின் தொழில் மேலாதிக்கத்தை பெற்றுக் கொடுப்பதில் சுயேச்சையான வாணிபம் எவ்வளவு தூரத்துக்குத் தோற்றுப்போயிருக்கிறது என்பதை இது மேலும் தெளிவாகக் காட்டுகிறது. இந்த வெளிநாட்டுத்

தொழில் முன்னேற்றம் செயற்கையானது, காப்புமுறை யினுல் விளைந்தது என்று யாரும் சொல்ல வேண்டாம். ஜெர்மன் தொழில்களின் மாபெரும் விரிவாக்கம் முழுவதும் மிகவும் தாராளப் போக்குள்ள சுயேச்சை வாணிப ஆட்சியின் கீழேதான் சாதிக்கப்பட்டுள்ளது. மற்றும், வேறெதையும் விட ஒரு முட்டாள்தனமான உள்நாட்டுக் கலால் வரி முறையின் காரணமாகக் காப்புமுறையை (உண்மையிலே காப்பதை விட காப்பது போல் தோன்றுகிற காப்புமுறையை) அமெரிக்கா கைக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறதென்ருல், அது பகிரங்கச் சந்தையில் போட்டி போட இடமளிப்பதற்கு இந்தக் கலால் வரிகளை ரத்துசெய்தால் போதும்.

ஆக, மாஞ்செஸ்டர் கருத்துப்பிரிவினரின் சித்தாந்தங்கள் இருபத்தைந்து ஆண்டுகளாக அநேகமாக வரம்பற்ற ஆட்சி புரிந்து இந்த நிலைக்கு நாட்டைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு உழைக்கும் வர்க்கங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பதற்காக மாஞ்செஸ்டர் பர்மிங்ஹாம் கனவான்கள் விரைவாக ஆட்சிபீடத்தைவிட்டு விலக வேண்டும் என்று கோருகிற அளவில் இவ்விளைவுகள் உள்ளன. அவர்களைவிட உழைக்கும் வர்க்கங்கள் மோசமாக நிர்வகிக்க முடியாது என்பது உறுதி.

*1881, ஜூலை பிற்பகுதியில்*
*எழுதப்பட்டது*

*1881, ஜூலை 30,*
*The Labour Standard, இதழ் 13ல்*
*தலையங்கமாக வெளி வந்தது*

## சமுதாய வர்க்கங்கள்—
## அவசியமானவையும் அவசியமற்றவையும்

சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்கள் எந்த அளவுக்குப் பயனுள்ளவை அல்லது அவசியமானவையுங்கூட?—என்று அடிக்கடி கேள்வி போடுகிருர்கள். எடுத்துக்கவனித்த ஒவ்வொரு வேருன வரலாற்றுச் சகாப்தத்துக்கும் விடையும் வேருக இருந்தது இயல்புதான். நிலப்பிரபுத்துவ வர்க்கம் சமுதாயத்தின் ஒரு தவிர்க்கவியலாத, அவசியமான பகுதியாக இருந்த காலம் ஒன்று நிச்சயமாக இருந்தது. ஆனல், அது மிகமிக நீண்ட காலத்துக்கு முன்னே. பிறகு, bourgeoisie (முதலாளி வர்க்கம்) என்று பிரெஞ்சுக்காரர்கள் சொல்கிற முதலாளித்துவ மத்திய வர்க்கம் ஒன்று அதேபோல் தவிர்க்கவியலாத அவசியத்துடன் தோன்றிய காலமும் உண்டு. இவ்வர்க்கம் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தை எதிர்த்துப் போராடி, அதன் அரசியல் அதிகாரத்தை உடைத்தெறிந்து, தன் முறைக்குப் பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் மேலாதிக்கம் பெற்றது. எனினும், வர்க்கங்கள் தோன்றிய காலத்திலிருந்து, தொழிலாளி வர்க்கம் இல்லாமல் சமுதாயம் நடக்கும் காலம் எப்போதும் இருந்ததில்லை. அவ்வர்க்கத்தின் பெயரும் சமுதாய அந்தஸ்தும் மாறி வந்திருக்கிறது; அடிமைக்குப் பதிலாகப் பண்ணையடிமை வந்தான், அவனுக்குப் பதிலாகச் சுதந்தரமான தொழிலாளி வந்தான்—அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவன், ஆனல் தன் சொந்த உழைப்புச் சக்தி தவிர மற்றெல்லா இலௌகீகச் சொத்துக்களிலிருந்தும் விடுபட்டவன். ஒன்றுமட்டும் தெளிவு: சமுதாயத்தின் மேல்தட்டிலிருக்கிற, உற்பத்தி செய்யாத வர்க்கங்களில்

என்ன மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் உற்பத்தியாளர்களின் வர்க்கம் ஒன்று இல்லாமல் சமுதாயத்தால் பிழைத்திருக்க முடியவில்லை. எனவே இவ்வர்க்கம் எல்லா நிலைமைகளிலும் அவசியமானது—அது வர்க்கமாக இருப்பது போய் சமுதாயம் முழுவதும் தானே ஆகிவிடுகிற காலம் வந்து தீர வேண்டும் என்றபோதிலும்.

நிற்க. இந்த மூன்று வர்க்கங்களில் ஒவ்வொன்றும் தற்காலத்தில் இருப்பதற்கான அவசியம் என்ன?

குறைந்தபட்சமாகச் சொன்னால், இங்கிலாந்தில் நிலப்பிரபுத்துவ வர்க்கம் பொருளாதார வகையில் பயனற்றது, அயர்லாந்திலும் ஸ்காட்லாந்திலும் அதன் மக்களை வெளியேற்றிவிடும் போக்குகளின் கூலமாக அது பச்சையான தீமையாகிவிட்டது. மக்களைக் கடலுக்கு அப்பால் அனுப்பிவிடுவது அல்லது பட்டினி போடுவது, அவர்களுக்குப் பதிலாகச் செம்மறியாடுகளையோ மான்களையோ கொணர்ந்து வைப்பது—இந்தப் பெருமை ஒன்றுக்குத்தான் அயர்லாந்து நிலப்பிரபுக்களும் ஸ்காட்லாந்து நிலப்பிரபுக்களும் உரிமை கொண்டாட முடியும். அமெரிக்காவின் காய்கறி, இறைச்சி உணவின் போட்டி மேலும் கொஞ்சம் வளரட்டும், ஆங்கிலேய நிலப்பிரபுத்துவ வர்க்கமும் அதையே செய்யும்—குறைந்தபட்சம், நகர எஸ்டேட்டுகளை (நில உடைமைகளை) ஆதாரமாக வைத்துக் கொண்டு அவ்வாறு செய்ய முடிகிறவர்களாவது செய்வார்கள். எஞ்சிய நிலப்பிரபுக்களைப் பொருத்தவரை, அமெரிக்க உணவின் போட்டி அவர்களிடமிருந்து நம்மை விடுவித்துவிடும். அவர்கள் தொலைவது நல்லதுதான்—ஏனெனில், லார்ட்ஸ் சபையிலும் காமன்ஸ் சபையிலும் அவர்கள் செய்கிற அரசியல் காரியம் முழுக்க முழுக்க ஒரு தேசியத் தீமையாக இருக்கிறது.

ஆனால், பிரிட்டிஷ் காலனிவழிப்பட்ட சாம்ராஜ்ஜியத்தை நிறுவியதும் பிரிட்டிஷ் சுதந்தரத்தை நிலைநாட்டியதுமான அறிவொளி சான்ற, மிதவாத வர்க்கமாகிய முதலாளித்துவ மத்திய வர்க்கத்தின் சங்கதி என்ன? 1831ல் நாடாளுமன்றத்தைச் சீர்திருத்திய[19] தானியச் சட்டங்களை ரத்துச்செய்த—வரிசையாக வரிகளைக் குறைத்த—அந்த வர்க்கத்தின் சங்கதி என்ன? இங்கிலாந்தின் மாபெரும் தொழில்களையும், மாபெரும் வர்த்தகக் கப்பற்

படையையும், நித்தம் பரந்துவிரிந்து வரும் இரயில்வே அமைப்புமுறையையும் தோற்றுவித்து இன்னமும் இயக்கிச் செலுத்திவரும் அவ்வர்க்கத்தின் சங்கதி என்ன? தொழிலாளி வர்க்கத்தை இயக்கிச் செலுத்தி மேன் மேலும் முன்னேற்றம் காண்பதில் தலைமை வகித்து வரும் அந்த வர்க்கம் குறைந்தபட்சமாகவாயினும் தொழிலாளி வர்க்கத்தைப் போல் நிச்சயமாக அவசியமானதாகத் தானே இருக்க வேண்டும்?

நீராவித் தொழில், நீராவிப் போக்குவரத்து எனும் நவீன அமைப்புமுறையைப் படைப்பதும், அந்த அமைப்பு முறையின் வளர்ச்சியைத் தாமதப்படுத்துகிற அல்லது தடங்கல் செய்கிற ஒவ்வொரு பொருளாதார, அரசியல் முட்டுக்கட்டையையும் நொறுக்கித்தள்ளுவதும் முதலாளித்துவ மத்திய வர்க்கத்தின் பொருளாதார வேலையாக இருந்து வந்தது, உண்மைதான். இந்த வேலையை முதலாளித்துவ மத்திய வர்க்கம் செய்து வந்தவரை, அந்நிலைமைகளின் கீழ், அவசியமான வர்க்கமாக இருந்ததில் ஐயமில்லை. ஆனால் இன்றும் அது அப்படி இருக்கிறதா? பொதுவான சமுதாயத்தின் நன்மைக்காகச் சமுதாய உற்பத்தியை நிர்வகித்து விரிவாக்கும் வர்க்கம் என்கிற வகையில் அது தன்னுடைய மூலாதாரமான வேலையை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறதா? பார்ப்போம்.

போக்குவரத்துச் சாதனங்களிலிருந்து தொடங்குவோம்: தந்திப் போக்குவரத்து அரசாங்கத்தின் கையில் இருப்பதைப் பார்க்கிறோம். இரயில்வேக்களுக்கும் கடல்வழி நீராவிக் கப்பல்களில் பெரும் பகுதிக்கும் சொந்தக்காரர்கள் தத்தம் காரியத்தைத் தானே பார்த்துக் கொள்ளும் தனித்தனி முதலாளிகளல்லர், கூட்டுப் பங்குக் கம்பெனிகளே. இவற்றின் காரியத்தை இவற்றின் சார்பாகக் கவனித்துக் கொள்கிறவர்கள் சம்பளம் பெறும் சிப்பந்திகளேயாவர், வேலைக்காரர்களேயாவர்—நடைமுறையில் இவர்களின் நிலை உயர் பதவி வகிக்கிற, அதிகச் சம்பளம் வாங்குகிற உழைப்பாளிகளின் நிலையேயாகும். டைரெக்டர்கள் பங்குதாரர்கள் பொருத்தமட்டில், டைரெக்டர்கள் எவ்வளவுக்கெவ்வளவு நிர்வாகத்தில் குறைவாகக் குறுக்கிடுகிறார்களோ, பங்குதாரர்கள் எவ்வளவுக்கெவ்வளவு

தணிக்கைத்துறையில் குறைவாகக் குறுக்கிடுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு கம்பெனிக்கு நல்லது என்பதை இரு தரப்பாரும் அறிவார்கள். தளர்ச்சியான, மிகப் பெரும் பாலும் மேம்போக்கான தணிக்கை செய்வது என்கிற வேலை ஒன்றுதான் கம்பெனிகளின் சொந்தக்காரர்களுக்கு மிஞ்சியிருக்கும் வேலை. எனவே, இந்த மாபெரும் நிறுவனங்களின் முதலாளித்துவச் சொந்தக்காரர்களுக்கு அரையாண்டுக்கு ஒரு முறை கிடைக்கிற டிவிடெண்டு விடைத்தாள்களைப் பணமாக்கிக் கொள்வது தவிர எதார்த்தத்தில் அந்நிறுவனங்கள் சம்பந்தமாக அவர்கள் செய்வதற்கு மிச்சு வேலை எதுவும் கிடையாது. இவ்வழக்கில் முதலாளியின் சமுதாய வேலை கூலி கொடுக்கப்படும் வேலைக்காரர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது; ஆனால் அந்த முதலாளி அந்த வேலைகளைச் செய்வது நின்றுபோனபோதிலும் அவ்வேலைகளுக்குரிய சம்பளத்தை டிவிடெண்டுகள் வடிவத்தில் தொடர்ந்து ஜேபியில் போட்டுக் கொண்டுவருகிறான்.

ஆனால், சம்பந்தப்பட்ட பெரும் நிறுவனங்களின் விரிவளவு காரணமாக அவற்றின் நிர்வாகத்திலிருந்து ''விலகும்படி'' கட்டாயப்படுத்தப்பட்டிருக்கும் அந்த முதலாளிக்கு இன்னொரு வேலை மிஞ்சியிருக்கிறது. தன்னுடைய பங்குகளை வைத்து பங்கு மார்க்கெட்டிலே ஊகபேரம் பண்ணுகிற வேலைதான் அது. செய்வதற்கு அதைவிட வேறு நல்ல காரியம் எதுவுமில்லாததால், நமது ''விலகி ஓய்வுபெற்றுவிட்ட'' முதலாளிகள்—அல்லது எதார்த்தத்தில் விலக்கப்பட்டுவிட்ட முதலாளிகள்—இந்தப் பணதெய்வத்தின் கோயிலில் ஆசை தீரச் சூதாடுகிறார்கள். தாங்கள் சம்பாதிப்பதாக நடிப்புக்காட்டும் பணத்தை ஜேபியில் போட்டுக் கொள்ளும் மனமறிந்த ஒரே நோக்கத்தோடுதான் அவர்கள் அங்கே போகிறார்கள்—எல்லாச் சொத்துக்கும் உழைப்பும் சேமிப்பும்தான் தோற்றுவாய் என்று அவர்கள் சொல்கிறபோதிலும். தோற்றுவாயாக அது ஒருக்கால் இருக்கலாம், ஆனால் அதுவே முடிவல்ல என்பது நிச்சயம். லட்ச லட்சமாக வென்றும் இழந்தும் வரும்படியான ஒரு மாபெரும் சூதாட்ட மண்டபத்தை நம் முதலாளித்துவச் சமுதாயம் தனது கேந்திரமாக வைத்துக் கொள்ளாமல் இருக்க முடியாதிருக்கும்போது சில்லறை

சூதாட்ட மண்டபங்களைப் பலவந்தமாக மூடுவது என்ன பாசாங்குத்தனம்! உண்மையில், இவ்வழக்கில் ''விலகி ஓய்வுபெறும்'' பங்குதாரராகிய முதலாளி இருப்பது அவசியமற்றது மட்டுமல்ல, பச்சையான தீமையுமாகிறது.

இரயில்வேக்கள் நீராவிக்கப்பல்கள் விஷயத்தில் உண்மையாயிருப்பது எல்லாப் பெரிய தொழில் நிறுவனங்கள் வர்த்தக நிறுவனங்கள் விஷயத்தில் தினந்தோறும் மேன்மேலும் உண்மையாகி வருகிறது. கூட்டுப் பங்குக் கம்பெனிகளை ஏற்படுத்துவது—பெரிய தனியார் நிறுவனங்கள் வரைநிலைக் கம்பெனிகளாக மாற்றப்படுவது—சென்ற பத்தாண்டுகளாக, அதற்கும் மேலாக, நடைமுறைக் காரியமாகியிருக்கிறது. லண்டன் பெரு முதலாளிகளின் பெரிய மாஞ்செஸ்டர் கிடங்குகள் முதல் வேல்ஸ், வடபுறம் ஆகியவற்றில் உள்ள இரும்புத் தொழிற்சாலைகள் நிலக்கரிச் சுரங்கங்கள், லங்காஷயரின் தொழிற்சாலைகள் வரை—எல்லாம் கூட்டுப் பங்குக் கம்பெனிகளாக மாறிவிட்டன, அல்லது மாறி வருகின்றன. பழைய ஓல்ட்ஹாமில் தனியார் கையில் மிஞ்சியிருக்கிற ஐவுளி ஆலை ஒன்றுகூட இல்லை எனலாம்; அவ்வளவு ஏன், சில்லறை வியாபாரியுங் கூட மேன்மேலும் ''கூட்டுறவுச் சங்கங்களால்''' விலக்கப்பட்டு வருகிறான். அவற்றில் மிகப் பெரும்பாலானவை பெயரளவிலேதான் கூட்டுறவுச் சங்கங்கள்—அதைப்பற்றி வேறொரு சமயம் பேசுவோம். எனவே, முதலாளிகளின் உற்பத்தி அமைப்புமுறையின் வளர்ச்சியினாலேயே முதலாளி விலக்கப்படுகிறான்—கைநெசவாளியைப் போலவே. ஆனால் ஒரு வித்தியாசம்: கைநெசவாளி பட்டினியால் மெள்ள மெள்ளச் சாகிறான், விலக்கப்பட்ட முதலாளி மிதமிஞ்சிய உணவால் மெள்ள மெள்ளச் சாகிறான். தங்களுக்கு என்ன செய்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கே தெரியாது—இதில் அவ்விருவரும் ஒன்று போல் இருக்கிறார்கள்.

ஆக, இதுதான் விளைவு: நம் அசல் சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியானது உற்பத்தியை மாபெரும் நிறுவனங்களாகக் குவிக்கும், சமுதாயமயமாக்கும் போக்குள்ளது. அந்நிறுவனங்களை இனி தனியொரு முதலாளியால் நிர்வகிக்க முடியாது. ''எஜமானனின் கண்'', அது விளைக்

கும் அதிசயங்கள் பற்றிய வெற்றுப்பேச்சு அனைத்தும் ஒரு நிறுவனம் ஒரு குறிப்பிட்ட பரிமாணத்துக்கு வளர்ந்து வந்தவுடனே அடிமுட்டாள்தனமாகிவிடுகிறது. லண்டன், வடமேற்கு இரயில்வேயின் ''எஜமானனின் கண்ணை'' கற்பனை செய்து பாருங்கள்! ஆனால், எஜமானனால் செய்ய முடியாததைத் தொழிலாளியால், கூலிபெறும் வேலைக்காரர்களால் செய்ய முடியும், வெற்றிகரமாகச் செய்யவும் செய்கிறார்கள்.

ஆகவே, முதலாளிக்கு இனிமேல் ''தணிக்கைக்கான கூலி'' என்று தன்னுடைய இலாபத்துக்கு உரிமை கொண்டாட முடியாது, ஏனெனில் அவன் எதையும் தணிக்கை செய்வதில்லை. அந்த வெற்றுச் சொல்லைப் பற்றி மூலதனத்தின் காவலர்கள் நம் காதுகள் செவிடுபட டமாரமடிக்கும் நேரத்தில் இதை நினைவில் வைத்திருப்போமாக.

ஆனால், நம் சென்ற வாரத்திய இதழில்* காட்ட முயன்றோம்: இந்த நாட்டின் மாபெரும் உற்பத்தி அமைப்பு முறையை முதலாளி வர்க்கத்தால் நிர்வகிக்க முடியாமலும் போய்விட்டது; ஒரு புறத்தில், அவ்வப்பொழுது எல்லாச் சந்தைகளையும் சரக்குகளின் வெள்ளத்தில் மூழ்கடிப்பதற்காக அவர்கள் உற்பத்தியை விரிவாக்கினார்கள், மற்றும் மறுபுறத்தில் மேன்மேலும் வெளிநாட்டுப் போட்டிக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் போயினர், என்று. எனவே, நாட்டின் மாபெரும் தொழில்களில் முதலாளி வர்க்கத்தின் குறுக்கீடு இல்லாமலே நம்மால் மிக நன்றாக நிர்வகிக்க முடியும் என்பது மட்டுமல்ல, அவர்களின் குறுக்கீடு மேன்மேலும் ஒரு தீமையாகி வருகிறது, என்று பார்க்கிறோம்.

மீண்டும் அவர்களுக்குச் சொல்கிறோம்: ''விலகி நில்லுங்கள்! தொழிலாளி வர்க்கத்தின் முறைக்கு ஒரு வாய்ப்பு அளியுங்கள்.''

*1881, ஆகஸ்ட் 1—2*
*எழுதப்பட்டது*
*1881, ஆகஸ்ட் 6,*
*The Labour Standard, இதழ் 14ல்*
*தலையங்கமாக வெளி வந்தது*

* இப்பதிப்பின் 62-67 பக்கங்கள் பார்க்க.—(ப-ர்.)

# குறிப்புகள்

[1] *The Labour Standard* பத்திரிகைக்கு எங்கெல்ஸ் எழுதிய கட்டுரைத் தொடரில் இது முதலாவது. அப்பத்திரிகைக்கு 1881 மே முதல் ஆகஸ்டு வரை எழுதிக் கொண்டிருந்தார். அவர் பெயர் தாங்காமலே கட்டுரைகள் அநேகமாக வாராவாரம் தலையங்கங்களாக வெளியாயின. அப்பத்திரிகையின் பொதுவான சந்தர்ப்பவாதப் போக்கின் காரணமாக எங்கெல்ஸ் அத்துடன் ஒத்துழைப்பதை நிறுத்திவிட்டார்.

*The Labour Standard* (''உழைப்புக் கொடி'')—பிரிட்டிஷ் தொழிற்சங்க வாரப் பத்திரிகை; 1881 முதல் 1885 வரை லண்டனிலிருந்து வெளிவந்தது; ஆசிரியர் ஜே. ஷிப்டன்.—5.

[2] எல்லா வகையான தொழிலாளர் அமைப்புகளை உருவாக்குவதையும் அவற்றின் நடவடிக்கைகளையும் தடை செய்த **சங்கச் சட்டங்கள்** (Combination Laws) 1824ல் ரத்துச் செய்யப்பட்டதை இது குறிப்பிடுகிறது. அனுல் ஒராண்டு கழித்து, 1825ல், நிறைவேற்றப்பட்ட தொழிலாளி வர்க்க சங்கங்கள் பற்றியச் சட்டம் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளைப் பெரிதும் வரம்பிட்டுத் தடுத்தன.—5.

[3] **சார்டிஸ்டு இயக்கம்** — இங்கிலாந்தில் 19ம் நூற்றுண்டின் 30-40களில் தலைதூக்கிய, உலக வரலாற்றிலேயே முதன் முதலான தொழிலாளி வர்க்கப் புரட்சி இயக்கமாகும். இவ்வியக்கத்தில் பங்குகொண்டவர்கள் மக்கள் உரிமைச் சாஸனத்தை (Charter என்றுல் சாஸனம்; இச்சொல்லிலிருந்து உதித்ததே ''சார்டிஸம்'') பிரகடனம் செய்தனர். எல்லோருக்கும் வோட்டுரிமை, நாடாளுமன்ற வேட்பாளர்களுக்கு நிலச் சொத்து இருக்க வேண்டும் என்கிற தகுதி முறையை ஒழிப்பது, இன்னும் இது போன்ற மற்ற கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

சாஸனம் வெளியிடப்பட்டபின் பல ஆண்டுகளாகப் பொதுக்கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் முடிவின்றி நடந்து வந்தன. லட்சக் கணக்கான தொழிலாளிகளும் கைநெசவாளர்களும் இவற்றில் கலந்துகொண்டனர்.

சார்டிஸ்டு இயக்கத்தின் தோல்விக்கு முக்கியக் காரணம் ஒத்திசைந்த புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தலைமையும் தெளிவான செயல்திட்டமும் இல்லாமை ஆகும் —5.

4 வேலைவிடுதி—ஏழைகளுக்கான தனி புகலிடம். இங்கிலாந்தில் 1839ல் புகுத்தப்பெற்ற ஏழைகள் பற்றிய சட்டங்கள்படி இவை செயற்படுத்தப்பட்டன. அரசாங்கத்தின் உதவியைக் கோரிய ஏழைகள் வேலைவிடுதிகளில் வைக்கப்பட்டனர். இவை சிறைச்சாலைகள் போல் இருந்தன. ஏழைகள் அங்கே கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது.—8.

5 *Court of Chancery* — பிரிட்டிஷ் உயர்நீதி மன்றங்களில் ஒன்று. 1873ன் சீர்திருத்தத்திற்குப் பின் அது உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவாக ஆயிற்று. —10.

6 அயர்லாந்து நிலப்பிரபுக்கள் தமது குத்தகைதார்கள் விஷயத்தில் அராஜகத்தனமாக நடந்து கொள்வதை வரம்பிட்டுக் குறுக்குவிட கிளாட்ஸ்டன் அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் கோபத்துடன் எதிர்த்தனர். அரசாங்கத்தின் நோக்கம், அயர்லாந்தில் அக்காலத்தில் வளர்ந்து வந்த புரட்சி இயக்கத்திலிருந்து அயர்லாந்து விவசாய மக்களின் கவனத்தைத் திசை திருப்பிவிடுவதாகும். குத்தகைதார்கள் தங்கள் வாடகையைக் காலாகாலத்தில் செலுத்தினுல் அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றும் நிலப்பிரபுக்களின் உரிமைகளுக்கு 1881 அயர்லாந்து நில மசோதா வரம்பிட்டது. வாடகைத் தொகை முன்கூட்டியே 15 ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்டது. நிலப்பிரபுக்கள் தங்கள் நிலங்களை அரசுக்கு இலாபகரமாக விற்க முடிந்தபோதிலும், வாடகை பெருந்தொகையில் நிர்ணயிக்கப்பட்டபோதிலும், ஆங்கிலேய நிலப்பிரபுக்கள் அயர்லாந்தில் தங்களுடைய வரம்பற்ற ஆதிக்கத்தை நீடித்து வைத்திருக்க முயன்று அந்த மசோதாவை எதிர்த்தனர்.—19.

7 மக்கள் உரிமைச் சாஸனம் (Peoples' Charter) — இதிலிருந்து சார்டிஸ்டு இயக்கம் என்று பெயர் வந்தது.

இந்தச் சாஸனத்தில் சார்டிஸ்டுகளின் கோரிக்கைகள் உருப்பெற்றன. இது நாட்டாளுமன்ற மசோதாவாக 1838 மே 8ல் வெளியிடப்பட்டது. அதன் ஆறு அம்சங்களாவன: எல்லோருக்கும் (21 வயது கடந்த எல்லாண்களுக்கும்) வாக்குரிமை, வருடாந்தர நாடாளுமன்றத் தெர்தல்கள், இரகசிய வாக்குப் பதிவு, சமமான தேர்தல் தொகுதிகள், நாடாளுமன்ற வேட்பாளர்களுக்குள்ள சொத்துத் தகுதிகளை ஒழித்தல், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம். சாஸனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரும் சாஸன விண்ணப்பங்களை 1839, 1842, 1849ல் ஆண்டுகளில் நாடாளுமன்றம் நிராகரித்துவிட்டது.—22.

8 விக்குகள், டோரிகள்—பிரிட்டிஷ் அரசியல் கட்சிகள். இவை 17ம் நூற்ருண்டின் 70-80களில் நிறுவப் பெற்றவை. விக்கு கட்சி நிதிமூலதன வர்க்கங்களின், வர்த்தக மூலதன வர்க்கங்களின், முதலாளிகளாக மாறிய நிலப்பிரபுக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. விக்கு கட்சி லிபரல் கட்சிக்கு வித்தாகியது. டோரி கட்சி பெரும் நிலப்பிரபுக்களுக்கும் மதக் குருக்களின் உயர்குடி மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வகித்தது. அது நிலப்பிரபுத்துவ மரபுகளைப் பலப்படுத்தி, மிதவாத, முற்போக்கான கோரிக்கைகளை எதிர்த்தது. பிற்காலத்தில் அது கன்ஸர்வேடிவ் கட்சிக்கு வித்தாகியது. விக்கு கட்சியும் டோரி கட்சியும் மாறி மாறி ஆட்சிக்கு வந்தன.—23.

9 டிஸ்ரேலி போட்ட வீட்டுக் குடியிருப்பாளர் வாக்குரிமைச் சட்டம் — மக்களின் நிர்ப்பந்தத்தால் 1867ல் கன்ஸர்வேடிவ்கள் நிறைவேற்றிய தேர்தல் சீர்திருத்தம். 1867ம் ஆண்டுச் சீர்திருத்தத்தின் விளைவாக இங்கிலாந்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை இரு மடங்குக்கு மேல் அதிகரித்தது. தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் குறித்த பகுதியினரும் வாக்குரிமை பெற்றனர். —23.

10 மாஞ்செஸ்டர் கருத்துப் பிரிவினர் அல்லது சுயேச்சை வாணிபக் கருத்துப் பிரிவினர்—தொழில்துறை முதலாளி வர்க்கத்தினரின் நலன்களைப் பிரதிபலித்து பொருளாதார இயலில் தோன்றிய ஒரு போக்கு. அதன் ஆதரவாளர்கள் சுயேச்சையான வாணிபத்தையும், பொருளாதார வாழ்க்கையில் அரசு குறுக்கிடாமையையும் எடுத்துப் பேசினர். மாஞ்செஸ்டரை மையமாகக் கொண்டிருந்த சுயேச்சை வாணிபவாதிகளுக்கு காப்டென், பிரைட் என்கிற இரண்டு பருத்தித்

தொழில் முதலாளிகள் தலைவர்கள். 1840-1850களில் சுயேச்சை வாணிபவாதிகள் தனி அரசியல் குழு அமைத்தனர், பின்னுல் லிபரல் கட்சியில் இணைந்தனர். —27.

11 பிரிட்டிஷ் கிழக்கு இந்தியக் கம்பெனி கலைக்கப்பட்ட பின் 1858ல் இந்தியா நேரடியாகப் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தது.—27.

12 பெரிய நிலப்பிரபுக்களின் நலன்களுக்குச் சாதகமாகத் தானிய இறக்குமதி மீது தடை அல்லது வரம்பு இடுவது தானியச் சட்டங்களின் நோக்கம். தொழில் முதலாளிகளுக்கும் பெரிய நிலப்பிரபுக்களுக்கும் இடையே போராட்டம் நடந்து, 1846ல் தானியச் சட்டங்களை ரத்து செய்வதை ஏற்கும் மசோதாக்களை நாடாளுமன்றம் நிறைவேற்றியபின் முடிவுற்றது. இந்த நடவடிக்கையின் மூலமாக விலை வாசிகள் சற்றுக் குறைந்தன, அது கூலிக் குறைப்புக்கும் முதலாளி வர்க்கத்தின் அதிகரித்த இலாபத்துக்கும் கொண்டுபோய்விட்டது. —29.

13 தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்தை மாஞ்செஸ்டர் முதலாளிகளான காப்டென், பிரைட் ஆகியோர் 1838ல் நிறுவினர். வாணிபத்தில் முழு சுயேச்சை வேண்டும், தானியச் சட்டங்களை ரத்துச் செய்ய வேண்டும் என்று இச்சங்கம் கோரியது. இதன் நோக்கம், கூலியைக் குறைப்பது, அதே நேரத்தில் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தாரின் பொருளாதார, அரசியல் நிலைகளைப் பலவீனப்படுத்துவது. தொழிலாளிகளும் முதலாளிகளும் ஒன்று என்கிற தன்னுடைய வாய்வீச்சுப் பிரச்சாரத்தில் சுயேச்சை வாணிபம் என்கிற கோஷத்தை இச்சங்கம் பரவலாகப் பயன்படுத்தியது. 1846ல் தானியச் சட்டங்கள் ரத்தானபின் இச்சங்கம் மறைந்து விட்டது.—29.

14 குறிப்பு 6 பார்க்க.—54.

15 தனிப்பட்ட சோஷலிஸ்டு எதிர்ப்புச் சட்டம் 1878ல் ஜெர்மனியில் பிஸ்மார்க் அரசாங்கம் புகுத்தியது. இதன் குறிக்கோள் தொழிலாளர் இயக்கத்தையும் சோஷலிஸ்டு இயக்கத்தையும் எதிர்ப்பதாகும். அதன்படி எல்லாச் சமூக-ஜனநாயகவாத அமைப்புகளும், தொழிலாளர் அமைப்புகளும், தொழிலாளர் பத்திரிகைகளும் தடை செய்யப்பட்டன; சோஷலிஸ்டுப் பிரசுரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன; சமூக-ஜனநாயகவாதிகள் எல்லா விதமான துன்புறுத்தல்களுக்கும் இலக்

காயினர், நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். தொழிலாளர்களின் நிர்ப்பந்தத்தால் 1890ல் இச்சட்டம் ரத்துச்செய்யப்பட்டது.—57.

16 1881 ஆகஸ்டில் சட்டமாக்கப்பட்ட நில மசோதாவைப் புகுத்தியதை அயர்லாந்து குத்தகைச் சாகுபடியாளர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். அயர்லாந்து துறை அமைச்சர் ஃபோர்ஸ்டர் விசேஷ நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார், வாடகை செலுத்த மறுத்த குத்தகைதார்களை நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்குத் துருப்புகளை அனுப்பினர்.—57.

17 அயர்லாந்தின் புரட்சி இயக்கத்தையும் தேசிய விடுதலை இயக்கத்தையும் நசுக்கும் பொருட்டு 19ம் நூற்றுண்டில் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் சில சமயம் அடக்குமுறைச் சட்டங்களைச் செயற்படுத்தியது. இச்சட்டங்கள் ஆங்கிலேய அதிகாரிகளுக்குத் தனி அதிகாரங்கள் வழங்கியதால் அயர்லாந்தில் எங்கு வேண்டுமாயினும் இராணுவச் சட்டத்தைப் பிறப்பிப்பதற்கு இடமளித்தது. —58.

18 **அயர்லாந்து நிலச் சங்கம்** சிறுமுதலாளித்துவ ஜனநாயகவாதியான மைக்கேல் டேவித் என்பவர் 1879ல் நிறுவிய வெகுஜன அமைப்பு. அயர்லாந்து விவசாயி மக்களில் பெரும் பகுதியினரும் நகரப்புறத்து ஏழை மக்களும் இதில் இருந்தனர். அயர்லாந்து முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த முற்போக்காளர்களும் இதை ஆதரித்தனர். நிலப்பிரபுக்களின் ஒடுக்குமுறையையும் தேசிய ஒடுக்குமுறையையும் எதிர்த்து அயர்லாந்து மக்கள் கிளப்பிய கடுமையான கண்டனங்களை இச்சங்கத்தின் நிலக் கோரிக்கைகள் பிரதிபலித்தன. என்ற போதிலும், சங்கத் தலைவர்கள் ஊசலாட்டமான நிலை எடுத்தனர்; அதை முதலாளித்துவ தேசியவாதிகள் (பார்னெல் முதலானேர்)பயன்படுத்திக் கொண்டு, சுயாட்சிக்கான—அதாவது, பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்குள் இருந்தபடியே வரம்புள்ள அயர்லாந்து சுயாட்சி பெறுவதற்கான—போராட்டத்தோடு இச்சங்கத்தின் நடவடிக்கைகளைக் குறுக்கிவிட முயன்றனர். 1881ல் இச்சங்கம் தடைசெய்யப்பட்ட போதிலும் 1880களின் முடிவு வரை வேலை செய்து கொண்டிருந்தது. —60.

19 1831ல் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையால் நிறைவேற்றப்பட்டு 1832 ஜூனில் லார்ட்ஸ் சபையால் உறுதிப்படுத்தப்பட்ட தேர்தல் சீர்திருத்தத்தை இது குறிப்பிடுகிறது. நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் நிதித்துறை பிரபு

வர்க்கங்களின் அரசியல் ஏகபோகத்தை எதிர்க்கும் நோக்குள்ளது இந்தச் சீர்திருத்தம். தொழில் முதலாளி வர்க்கத்தினர் நாடாளுமன்றத்தில் நுழைவதற்கு வழி திறந்து வைத்தது. சீர்திருத்தத்துக்கான போராட்டத்தில் முக்கியமான சக்திகளாக விளங்கிய தொழிலாளி வர்க்கத்தையும் சிறு முதலாளி வர்க்கத்தையும் மிதவாத முதலாளி வர்க்கம் ஏமாற்றிவிட்டது. அவர்களுக்கு வாக்குரிமை கிடைக்கவில்லை.—69.

# பெயர் பட்டியல்

**இல்லிங்வொர்த், ஆல்ஃபிரெட்** (Illingworth) — *பிரிட்டிஷ் லிபரல், 1881ல் நாடாளுமன்ற உறுப்பினர்.—26.*

**எங்கெல், எர்ன்ஸ்ட்** (Engel) *(1821-1896)—ஜெர்மன் புள்ளியியலாளர், பெர்லின் பிரஷ்யப் புள்ளியியல் வாரியத்தின் தலைவர் (1860-1882).—65.*

**காப்டென், ரிச்சர்ட்** (Cobden) *(1804-1865) — பிரிட்டிஷ் முதலாளித்துவப் பொருளாதாரவாதி, லிபரல் கட்சியினர், சுயேச்சை வாணிபவாதி, தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்தை நிறுவியவர்.—45-50,64.*

**கார்லைல், தாமஸ்** (Carlyle) *(1795-1881) — பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ் எழுத்தாளர், தத்துவஞானி.—64.*

**கிளாட்ஸ்டன், வில்லியம்** (Gladstone) *(1809-1898) — பிரிட்டிஷ் அரசுக்கலைஞர், 19ம் நூற்றுண்டின் பிற்பாதியில் லிபரல் கட்சியின் தலைவர்.—27,61.*

**டில்க், சார்லஸ்** (Dilke) *(1843-1911) — பிரிட்டிஷ் அரசுக்கலைஞர், லிபரல், அமைச்சர் (1880-1885). —26.*

**டில்லான், ஜான்** (Dillon) *(1851-1927)—அயர்லாந்தின் தேசியவாதி, சுயாட்சி இயக்கத் தலைவர்களில் ஒருவர், 1880களில் அடிக்கடி சிறையில் வைக்கப்பட்டவர். —59.*

**டிஸ்ரேலி, பெஞ்சமின்** (Disraeli) *(பீகன்ஸ்ஃபீல்ட் பிரபு) (1804-1881)—பிரிட்டிஷ் அரசுக்கலைஞர், எழுத்தாளர், கன்ஸர்வேடிவ் கட்சித் தலைவர்.—23.*

**தாம்ப்ஸன், தாமஸ் பெரொனெட்** (Thompson) *(1783-1869)—பிரிட்டிஷ் லிபரல், சுயேச்சை வாணிபவாதிகளின் தலைவர்களில் ஒருவர்.—50.*

நெப்போலியன், மூன்றும் *(லுயீ போனப்பார்த்)* (Napoleon III) *(1808-1873)—பிரெஞ்சுப் பேரரசர் (1852-1870).—64.*

நோபிள், ஜான் (Noble) *(1827-1892)—பிரிட்டிஷ் பொது விவகார எழுத்தாளர், தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்தின் ஆதரவாளர்.—45-50.*

பால்ஃபர், ஆர்தர் ஜேம்ஸ் (Balfour) *(1848-1930)—பிரிட்டிஷ் அரசுக்கலேஞர், கன்ஸர்வேடிவ் கட்சித் தலைவர்.—26.*

பிரைட், ஜான் (Bright) *(1811-1889)—பிரிட்டிஷ் லிபரல் கட்சியினர், சுயேச்சை வாணிபவாதி; காப்டெனுடன் சேர்ந்து தானியச் சட்ட எதிர்ப்புச் சங்கத்துக்குத் தலைமை வகித்தார்.—50,64.*

பிஸ்மார்க், ஆட்டோ (Bismarck) *(1815-1898)—1862 முதல் பிரஷ்ய அரசாங்கத்தின் பிரதமர்; ஜெர்மன் பேரரசின் முதல் பிரதமர் (1871-1890); பிரஷ்ய ஐங்கர் நிலப்பிரபுக்களின் பிரதிநிதி.—31,53,57-61.*

பேபெல், ஒகுஸ்த் (Bebel) *(1840-1913)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் நிறுவகர்களில், முக்கியப் பிரமுகர்களில் ஒருவர்.—61.*

ஃபோர்ஸ்டர், வில்லியம் எட்வர்ட் (Forster) *(1818-1886)—பிரிட்டிஷ் லிபரல், 1880லிருந்து அயர்லாந்து துறைக்கு அமைச்சர்.—57,60,61.*

மாக்-ஐவெர் (Mac Iver)—*பிர்கென்ஹெட் தொகுதிக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் (1881).—26.*

மொங்க், சார்லஸ் ஜே. (Monck) *(1824ல் பிறப்பு)—பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர், லிபரல்-யூனியனிஸ்ட்.—26.*

ரிக்கார்டோ, டேவிட் (Ricardo) *(1772-1823)—பிரிட்டிஷ் பொருளாதாரவாதி, மூலச்சிறப்புள்ள முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் மிக முக்கியமான பிரதிநிதி.—15.*

ஸ்லாக் (Slagg)—*மாஞ்செஸ்டர் தொகுதிக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் (1881).—26.*

## வாசக நேயர்களுக்கு

*இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை* **முன்னேற்றப் பதிப்பகம்** *மகிழ்வுடன் வரவேற்கும்.*

*கடிதங்களைத் தயை செய்து* “Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR” *என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.*

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
6, Nallathambi Chetty Street, Madras-2

ஷோ-ரூம்
6/30, Mount Road, Madras-600002

கிளைகள்
80, West Tower St., Madurai-1
87/89, Oppanakara St., Coimbatore-1
Singarathope, Tiruchirapalli-8
Cherry Road, Salem-1

**Ф. Энгельс**

СИСТЕМА НАЕМНОГО ТРУДА
*(на языке тамили)*